

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம்-ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளா

திருவாய் மலர்ந்தருளிய

திருவருட்பாவின்

நிரதிசயாநந்தத் திரட்டு

இது

சென்னை, பெரம்பூர் ஒர்க்ஷாப்பு காஷியராகிய

ஸ்ரீமான் மா. சீதாராம் நாயுடு அவர்கள்

வேண்டுகோளின்படி

சாதுக்களால் திரட்டப்பட்டு

வியாசர்பாடி ஆநந்தாஸ்ரமம்

ஸ்ரீ மூர்த்தி சுவாமிகளால்,

சென்னை,

சிவாகசியம் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1916.

Price As. 3.] [விலை அணா 3.

Outer Cover Printed by "Waverley Press."

இறையருள் வேண்டல்.

இன்றருவரு மோமனத்தேக் கேவருமோ வல்லதுமத்
தென்றருவரு மோவறியே னெக்கோவே-நின்றுமல
வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா விருக்குஞ் சுகம். (1)

அருட்பாட்டிறன் கூறல்.

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கட
முன்னீர் சிவம்விளங்க வோங்குவிக்கும்-கண்மணியா
கங்கள் இராமலிங்க னல்லருட் பாமுறையைத்
துங்கமுற மாறு தொழு. (2)

ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் துதி.

பராபரங் கோதகலு மானமயம் போதநிலை பகாசகலம்
வாதமறு சுகோதயம் பாதிதமி,
னிராமயங் காரகம நிலாதசஞ் சிவிதக னிராசை
கொண் டாருடைய விகேதனஞ் சூதமுறல்,
வராதவின் பாரவெண முனனில்வக் தேயருனி
மகாபலஞ் சேரவருள் விராவுசெம் பாதகம,
விராமலிக் தார்மனதி னிராதசக் தோடகம
இராமலிங்காயகம விராமலிங்காயகம. (3)



திருவருட்பிரகாசவள்ளலார்

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா.

நிரதிசயாநந்தத் திரட்டு.

சித்திவிநாயகர் துதி.

உள்ளமு முயிரு முணர்ச்சியு முடம்பு முறுபொருள் யாவுநின் றனக்கே
கள்ளமுங் கரிசு நினைந்திடா துகவிக் கழலிணை நினைந்துநின் கருணை
வெள்ளமுண் டிரவு பகலறி யாதவீட் டினி லிருந்துநின் னோடும்
விள்ளலில் லாமற் கலப்பனோ சித்தி விநாயக விக்கினேச் சுரனே.

நாதமுங் கடந்து நிறைந்துநின் மயமே யானென வறிந்துநான் றானும்
பேதமுங் கடந்த மௌனரா ச்சியத்தை யப் பேதையேன் பிடிப்ப தென்
[றோ.
வேதமுஞ் சமய வாதமும் விடுத்தோ ரிதயமு மேழையேன் சிரமும்
வேதமுந் தாங்கும் பாதனே சித்தி விநாயக விக்கினேச் சுரனே.

சச்சிதா னந்த வடிவமாம் வடிவந் தருமதிட் டானமற் றிரண்டும்
பொய்ச்சிதா பாசக் கற்பனை யிவற்றைப் போக்கியங் கவ்வடி வாகி
யச்சிதாகார போதமு மதன்மே லானந்த போதமும் விடுத்தல்
மெய்ச்சிதாம் வீடென் றுரைத்தனை சித்தி விநாயக விக்கினேச் சுர
[னே.

ஒன்றல விரண்டு மலவிரண் டொன்றே யுருவல வருவல வுவட்ட
நன்றல நன்றல்லா தலவிந்து நாதமு மலவிவை யனைத்தும்

பொன்றலென் றறிந்தட் புரத்தினுமகண்ட பூரணமாஞ் சிவமொன்றே
வென்றலென் றறிநீயென் றனை சித்திவிநாயக விக்கினேச்சுரனே.

கானனீர்விழைந்த மானெனவுலகக் கட்டினைக் கட்டொழன் றலையு
மீனவஞ்சக நெஞ்சகப்புலையேனை யென்றுகொண் டருளு நாளுளதோ
வூனமொன் றில்லா வுத்தமருளத்தே யோங்குசீர்ப் பிரணவவொளியே
வேணவில்கரத்தோர்க் கினியவா சித்திவிநாயக விக்கினேச்சுரனே.

திருவடிப் புகழ்ச்சி.

நூற்றிருபத்தெட்டடியான் மிகுத்துவந்த
கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பரசிவஞ் சின்மயம் பூரணஞ் சிவபோக பாக்கியம் பரமநிதியம்
பரசுகந் தன்மயஞ் சச்சிதானந்தமெய்ப் பரமவே காந்த நிலயம்
பரமஞா னம்பரம தத்துவ மகத்துவம் பரமகை வல்ய நிமலம்
பரமதத் துவநிரதி சயநிட்களம்பூத பௌதிகாதார நிபுணம்
பவபந்த நிக்ரக விநோத சகளஞ்சிற் பரம்பரானந்த சொரூபம்
பரிசயா தீதஞ்சு யஞ்சதோ சுயம்வரம் பரமார்த்த முத்தமௌனம்
படனவே தாந்தாந்த மாகமாந் தாந்தநிரு பாதிகம் பரமசாந்தம்
பராநாத தத்துவாந் தஞ்சகச தரிசனம் பகிரங்க மந்தரங்கம்
பரவியோ மம்பரம ஜோதிமயம் விபுலம் பரம்பர மனந்தமசலம்
பரமலோ காதிக்க நித்தியசாம் பிராச்சியம் பரபதம் பரமசூக்ஷமம்
பூர்பர மனாமய நிராதர மகோசரம் பரமதந் திரம்விசித்திரம்
பராமுத நிராகரம் விகாசனம் விகோடணம் பரசுகோ தயமக்ஷயம்
பரிப்லு விமோசனம் குணாரகிதம் விசுவம்பதித்துவ பரோபரீணம்
பஞ்சகிர்த் தியசுத்த கர்த்தது வந்தற்ப ரஞ்சிதம் பரவிலாசம்
பகர்சுபா வம்புனித மதுலமது லிதமம்ப ராம்பர நிராலம்பனம்.

பரவுசா க்ஷாத்கார நிரவயவங் கற்பனாதீத நிருவிகாரம்
பரதுரிய வநுபவங் குருதுரிய பதமம் பகம்பகா தீதவிமலம்
பரமகரு ணைம்பரந் தற்பதங் கனசொற் பதாதீத மின்பவடிவம்
பரோக்ஷஞா னாதீத மபரோக்ஷ ஞானானு பவவிலாசப் பிரகாசம்
பாவனா தீதங்கு ணாதீத முபசாந்த பதமகா மௌனரூபம்
பரமபோ தம்போத ரகிதசகி தஞ்சம்ப வாதீத மப்பிரமேயம்
பகரனந் தானந்த மமலமூசி தஞ்சிற்ப தஞ்சதா னந்தசாரம்
பரையாதி கிரணங்க சாங்கசௌ பாங்கவிம் பாகாரநிருவிகற்பம்
பரசுகா ரம்பம்ப ரம்பிரம வித்தம்ப ரானந்த புரணபோகம்
பரிமிதா தீதம்ப ரோதயம் பரகிதம் பரபரீணம் பராந்தம்
பரமார்ப்பு தம்பரம சேதனம் பசுபாச பாவனம் பரமமோக்ஷம்
பரமானு குணநவா தீதஞ்சி தாகாச பாஸ்கரம் பரமபோகம்
பரிபாக வேதனவ ரோதயா னந்தபத பாலனம் பரமயோகம்
பரமசாத் தியவதீ தாநந்த போக்கியம் பரிகதம் பரிவேத்தியம்
பரகேவ லாத்விதா நந்தானு பவசந்த பாதாக்ர சுத்தபலிதம்
பரமசுத் தாத்விதா நந்தவனு பூதிகம் பரிபூத சிற்குணாந்தம்
பரம சித்தாந்தநிக மாந்தசம ரசசுத்தப ரமானு பவவிலாசம். (வ)

தரமிகுஞ் சர்வசா திட்டான சத்தியஞ் சர்வவா னந்தபோகம்
சார்ந்தசர் வாதார சர்வமங் களசர்வ சத்திநா மென்றனவிலாச்
சகுணநிர்க் குணமுறு சலட்சண விலட்சணத் தன்மைபல வாகநாடித்
தம்மைநிகர் மறையெலா மின்றுமன விடநின்ற சங்கர னாதியாதி
சாமகீ தப்பிரியன் மணிகண்ட சீகண்ட சசிகண்ட சாமகண்ட
சயசய வெனுந்தொண்ட ரிதயமலர் மேவிய சடாமகுடன் மதனதகன
சந்திரசே கரனிடப வாகனன் கங்கா தரன்சூல பாணியிறைவன் [ன்
தனிமுத லுமாபதி புராந்தகன் பசுபதி சயம்புமா தேவனமலன்
தாண்டவன் றலைமாலை பூண்டவன் றொழுமன்பர் தங்களுக் கருணா
[ண்டவன்

தன்னிகரில் சித்தெலாம் வல்லவன் வடதிசைச் சைலமெனு மொரு
[வில்லவன்
தக்ஷணா மூர்த்தியருண் மூர்த்திபுண் ணியமூர்த்தி தருமட்ட மூர்த்தி
[யானோன்
தலைமைபெறு கணநாயகன் குழகனழகன்மெய்ச் சாம்பதேவதேவன்
சம்புவே தண்டன் பிறப்பிலான் முடிவிலான் முனு முக் கண்களு
[டையான்
சதுரன் கடாசல வுரிப்போர்வை யான்செங் கழற்கரத் தேந்திநின்
[றோன்
சர்வகா ரணன்விறற் காலகாலன் சர்வ சம்பிரமன் சர்வேச்சுரன்
தகைகொள்பர மேச்சுரன் சிவபிரா னெம்பிரான் றம்பிரான் செம்
[பொற்பதம்
தகவுபெறு நிட்பேத நிட்கம்ப மாம்பரா சத்திவடி வாம் பொற்பதம்
தக்கநிட் காடிந்யசம் வேதநாங்கசித் சத்திவடிவாம் பொற்பதம்
சாற்றரிய விச்சை ஞானங்கிரியை யென்று முச்சத்திவடிவாம் பொற்
[பதம்
தடையிலா நிர்விடய சிற்குண சிவாநந்த சத்திவடிவாம் பொற்பதம்
தருவிந்தை மோகினியை மாயையைச விக்குமொரு சத்திவடிவாம்
[பொற்பதம்
தாழ்விலீ சானமுதன் மூர்த்திவரையுஞ் சத்திதஞ்சத்தியாம் பொற்
[பதம்
சவிகற்ப நிருவிகற் பம்பெறு மனந்தமா சத்திசத்தாம் பொற்பதம்
தடநிருப வவிவர்த்த சாமர்த்திய திருவருட் சத்தியுருவாம் பொற்பதம்
தவாதசாந் தப்பதந் துவாதசாந் தப்பதந் தருமிணை மலர்ப்பூம் பதம்
சகலர்விஞ் ஞானகலர் பிரளயா கலரிதய சாக்ஷியா கியபூம்பதம்
தணிவிலா வனுபக்ஷ சம்புபக்ஷங் களிற்சமரச முறும் பூம்பதம்
திருபரஞ் சூக்குமந் தூலமிவை நிலவிய தமக்குளுயி ராம்பூம்பதம்
சராசர வபரிமித விவிதவான் மப்பகுதி தாங்குந் திருப்பூம்பதம்

தண்டபின் டாண்டவகி லாண்டபிர மாண்டந் தடிக்கவறு ளும்பூம்
[பதம்
தத்வதாத் விகசகசி ருட்டிதிதி சங்கார சகலகர்த் தருபூம்பதம்
சகசமல விருளகல நின்மலசு யம்ப்ரகா சங்குலவு றற்பூம்பதம். (௭)

மரபுறு மதாதீத வெளிகடவி லாகங்க மாநடன மிடிபூம்பதம்
மன்னும்வினை யொப்புமல பரிபாகம் வாய்க்கமா மாயையை மிதிக்கும்
[பதம்
மலிபிறவி மறவியினழுந்துமுயிர் தமையருளின் மருவுறவெடுக்கும்
[பதம்
வளருர்த்த வீரதாண் டவமுதற் பஞ்சக மகிழ்ந்திட வியற்றும் பதம்
வல்லமுய லகன்மீதி லூன்றிய திருப்பதம் வளர்ந்தரத் தூக்கும்பதம்
வல்வினையெ லாந்தவிர்த் தழியாத சுத்தநிலை வாய்த்திட வழங்கும்பதம்
மறைதுதிக் கும்பத மறைச்சிலம் பொளிர்பத மறைப்பாது கைச்செம்
[பதம்
மறைமுடி மணிப்பத மறைக்குமெட் டாப்பத மறைப்பரி யுகைக்கும்
[பதம்
மறையவ னுளங்கொண்ட பதமமித கோடியா மறையவர் சிரஞ்சூழ்
[பதம்
மறையவன் சிரசிகா மணியெனும் பதமலர்கொண் மறையவன் வாழ்த்
[தும்பதம்
மறையவன் செயவுலக மாக்கின்ற வதிகார வாழ்வையீந் தருளும்பதம்
மறையவன் கனவினுங் காணாத பதமந்த மறையவன் பரவும்பதம்
மால்விடை யிவர்ந்திடு மலர்ப்பதந் தெய்வநெடு மாலருச் சிக்கும்பதம்
மால்பரம் காடொறும் வணங்குபத மிக்கதிரு மால்விழியி லங்கும்பதம்
மாறேட லின்றபத மோரனந் தங்கோடி மாற்றலை யலங்கற்பதம்
மான்முடிப் பதநெடிய மாலுளப் பதமந்த மாலுமறி வரிதாம்பதம்
மால்கொளவ தாரங்கள் பத்தினும் வழிபட்டு வாய்மைபெற நிற்கும்
[பதம்

மாலுலகு காக்கின்ற வண்மைபெற் றடிமையின் வதிந்திட வளிக்கும் [பதம்
வரையுறு முருத்திரர்கள் புகழ்பதம் பலகோடி வயவுருத்திரர்சூழ்பதம்
வாய்ந்திடு முருத்திரற் கியல்கொண்முத் தொழில்செய்யும் வண்மைதந் [தருளும்பதம்
வாணவிந் திராதி யெண்டிசைக் காவலர்கண் மாதவத் திறனும்பதம்
மதிமிரவி யாதிசுர ரசுரரந் தரர்வான வாசிகள் வழுத்தும்பதம்
மணியுரகர் கருடர்கார் தருவர்விஞ் சையர்சித்தர் மாமுனிவ ரேத்தும் [பதம்
மாநிருதர் பைசாசர் கிம்புருடர் யக்ஷர்கள் மகிழ்ந்துவர மேற்கும்பதம்
மன்றலின் னரர்பூதர் வித்தியா தரர்போகர் மற்றையர்கள் பற்றும் [பதம்
வண்மைபெறு நந்திமுதல் சிவகணத் தலைவர்கண் மனக்கோயில் வா [ழும்பதம்
மாதேவி யெக்கண்மலை மங்கையென் னம்மைமென் மலர்க்கையால் [வருடும்பதம்
மறலியை யுதைத்தருள் கழற்பத மரக்கனை மலைக்கீ ழடர்க்கும்பதம்
வஞ்சமறு நெஞ்சினிடை யெஞ்சலற விஞ்சுதிறன் மஞ்சுற விளங்கும் [பதம்
வந்தனைசெய் புந்தியவர் தந்துயர் தவிர்ந்திடவுண் மந்தணம விற்றும் [பதம்
மாறிலொரு மாறனுள மீறின்மகிழ் வீறியிட மாறிநட மாடும்பதம்
மறக்கருணை யுந்தனி யறக்கருணை யுந்தந்து வாழ்விக்கு மொண்மைப் [பதம். (ஐ)

இரவுறும் பகலடிய ரிருமருங் கினுமுறவ ரெனவயங் கியசீர்ப்பதம்
எம்பந்த மறவெமது சம்பந்த வள்ளன்மொழி யியன்மண மணக்கும் [பதம்
ஈவாச ரெம்முடைய நாவரசர் சொற்பதிக விசைபரி மளிக்கும்பதம்
ஏவலார் புகழெமது நாவலா ரூரர்புக லிசைதிருப் பாட்டுப்பதம்

ஏசலூர் தங்காத வாதவூ ரெங்கோவி னின்சொன்மணி யணியும்பதம்
எல்லூரு மணிமாட நல்லூரி லப்பர்முடி யிடைவைகி யருண்மென் [பதம்
எடுமேலெ னத்தொண்டர் முடிமேன் மறுத்திடவு மிடைவலிந் தே [றும்பதம்
எழில்பறவை யிசையவா ரூர்மறுகி னருள்கொண்டி ராமுழுது முல [வும்பதம்
இன்றொண்டர் பசியறக் கச்சூரின் மனைதொறு மிரக்கவடை கொள் [ளும்பதம்
இளைப்புற லறிந்தன்பர் பொதிசோ றருந்தமு னிருந்துபி னடக்கும் [பதம்
எறிவிறகு விற்கவளர் கூடற்றெருத்தொரு மியங்கிய விரக்கப்பதம்
இருவைகையங்கரையின் மண்படப் பல்காலெழுந்துவிளை யாடும்பதம்
எங்கேமெய் யன்பருள ரங்கேநலந்தர வெழுந்தருளும் வண்மைப்பதம்
எவ்வண்ணம் வேண்டுகினு மவ்வண்ண மன்றே யிரங்கியீந் தருளும் [பதம்
என்போன்ற வர்க்குமிது பொன்போன்ற கருணைதந் திதயத் திருக்கு [ம்பதம்
என்னுயிரை யன்னபதமென்னுயிர்க் குயிராயிலங்குசெம் பதுமப்பதம்
என்னறிவெ னும்பதமெனறிவினுக் கறிவா யிருந்தசெங் கமலப்பதம்
என்னன்பெ னும்பதமெ னன்பிற்கு மீத்தா யிசைந்தகோகனகப்பதம்
என்றவ மெனும்பதமென் மெய்த்தவப் பயனா யியைந்தசெஞ் சலசப் [பதம்
என்னிருகண் மணியான பதமென்கண் மணிகளுக் கினியநல் விருந் [தாம்பதம்
என்செல்வ மாம்பதமென் மெய்ச்செல்வ வருவாயெ னுந்தாம ரைப் [பொற்பதம்
என்பெரிய வாழ்வானபதமென் களிப்பா மிரும்பதமென்னிதியாம்பதம்
என்றந்தை தாயெனு மிணைப்பதமெ னுறவா மியற்பதமென் னட்பாம் [பதம்

என்குருவெ னும்பதமெ னிட்டதெய்வப்பத மெனதுகுல தெய்வப் [பதம்
என்பொறிக ளுக்கெலா நல்விடய மாம்பதமெ னெழுமையும் விடாப் [பொற்பதம்
என்குறையெ லாந்தவிர்த் தாட்கொண்ட பதமெனக் கெய்ப்பில்வைப் [பாகும்பதம்
எல்லார்க்கு நல்லபத மெல்லாஞ்செய் வல்லபத மிணையிலாத் துணை [யாம்பதம்
எழுமனமு டைந்துடைந் துருகிநெகிழ் பத்தர்கட் கின்னமுத மாகும் [பதம்
எண்ணுறிற் பாலினறு நெய்யொடு சருக்கரை யிசைந்தெனவினிக் [கும்பதம்
எற்றமுக் கனிபாகு கன்னல்கற் கண்டுதே னென்னமது ரிக்கும்பதம்
எங்கள்பத மெங்கள்பத மென்றுசம யத்தேவ ரிசைவழக் கிடுநற்பதம்
ஈறிலாப் பதமெலாந் தருதிருப் பதமழிவி லின்புதவு கின்றபதமே. (க)

மஹாதேவமாலை.

கருணைநிறைந் தகம்புறமுந் துளும்பிவழிந் துயிர்க்கெல்லாங் களைகணாகித் தெருணிறைந்த வின்பநிலை வளர்க்கின்ற கண்ணுடையோய் சிலைதயா ஞானப் பொருணிறைந்த மறையமுதம் பொழிகின்ற மலர் வாயோய் பொய்யனேன்றன் மருணிறைந்த மனக்கருங்கற் பாறையுமுட் கசிந்துருக்கும் வடிவத்தோயே.

உலகநிலை முழுதாகி யாங்காங் குள்ள வுயிராகி யுயிர்க்குயிரா மொளிதா னாகிக் கலகநிலை யறியாத காட்சி யாகிக் கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி யிலகுசிதா காசமதாய்ப் பரமாகாச வியல்பாகி யிணையொன்று மில்லா தாகி யலகிலறி வானந்தமாகிச் சச்சி தானந்த மயமாகி யமர்ந்த தேவே. (1)

உலகமெலாந் தனிநிறைந்த வுண்மையாகி யோகியர்தம் மநுப
வத்தி னுவப்பா யென்றுங் கலகமுறா வுபசாந்த நிலைய தாகிக் களங்கம
ற்ற வருண்ஞானக் காட்சி யாகி விலகலுறா நிபிடவானந்த மாகி மீதா
னத் தொளிர்கின்ற விளக்க மாகி யிலகுபரா பரமாய்ச்சிற் பரமா யன்ப
ரிதயமலர் மீதிருந்த வின்பத் தேவே (2)

வித்தாகி முளையாகி விளைவ தாகி விளைவிக்கும் பொருளாகி
மேலு மாகிக் கொத்தாகிப் பயனாகிக் கொள்வோ னாகிக் குறைவாகி
நிறைவாகிக் குறைவி லாத சத்தாகிச் சித்தாகி யின்பமாகிச் சதாநி
லையா யெவ்வுயிர்க்குஞ் சாக்ஷி யாகி முத்தாகி மாணிக்க மாகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே (3)

வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின் மெய்யாகிச் சமரசத்தின்
விவேக மாகி நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தி னடுவாகி நவநிலைக்கு
நண்ணு தாகி மூதாண்ட கோடியெல்லாந் தாங்கி நின்ற முதலாகி
மனாதீத முத்தி யாகி வாதாண்ட சமயநெறிக் கமையா தென்று
மௌனவியோ மத்தினிடை வயங்குந் தேவே. (4)

தோன்றுதுவி தாத்துவித மாய்விசிட்டாத் துவிதமாய்க் கேவ
லாத் துவித மாகிச் சான்றசுத்தாத் துவிதமாய்ச் சுத்தந்தோய்ந்த சமர
சாத் துவிதமுமாய்த் தன்னையன்றி யூன்றுநிலை வேறொன்று மிலதா
யென்று முன்னதாய் நிகழிதய வுணர்வா யெவ்வா மீன்றருளுந் தாயா
கித் தந்தையாகி யெழிற்குருவாய்த் தெய்வமதா யிலங்குந் தேவே. (5)

பரமாகிச் சூக்குமமாய்த் தூல மாகிப் பரமார்த்த நிலையாகிப் பதத்
தின் மேலாஞ் சிரமாகித் திருவருளாம் வெளியா யான்ம சிற்சத்தி
யாய்ப் பரையின் செம்மை யாகித் திரமாகித் தற்போத நிவர்த்தி யாகிச்
சிவமாகிச் சிவாநுபவச் செல்வ மாகி யரமாகி யானந்த போத மாகி
யானந்தா தீதமதா யமர்ந்த தேவே. (6)

இந்தியமாய்க் கரணாதி யனைத்து மாகி யியல்புருட னாய்க்கால
பரமுமாகிப் பந்தமற்ற வியோமமாய்ப் பரமா யப்பாற் பரம்பரமாய்
விசுவமுண்ட பான்மை யாகி வந்தவுப சாந்தமதாய் மௌன மாகி
மகாமௌன நிலையாகி யயங்கா நின்ற வந்தமிலொரும் பதமாய்த் தற்
பதமா யொன்று மசிபதமா யதீதமா யமர்ந்த தேவே. (7)

நின்மயமா யென்மயமா யொன்றுங் காட்டா நிராமயமாய் நிருவி
கற்ப நிலையாய் மேலாந் தன்மயமாய்த் தற்பரமாய் விமலமாகித் தடத்
தமாய்ச் சொரூபமாய்ச் சகச மாகிச் சின்மயமாய்ச் சிற்பரமா யசல மா
கிச் சிற்சொலித மாய்க்கண்ட சிவமாயெங்கு மன்மயமாய் வாசகா தீத
மாகி மனோதீத மாயமர்ந்த மௌனத் தேவே. (8)

அளவிறந்த நெடுங்காலஞ் சித்தர்யோக ரறிஞர்மல ரயன்முதலோ
ரணங்கு வேதங் களவிறந்துங் கரணாதி யிரந்தருஞ் செய்யுங் கடுந்தவத்
துங் காண்பரிதாங் கடவு ளாகி யளவிறந்த வெம்போல்வா ருள்ளத்
துள்ளே யூறுகின்ற தெள்ளமுத வூறலாகிப் பிளவிறந்து பிண்டா
ண்ட முழுதுந் தானாய்ப் பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரிய
தேவே. (9)

வாயாகி வாயிறந்த மௌன மாகி மதமாகி மதங்கடந்த வாய்மை
யாகிக் காயாகிப் பழமாகித் தருவாய் மற்றைக் கருவிகர ணாதிகளின்
கலப்பாய்ப் பெற்ற தாயாகித் தந்தையாய்ப் பிள்ளை யாகித் தானாகி
நானாகிச் சகல மாகி யோயாத சத்தியெலா முடைய தாகி யொன்றா
கிப் பலவாகி யோங்குந் தேவே. (10)

அண்டங்கள் பலவாகி யவற்றின் மேலு மளவாகி யளவாத
வதீதமாகிப் பிண்டங்க ளனைத்துவகை யாகிப் பிண்டம் பிறங்குகின்ற
பொருளாகிப் பேதந் தோற்றும் பண்டங்கள் பலவாகி யவற்றைக்
காக்கும் பதியாகி யானந்தம் பழுத்துச் சாந்தங் கொண்டெங்கு நிழல்
பரப்பித் தழைந்த ஞானக் கொழுங்கடவுட் டருவாகிக் குலவுந் தேவே.

பொன்னாகி மணியாகிப் போக மாகிப் புறமாகி யகமாகிப் புனித மாகி, மன்னாகி மலையாகிக் கடலு மாகி மதியாகி ரவியாகி மற்று மாகி முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி முழுதாகி நாதமுறு முழங்கி யென்று மின்னாகிப், பரவியின்ப வெள்ளந் தேக்க வியன்கருணைப் பொழிமுகி லாய் விளங்குந் தேவே. (12)

அரிதாகி யரியதினு மரிய தாகி யநாதியா யாதியா யருள தாகிப், பெரிதாகிப் பெரியதினும் பெரிய தாகிப் பேதமா யபேத மாய்ப் பிறங்கா நின்ற, கரிதாகி வெளிதாகிக் கலைக ளாகிக் கலைகடந்த பொருளாகிக் காணா நிற்கத், தெரிதான வெளிநடுவி லருளாம் வண்மைச் செழுங்கிரணச் சுடராகித் திகழுந் தேவே. (13)

உருவாகி யுருவினிலுள் ளருவ மாகி யுருவத்தி லுருவாகி யுருவுள் ளொன்றா, யருவாகி யருவினிலுள் ளருவ மாகி யருவத்தி லருவாகி யருவுள் ளொன்றாய்க் குருவாகிச் சத்தவசிற் குணத்த தாகிக் குணரகிதப் பொருளாகிக் குலவா நின்ற, மருவாகி மலராகி வல்லியாகி மகத்துவமா யணுத்துவமாய் வயங்குந் தேவே. (14)

சகலமாய்க் கேவலமாய்ச் சுத்த மாகிச் சராசரமா யல்லவாய்த் தானே தானா, யகலமாய்க் குறுக்கமாய் நெடுமை யாகி யவையனைத்து மணுகாத வசலமாகி, யிகலுறாத் துணையாகித் தனிய தாகி யெண்குணமா யெண்குணத்தெம் மிறையா மென் றுகலிலாத் தண்ணருள்கொண் டுயிரை யெல்லா மூட்டிவளர்த் திடுங்கருணை யோவாத் தேவே. (15)

வாசகமாய் வாச்சியமாய் நடுவா யந்த வாசகவாச் சியங்கடந்த மௌன மாகித், தேசகமா யிருளகமா யிரண்டுங் காட்டாச் சித்தகமாய் வித்தகமாய்ச் சிறிதும் பந்த பாசமுறாப் பதியாகிப் பசுவுமாகிப் பாசநிலை யாகியொன் றும்பகரா தாகி நாசமிலா வெளியாகி யொளி தானாகி நாதாந்த முடிவினட நவிற்றுந் தேவே. (16)

சகமாகிச் சிவனாயீச னாகிச் சதுமுகனாய்த் திருமாலா யரன்றா னாகி, மகமாயை முதலாய்க்கூ டத்தனாகி வான்பிரம மாகியல்லா வழக்கு மாகி, யிகமாகிப் பரமாகிச் சமய கோடி யெத்தனையு மாகியவை யெட்டா வான்கற், பகமாகிப் பரமாகிப் பரம மாகிப் பராபரமாய்ப் பரம்பரமாய்ப் பதியுந் தேவே. (17)

விதியாகி யரியாகிக் கிரீச னாகி விளங்குமகேச் சுரனாகி விமலமான், கிரியாகுஞ் சதாசிவனாய் விந்து வாகி திகழ்நாத மாய்ப்பரையாய் நிமலானந்தப், பதியாகும் பரசிவமாய்ப் பரமாய் மேலாய்ப் பக்கமிரண் டாயிரண்டும் பகரா தாகிக், கதியாகி யளவிறந்த கதிக ளெல்லாங் கடந்துநின்று நிறைந்தபெருங் கருணைத் தேவே. (18)

மானாகி மோகினியாய் விந்து வாகி மற்றவையாற் காணாத வான மாகி, நானாகி நானல்ல னாகி நானே நானாகும் பதமாகி நான்றான் கண்ட, தானாகித் தானல்ல னாகித் தானே தானாகும் பதமாகிச் சகசஞான, வானாகி வானடுவில் வயங்குகின்ற மௌனநிலை யாகியெங்கும் வளருந் தேவே. (19)

மந்திரமாய்ப் பதமாகி வன்ன மாகி வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவன மாகிச், சந்திரனா யிந்திரனா யிரவி யாகித் தானவராய் வானவராய்ச் சயங்கா நின்ற, தந்திரமா யிவையொன்று மல்ல வாகித் தானாகித் தனதாகித் தானென் காட்டா, வந்தரமா யப்பாலா யதற்கப் பாலா யப்பாலுக் கப்பாலா யமர்ந்த தேவே. (20)

மலைமேலுங் கடன்மேலு மலரின் மேலும் வாழ்கின்ற மூவருவின் வயங்குங் கோவே, நிலைமேலு நெறிமேலு நிறுத்துகின்ற நெடுந் தவத்தோர் நிரைமேலு நிகழ்த்தும் வேதக், கலைமேலு மெம்போல்வா ருளத்தின் மேலுங் கண்மேலுந் தோண்மேலுங் கருத்தின் மேலுந், தலைமேலு முயிர்மேலு முணர்வின் மேலுந் தருமன்பின் மேலும்வளர் தாண்மெய்த் தேவே. (21)

பொற்குன்றே யகம்புறமும் பொலிந்து நின்ற பூரணமே யாரணத்துட் பொருளே யென்றுங் கற்கின்றோர்க் கினியசுவைக் கரும்பே தான கற்பகமே கற்பகத்தின் கனியே வாய்மைச், சொற்குன்றா நாவகத்துண் மாறா வின்பந் தோற்றுகின்ற திருவருட்சீர்ச் சோதியே விண், ணிற்கின்ற சுடரேயச் சுடருள் ளோங்கு நீளொளியே யவ்வொளிக்கு ணிறைந்த தேவே. (22)

தேசுவிரித் திருளகற்றி யென்று மோங்கித் திகழ்கின்ற செழுங்கதிரே செறிந்த வாழ்க்கை, மாசுவிரித் திடுமனத்திற் பயிலாத் தெய்வ மணிவிளக்கே யானந்த வாழ்வே யெங்குங், காசுவிரித் திடுமொளி போற் கலந்து நின்ற காரணமே சாந்தமெனக் கருதா நின்ற, தூசுவிரித் துடுக்கின்றோர் தம்மை நீங்காச் சுகமயமே யருட் கருணை தலங்குந் தேவே. (23)

கோவேயென் குணக்குன்றே குன்றா ஞானக் கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்த மோனக், காவேமெய் யறிவின்ப மயமே யென்றன் கண்ணேமுக் கண்கொண்ட கரும்பே வானத், தேவேயத் தேவுக்குந் தெளிய வொண்ணாத் தெய்வமே வாடாமற் றிகழ்சிற் போதப், பூவேயப் பூவினுறு மணமே யெங்கும் பூரணமாய் நிறைந் தருளும் புனிதத் தேவே. (24)

வானேயவ் வானுலவுங் காற்றே காற்றின் வருநெருப்பே நெருப்புறுநீர் வடிவே நீரிற், றானேயும் புவியேயப் புவியிற் றங்குந் தாபரமே சங்கமமே சாற்று கின்ற, வூனேநல் லுயிரேயுள் ளொளியே யுள்ளத் துணர்வேயவ் வுணர்வுகலந் தூறு கின்ற, தேனேமுக் கனியேசெங் கரும்பே பாகின் றீஞ்சுவையே சுவையனைத்துந் திரண்ட தேவே. 25

விண்ணேவிண் ணுருவேவிண் முதலே விண்ணுள் வெளியேயவ் வெளிவிளங்கு வெளியே யென்றன் கண்ணேகண் மணியேகண் ணொளியேகண் ணுட் கலந்துநின்ற கதிரேயக் கதிரின் வித்தே, தண்

ணைதண் மதியேயம் மதியிற் பூத்த தண்ணமுதே தண்ணமுத சாரமே சொற், பண்ணேபண் ணிசையேபண் மயமேபண்ணின் பயனே மெய்த் தவர்வாழ்த்திப் பரவுந் தேவே. (26)

மாணேயத் தவருளத்தே மலர்ந்த செந்தா மரைமலரின் வயங்குகின்ற மணியே ஞானப், பூணேமெய்ப் பொருளேயற் புதமே மோனப் புத்தமுதே யானந்தம் பொலிந்த பொற்பே, யாணேபெண் ணுருவமே யலியே யொன்று மல்லாத பேரொளியே யனைத்துந் தாங்குந், தூணேசிற் சுகமேயச் சுகமேற் பொங்குஞ் சொரூபானந் தக்கடலே சோதித் தேவே. (27)

பூதமே யவைதோன்றிப் புகுந்தொடுங்கும் புகலிடமே யிடம்புரிந்த பொருளே போற்றும், வேதமே வேதத்தின் விளைவே வேத வியன்முடிவே யம்முடிவின் விளங்குங் கோவே, நாதமே நாதாந்த நடமே யந்த நடத்தினையுண் ணடத்துகின்ற நலமே ஞான, போதமே போதமெலாங் கடந்து நின்ற பூரணமே யோகியருட் பொலிந்த தேவே. 28

ஞாலமே ஞாலமெலாம் விளங்க வைத்த நாயகமே கற்பமுத னவிலா நின்ற, காலமே காலமெலாங் கடந்த ஞானக் கதியேமெய்க் கதியளிக்குங் கடவுளே சிற், கோலமே குணமேயுட் குறியேகோலங் குணங்குறிகள் கடந்துநின்ற குருவே யன்பர், சீலமே மாலறியா மனத்திற் கண்ட செம்பொருளே யும்பர்பதஞ் செழிக்குந் தேவே. (29)

தத்துவமே தத்துவா தீதமே சிற் சயம்புவே யெங்குநிறை சாக்ஷியே மெய்ச், சத்துவமே சத்துவத்தின் பயனே யின்பந் தந்தருளும் பெருவாழ்வாஞ் சாமியே யெஞ், சித்தநிலை தெளிவிக்கு மொளியே சற்றுந் தெவிட்டாத தெள்ளமுதே தேனே யென்றுஞ், சுத்தநெறி திறம்பாதா ரறிவிற் றோய்ந்த சுகப்பொருளே மெய்ஞ்ஞானத் துலங்குந் தேவே. (30)

யோகமே யோகத்தின் பயனே யோகத் தொருமுதலே யோகத்தினோங்குந் தூய, போகமே போகத்தின் பொலிவே போகம் புரிந்தருளும் புண்ணியமே புனித ஞான, யாகமே யாகத்தின் விளைவே யாகத் திறையேயவ் விறைபுரியு மின்பே யன்பர், மோகமே மோகமெலா மழித்து வீறு மோனமே மோனத்தின் முளைத்த தேவே. (31)

காட்சியே காண்பதுவே ஞேய மேம்புட் கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே யோங்கு, மாட்சியே யுண்மையறி வின்பமென்ன வயங்குகின்ற வாழ்வேமா மௌனக் காணி, யாட்சியே யாட்சிசெயு மரசே சுத்த வறிவேமெய் யன்பேதென் னமுதே நல்ல, சூட்சியே சூட்சியெலாங் கடந்து நின்ற துரியமே துரியமுடிச் சோதித் தேவே.

மறைமுடிக்குப் பொருத்தமுறு மணியே ஞான வாரிதியே யன்பர்கடம் மனத்தே நின்ற, குறைமுடிக்குங் குணக்குன்றே குன்று மோனக் கோமளமே தூயசிவக் கொழுந்தே வெள்ளைப் பிறைமுடிக்கும் பெருமானே துளவ மாலைப் பெம்மானே செங்கமலப் பிரானே யிந்த, விறைமுடிக்கு மூவர்கட்கு மேலாய் நின்ற விறையேயிவ் வுருவு மன்றி யிருந்த தேவே. (33)

கோதகன்ற யோகர்மனக் குகையில் வாழுங் குருவேசண் முகங்கொண்ட கோவே வஞ்ச, வாதகன்ற ஞானியர்தம் மதியி லூறும் வானமுதே யானந்த மழையே மாயை, வேதகன்ற முத்தர்களை விழுங்குஞான வெழுமே மெய்யின்ப விருந்தே நெஞ்சிற், நீதகன்ற மெய்யடியார் தமக்கு வாய்த்த செல்வமே யெல்லையிலாச் சீர்மைத் தேவே. 34

அருளுருவி வழிந்தவழிந் தொழுக வோங்கு மானந்தத் தனிமலையே யமல வேதப், பொருளளவு நிறைந்தவற்றின் மேலுமோங்கிப் பொலிகின்ற பரம்பொருளே புரண மாகி யிருளறுசிற் பிரகாச மயமாஞ்சுத்த வேதாந்தப் பெருவெளிக்கு ளிருந்த வாழ்வே, தெருளளிவு

முனமுழுதுங் கலந்து கொண்டு தித்திக்குஞ் செழுந்தேனே தேவ தேவே. (35)

அளவையெலாங் கடந்துமனங் கடந்து மற்றை யறிவையெலாங்
கடந்துகடந் தமல யோக ருளவையெலாங் கடந்துபதங் கடந்து மேலை
யொன்றுகடந் திரண்டுகடந் துணரச் சூழ்ந்த, களவையெலாங் கடந்
தண்ட பிண்ட மெல்லாங் கடந்துநிறை வானசுகக் கடலே யன்பர்,
வளவையெலா மிருளகற்று மொளியே மோன வாழ்வேயென் னுயிர்
க்குயிராய் வதியுந் தேவே. (36)

வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கண் மனங்கலந்து மதிகல
ந்து வயங்கா நின்று வென்புகலந் தான்கலந்து புலன்களோடு மிந்தி
ரிய மனைவகலந்தன் னெரியங்குகின்ற, வன்புகலந் தறிவுகலந் துயிரைம்
பூத மான்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி, யின்புகலந் தருள்கலந்
துளும்பிப் பொங்கி யெழுங்கருணைப் பெருக்காறே யின்பத் தேவே.

தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத் தடம்பொழிற்பூ மணம்
வீசத் தென்றல் வீச, வெண்ணமுதப் பனிக்குநிலா முற்றத் தேயின்
னிசைவீசத் தண்பனிநீ ரெடுத்து வீசப், பெண்ணமுத மனையவர்வண்
ணமுத மூட்டப் பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட் டோடக், கண்
ணமுதத் துடம்புயிர்மற் றனைத்து மின்பங் கலந்துகொளத் தருங்கரு
ணைக் கடவுட் டேவே. (38)

அழியாத வருட்கருணைப் பெருக்கே யென்றுந் தூண்டாத மணி
விளக்கின் சோதி யேவா னொழியாது கதிர்பரப்புஞ் சுடரே யன்பர்க்
கோவாத வின்பருளு மொன்றே விண்ணோர், விழியாலு மொழியா
லு மனத்தி னாலும் விழைதருமெய்த் தவத்தாலும் விளம்பு மேனை
வழியாலுங் கண்டுகொளற் கரிதாய்ச் சுத்த மௌனவெளி யூடிருந்து
வயங்குந் தேவே. (39)

சொல்லொழியப் பொருளொழியக் கரண மெல்லாஞ் சோர்ந் தொழிய வுணர்வொழியத் துளங்கா நின்ற வல்லொழியப் பகலொழிய நடுவே நின்ற வானந்த வநுபவமே யதீத வாழ்வே நெல்லொழியப் பதர்கொள்வார் போல வின்ப நிறைவொழியக் குறைகொண்மத நெறி யோர் நெஞ்சக் கல்லொழிய மெய்யடிய ரிதயமெல்லாங் கலந்துகல ந்தினிக்கின்ற கருணைத் தேவே. (40)

அலைகடலும் புவிவரையு மனல்கா லீரு மந்தரமு மற்றையவி லாண்டம் யாவு நிலைநிலையா வண்ணமருள் வெளியி னூடே நிரைநி ரையா நிறுத்தியுயிர் நிகழும் வண்ணந் தலைதலையாத் தத்துவஞ்செய் திரோதை யென்னுந் தனியாணை நடத்தியருட் டலத்தி லென்று மலைவறவீற் றிருந்தருளு மரசே முத்தி வழித்துணையே விழித்துணை யுண் மணியாந் தேவே. (41)

வரம்பழுத்த நெறியேமெய்ந் நெறியி லின்ப வளம்பழுத்த பெரு வாழ்வே வானோர் தங்கள் சிரம்பழுத்த பதப்பொருளே யறிவானந்த சிவம்பழுத்த வநுபவமே சிதாகா சத்திற் பரம் பழுத்த நடத்தரசே கருணை யென்னும் பழம்பழுத்த வான்றருவே பரம ஞானத் திரம்ப ழுத்த யோகியர்தம் யோகத் துள்ளே தினம்பழுத்துக் கனிந்தவருட் செல்வத் தேவே. (42)

அண்டமெலாங் கண்ணாகக் கொளினுங் காண்டற் கனுத்துணை யுங் கூடாவென் றனந்த வேதம் விண்டலறி யோலமிட்டுப் புலம்ப மோன வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கு மொன்றே கண்ட வடி வாயகண்ட மயமா யெங்குங் கலந்துநின்ற பெருங்கருணைக் கடவு ளேயென் சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டுஞ் சற் குருவே சிவகுருவே சாந்தத் தேவே. (43)

பேதமறு மெய்ப்போத வடிவு மாகிப் பெருங்கருணை நிறம்பழு த்துச் சாந்தம் பொங்கிச் சிதமிருக் தருள்கனிந்து கனிந்துமாறாச் சின்

மயமாய் நின்மலமே மணந்து நீங்கா வாதரவோ டியன்மௌனச்
சுவைமேன் மேற்கொண் டானந்த ரசமொழுக்கி யன்பா லென்றுஞ்
சேதமுறா வறிஞருளந் தித்தித் தோங்குஞ் செழும்புனிதக் கொழுங்
கனியே தேவ தேவே. (44)

உடல்குளிர வுயிர்தழைக்க வுணர்ச்சி யோங்க வுளங்கனிய மெய்
யன்பருள்ளத் தூடே கடலனைய பேரின்பந் துளும்ப நாளுங் கருணை
மலர்த் தேன்பொழியுங் கடவுட் காவே விடலரிய வெம்போல்வா
ரிதயந் தோறும் வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே வேதந் தொடல
ரிய வெளிமுழுதும் பரவிஞானச் சோதி விரித் தொளிர்கின்ற சோ
தித் தேவே (45)

கிரியைநெறி யகற்றிமறை முடிவினின்று கேளாமற் கேட்கின்ற
கேள்வி யேசொற் கரியவரை விடுத்தநவ நிலைக்கு மேலே காணாமற்
காண்கின்ற காட்சி யேயுள் ளரியநிலை யொன்றிரண்டி னடுவே சற்று
மறியாம லறிகின்ற வறிவே யென்று முரியசதா நிலைநின்ற வுணர்ச்சி
மேலோ ருன்னும லுன்னுகின்ற வொளியாந் தேவே (46)

சொற்போதற் கரும்பெரிய மறைக ளோடித் தொடர்ந்து தொட
ர்ந்தயர்ந்திளைத்துத் துளங்கி யேங்கிப் பிற்போத விரைந்தன்ப ருள
த்தே சென்று பெருங்கருணைப் பெருவாழ்வே பெயரா தென்றுந் தற்
போத வொழிவிலிடை நிறைந்து பொங்கித் ததும்பிவழிந் தோங்கி
யெல்லாந் தானே யாகிச் சிற்போதத் தகம்புறமுங் கோத்து நின்ற
சிவானந்தப் பெருக்கே மெய்ச் செல்வத் தேவே. (47)

பொங்குபல சமயமெனு நதிக ளெல்லாம் புகுந்துகலந் திடநிறை
வாய்ப் பொங்கி யோங்குங் கங்குகரை காணாத கடலே யெங்குங் கண்
ணாகக் காண்கின்ற கதியே யன்பர் தங்கநிழல் பரப்பிமயற் சோடை
யெல்லாந் தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச் செங்குமுத மல
ரவருமதியே யெல்லாஞ் செய்யவல்ல கடவுளே தேவ தேவே (48)

வான்காணா மறைகாணா மலரோன் காணான் மால்காணா னுருத்திரனு மதித்துக் காணா னான்காணா விடத்ததனைக் காண்பே மென்று நல்லோர்க ணவில்கின்ற நலமே வேட்கை யான்காணா வணக்கமல மலர்த்தா ணின்ற வான்சுடரே யானந்த மயமே யீன்ற வான்காணா விளங்கன்றா யலமந் தேங்கு மன்பர்தமைக் கலந்துகொளு மமலத் தேவே. (49)

மெய்ஞ்ஞான விருப்பத்தி லேறிக் கேள்வி மீதேறித் தெளிந்திச் சைநிட்டை மேலேறி யஞ்ஞான மற்றபடி யேறி யுண்மை யறிந்தபடி நிலையேறி யதுநா னென்னுங் கைஞ்ஞானங் கழன்றேறி மற்றவெல்லாங் கடந்தேறி மௌனவியற் கதியி லேறி மெய்ஞ்ஞான மயத்தெளிந்தோர் கண்டுங் காணே மென்கின்ற வநுபவமே யின்பத் தேவே. (50)

பற்றறியா முத்தர்தமை யெல்லாம் வாழைப் பழம்போல விழுங்குகின்ற பரமே மாசு பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும் பெருமானே யானந்தப் பேற்றின் வாழ்வே யுற்றறியா தின்னுமின்னு மறைக ளெல்லா மோலமிட்டுத் தேடுகின்ற வொன்றே யொன்றுங் கற்றறியாப் பேதையேன் றனக்கு மின்பங் கனிந்தளித்த வருட்கடலே கருணைத் தேவே. (51)

மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த வெளியாக்கிக் கலந்து கொண்ட வெளியே முற்றும் பொய்யுணர்ந்த வெமைப்போல்வார் தமக்கு மின்பம் புரிந்தருளுங் கருணைவெள்ளப் பொற்பே யன்பர் கையுறைந்து வளர்நெல்லிக் கனியே யுள்ளங் கரைந்து கரைந் துருக வவர் கருத்தி னூடே யுய்யநெறி யொளிகாட்டி வெளியு முள்ளு மோங்குகின்ற சுயஞ்சுடரே யுண்மைத் தேவே. (52)

ஒலிவடிவு நிறஞ்சுவைக ணாற்ற மூற்ற முறுதொழில்கள் பயன்பலவே றுளவா யெங்கு மலிவகையா யெவ்வகையு மொன்று மொன்று மாட்டாதா யெல்லாமு மல்ல தாகிச் சலிவகையில் லாத

Calcutta.

முதற் பொருளே யெல்லாந் தன்மயமாய் விளங்குகின்ற தனியே
யாண்பெண் ணலிவகையல் லாதுவகை கடந்து நின்ற வருட்சிவமே
சிவபோகத் தமைந்த தேவே. (53)

பேராய வண்டங்கள் பலவும் பிண்ட பேதங்கள் பற்பலவும் பிண்
டாண்டத்தின் வாராய பலபொருளுங் கடலு மண்ணு மலையளவுங்
கடலளவு மணலும் வானு மூராத வான்மீனு மணுவு மற்றை யுள்
ளவு மளந்திடலா மோகோ வுன்னை யாராலு மளப்பரிதென் றனந்த
வேத மறைந்திளைக்க வதிதூர மாகுந் தேவே. (54)

கற்பங்கள் பலகோடி செல்லத் தீய கனலினடு வூசியின்மேற்
காலையூன்றிப் பொற்பறமெய் யுணவின்றி யுறக்க மின்றிப் புலர்ந்
தெலும்பு புலப்படவைம் பொறியை யோம்பி நிற்பவருக் கொளித்து
மறைக் கொளித்து யோக நீண்முனிவர்க் கொளித்தமரர்க் கொளித்து
மேலாஞ் சிற்பதத்திற் சின்மயமாய் நிறைந்த ஞானத் திருவாள ருட்
கலந்த தேவ தேவே. (55)

மட்டகன்ற நெடுங்கால மனத்தால் வாக்கான் மதித்திடினும் புலம்
பிடினும் வாரா வென்றே கட்டகன்ற மெய்யறிவோர் கரண நீக்கிக்
கலையகற்றிக் கருவியெலாங் கழற்றி மாயை விட்டகன்று கருமமல
போதம் யாவும் விடுத்தொழித்துச் சகசமல வீக்க நீக்கிச் சுட்டகன்று
நிற்குமவர் தம்மை முற்றுஞ் சூழ்ந்து கலந்திடுஞ்சிவமே துரியத்
தேவே. (56)

உருநான்கு மருநான்கு நடுவே நின்ற வுருவருவ மொன்று மிவை
யுடன்மே லுற்ற வொருநான்கு மிவைகடந்த வொன்று மாயவ் வொன்
றினடு வாய்நடுவு ளொன்றாய் நின்றே யிருநான்கு மமைத்தவரை
நான்கி னோடு மெண்ணான்கின் மேலிருந்து மிறையே நாயைக் கரு
நான்கும் பொருணான்குங் காட்டு முக்கட் கடவுளே கடவுளர்கள் கரு
துந் தேவே. (57)

பாங்குளநாந் தெரிதுமெனத் துணிந்து கோடிப் பழமறைகடணி
த்தனியே பாடிப் பாடி யீங்குளதென் றாங்குளதென் றோடி யோடி
யிளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந் தெட்டுந் தோறும் வாங்குபர
வெளிமுழுது நீண்டு நீண்டு மறைந்துமறைந் தொளிக்கின்ற மணியே
யெங்குந் தேங்குபர மானந்த வெள்ளமேசச் சிதானந்த வருட்சிவமே
தேவ தேவே. (58)

எழுத்தறிந்து தமையுணர்ந்த யோக ருள்ளத் தியலறிவாந் தருவி
னிலின் பெனுமோ ருச்சி பழுத்தளிந்து மௌனநறுஞ் சுவைமேற்
பொங்கிப் பதம்பொருந்த வனுபவிக்கும் பழமே மாயைக் கழுத்தரிந்து
கருமமலத் தலையை வீசுங் கடுந்தொழிலோர் தமக்கேநற் கருணை காட்
டி விழுந்துணையா யமர்ந்தருளும் பொருளே மோன வெளியினி
றை யானந்த விளைவாந் தேவே. (59)

உருத்திரர்நா ரணர்பிரமர் விண்ணோர் வேந்த ருறுகருடர் காந்த
ருவரியக்கர் பூதர் மருத்துவர்யோ கியர்சித்தர் முனிவர் மற்றை வான
வர்கண் முதலோர்தம் மனத்தாற் றேடிக் கருத்தழிந்து தனித்தனியே
சென்று வேதங் களைவினவ மற்றவையுங் காணே மென்று வருத்த
முற்றங் கவரோடு புலம்ப நின்ற வஞ்சவெளி யேயின்பமய மாந்தேவே.

பாயிரமா மறையனந்த மனந்த மின்னும் பார்த்தளந்து காண்பே
மெனப் பல்கால் மேவி யாயிரமா யிரமுகங்க ளாலும் பன்னா ளளந்
தளந்தோ ரணுத்துணையு மளவு காணா தேயிரங்கி யழுதசிவ சிவவென்
றேங்கித் திரும்பவருட் பரவெளிவாழ் சிவமே யென்று தாயிரங்கி வளர்ப்
பதுபோ லெம்போல்வா ரைத் தண்ணருளால் வளர்த்தென்றுந் தாங்
குந் தேவே. (61)

அந்தரமிக் கறிவோமற் றதனி லண்ட மடுக்கடுக்கா யமைந்துவள
வறிவோமாங் கே யுந்து மம்பல் பிண்டநிலை யறிவோஞ்சீவ னுற்ற

நிலை யறிவோமற் றனைத்து நாட்டு மெங்கைநின தருள்விளையாட் டந்தோ வந்தோ வெள்ளளவு மறிந்திலோ மென்னே யென்று முந் தனந்த மறைகளெல்லாம் வழுத்த நின்ற முழுமுதலே யன்பர்குறை முடிக்குந் தேவே. (62)

தோன்றுபர சாக்கிரமுங் கண்டோ மந்தச் சொப்பனமுங் கண் டோமேற் சுழுத்தி கண்டோ மான்றபர துரியநிலை கண்டோ மப்பா லதுகண்டோ மப்பாலா மதுவுங் கண்டோ மேன்றவுப சாந்தநிலை கண் டோ மப்பா லிருந்தநினைக் காண்கிலோ மென்னே யென்று சான்ற வுப னிடங்களெலாம் வழுத்த நின்ற தன்மயமே சின்மயமே சகசத் தேவே. (63)

பரிக்கிரக நிலைமுழுதுந் தொடர்ந்தோ மேலைப் பரவிந்து நிலை யனைத்தும் பார்த்தோம் பாசமெரிக்குமியற் பராசாத நிலைக்கண் மெல்ல வெய்தினோ மப்பாலு மெட்டிப் போனோந் தெரிக்கரிய வெளிமூன் றுந் தெரிந்தோமெங்குஞ் சிவமேநின் சின்மயமோர் சிறிதுந் தேறோந் தரிக்கரிதென் றாகமங்க ளெல்லாம் போற்றத் தனிநின்ற பரம்பொ ருளே சாந்தத் தேவே. (64)

மணக்குமலர்த் தேனுண்ட வண்டே போல வளர்பரமா னந்த முண்டு மகிழ்ந்தோ ரெல்லா மிணக்கமுறக் கலந்துகலந் ததீதமாதற் கியற்கைநிலை யாதுதா னெம்மாற் கூறுங் கணக்குவழக் கனைத் தினையுங் கடந்த தந்தோ காண்பரிதிங் கெவர்க்குமெனக் கலைக ளெல்லாம் பிணக்கறநின் றோலமிடத் தனித்து நின்ற பெரும்பதமே மதாதீதப் பெரிய தேவே. (65)

பொதுவென்றும் பொதுவினடம் புரியா நின்ற பூரணசிற் சிவமென்றும் போதா னந்த மதுவென்றும் பிரமமென்றும் பரம மென்றும் வகுக்கின்றோர் வகுத்திடுக வதுதா னென்று மிதுவென் றுஞ் சுட்டவொணா ததனைச் சும்மா விருப்பதுவே துணிவெனக்

கொண்டிருக்கின் றோரை, விதுவென்ற தண்ணளியாற் கலந்து
கொண்டு விளங்குகின்ற பெருவெளியே விமலத் தேவே. (66)

அருமறையா கமங்கண்முத லனைவீ றெல்லா மமைந்தமைந்து
மற்றவைக்கு மப்பா லாகிக் கருமறைந்த வுயிர்கடொறுங் கலந்துமே
விக் கலவாமற் பண்ணையறியுங் கடந்த ஞானத் திருமணிமன் றகத்தி
ன்ப வுருவா யென்றுந் திகழ்கருணை நடம்புரியுஞ் சிவமே மோனப்
பெருமலையே பரமவின்ப நிலையே முக்கட் பெருமானே யெத்திறத்
தும் பெரிய தேவே. (67)

என்னுயிர்நீ யென்னுயிர்க்கோ ருயிரு நீயென் னின்னுயிர்க்குத்
துணைவநீ யென்னை யீன்ற வன்னைநீ யென்னுடைய வப்பனீ யென்
னருப்பொருணீ யென்னிதயத் தன்பு நீயென் னன்னெறிநீ யெனக்
குரிய வுறவு நீயென் னற்குருநீ யெனைக்கலந்த நட்பு நீயென், றன்னு
டைய வாழ்வுநீ யென்னைக் காக்குந் தலைவனீ கண்மூன் றுடைய
தேவே. (68)

தானாகித் தானல்ல தொன்று மில்லாத் தன்மயனா யெவ்வெவைக்
குந் தலைவனாகி வானாகி வளியனலாய் நீரு மாகி மலர்தலைய வுலகாகி
மற்று மாகித் தேனாகித் தேனின றுஞ்சுவைய தாகித் தீஞ்சுவையின்
பயனாகித் தேடுகின்ற நானாகி யென்னிறைபாய் நின்றோய் நின்னை
நாயடியே னெவ்வாறு நவிற்று மாறே. (69)

ஆனேறும் பெருமானே யரசே யென்ற னாருயிருக் கொருது
ணையே யமுதே கொன்றைத், தேனேறு மலர்ச்சடையெஞ் சிவனே
தில்லைச் செழுஞ்சுடரே யானந்தத் தெய்வ மேயென், றூனேறு
முயிர்க்குணிறை யொளியே யெல்லா முடையானே நின்னடிச்சீ
ருன்னி யன்பர், வானேறு கின்றார்கா ளொருவன் பாவி மண்ணேறி
மயக்கேறி வருந்துற் றேனே. (70)

செஞ்சடையெம் பெருமானே சிறுமா னேற்ற செழுங்கமலக் கரத்தவனே சிவனே சூழ்ந்து, மஞ்சடையு மதிற்றில்லை மணியே யொற்றி வளர்மருந்தே யென்னுடைய வாழ்வே வேட்கை, யஞ்சடைய வஞ்சியர்மா லடைய வஞ்ச மடையகெடுந் துயரடைய வகன்ற பாவி, நெஞ்சடைய நினைதியோ நினைதி யேன்மெய்ந் நெறியுடையார் நெஞ்சமர்ந்த நீதா னன்றே. (71)

அன்னையினும் பெரிதினிய கருணை யூட்டு மாரமுதே யென்னுறவே யரசே யிங்கு மன்னுலகி லடியேனை யென்னே துன்ப வலையிலகப் படவியற்றி மறைந்தா யந்தோ, பொன்னைமதித் திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து போனகமும் பொய்யுறவும் பொருந்த லாற்றே னென்னையுனங் கொள்ளுதியோ சொள்கி லாயோ வென்செய்வே னென்செய்வே னென்செய் வேனே. (72)

படித்தேன்பொய் புலகியனூ லெந்தாய் நீயே படிப்பித்தா யன்றியுமப் படிப்பி லிச்சை யொடித்தேனோ னொடித்தேனோ வொடிப்பித் தாயின் னுன்னடியே துணையெனநா னுறுதி யாகப் பிடித்தேன்மற் றதுவுநீ பிடிப்பித் தாயிப் பேதையே னின்னருளைப் பெற்றோர் போல நடித்தேனெம் பெருமானீ தொன்று நானே நடித்தேனோ வல்லதுநீ நடிப்பித் தாயோ. (73)

மத்தேறி யலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை மயலேறி விருப்பேறி மதத்தி னோடு, பித்தேறி யுழல்கின்ற மனத்தா லந்தோ பேயேறி நலிகின்ற பேதை யானேன், வித்தேறி விளைவேறி மகிழ்கின் றோர்போன் மேலேறி யன்பரெலாம் விளங்கு கின்றா, ரொத்தேறி யுயிர்க்குயிராய் நிறைந்த வெங்க ளுடையானே யிதுதகுமோ வுணர்கி லேனே.

மதியணிந்த முடிக்கனியே மணியே யெல்லாம் வல்லவருட் குருவேநின் மலர்த்தாள் வாழ்த்திக், கதியணிந்தா ரன்பரெலா மடியே னொன்றுங் கண்டறியேன் கருமத்தாற் கலங்கி யந்தோ, பொதிய

ணிந்து திரிந்துழலு மேறு போலப் பொய்யுலகிற் பொய்சுமந்து புல
ம்பா நின்றேன், றுதியணிந்த நின்னருளென் றனக்கு முண்டோ
வின்றெனிலிப் பாவியேன் சொல்வ தென்னே. (75)

என்னரசே யென்னுயிரே யென்னை யீன்ற வென்றாயே யென்
குருவே யெளியே னிங்கே, தன்னரசே செலுத்தியெங்கு முழலா
நின்ற சஞ்சலநெஞ் சகத்தாலே தயங்கி யந்தோ, யின்னரசே பெண்
ணமுதே யென்று மாதர் வெய்யசிறு நீர்க்குழிக்கண் விழவே யெண்
ணிக், கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே குப்புறு
கின் றேன்மயலிற் கொடிய னேனே. (76)

அல்விலங்கு செழுஞ்சுடரா யடியா ருள்ளத் தமர்ந்தருளுஞ் சிவ
குருவே யடியே னிங்கே யில்விலங்கு மடந்தையென்றே யெந்தா யந்
தவிருப்புவிலங் கினையொழித்து மென்னே பின்னு, மல்விலங்கு பாந்
தையர்தம் மாசை யென்னும் வல்விலங்கு பூண்டந்தோ மயங்கி நின்
றேன், புல்விலங்கு மிதுசெய்யா வோகோ விந்தப் புலைநாயேன் பிழை
பொறுக்கிற் புதிதே யன்றே. (77)

வன்கொடுமை மலநீக்கி யடியார் தம்மை வாழ்விக்குங் குருவே
நின் மலர்த்தா ளெண்ண, முன்கொடுசென் றிடுமெடியேன் றன்னை
யிந்த மூடமன மிவ்வுலக முயற்சி நாடிப், பின்கொடுசென் றலைத்தி
ழுக்குதந்தோ நாயேன் பேய்பிடித்த பித்தனைப்போற் பிதற்றா நின்றே,
னென்கொடுமை யென்பாவ மெந்தா யெந்தா யென்னுரைப்பே னெங்
குருவே னென்செய் வேனே, (78)

உய்குவித்து மெய்யடியார் தம்மை யெல்லா முண்மைநிலை பெற
வருளு முடையா யிங்கே, மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கி லாழ்ந்து
வருந்துகின்றே னல்லாலுன் மலர்த்தா ளெண்ணிக், கைகுவித்துக்
கண்களினீர் பொழிந்து நாளோர் கணமேனுங் கருதினைக் கலந்த

தண்டோ, செய்குவித்துக் கொள்ளுதியோ கொன்கி லாயோ திரு வுளத்தை யறியேனென் செய்கு வேனே. (79)

அருள்வெளியி லானந்த வடிவி னாகிநின் றாடுகின்ற பெருவாழ்வே யாசே யிந்த மருள்வலையி லகப்பட்ட மனத்தா லந்தோ மதிகலங்கி மெய்ந் நிலைக்கோர் வழிகா ணாதே,யிருணெறியிற் கோலிழந்த குருட்டே மன்போ லெண்ணாதெல் லாமெண்ணி யேங்கி யேங்கி, யுருள்சகடக் கால்போலுஞ் சுழலா நின்றே னுய்யும்வகை யறியேனிவ் வொதிய னேனே. (80)

கற்றவரை தனக்குமுண வளிக்கு முன்றன் கருணைநிலை தனையறி யேன் கடையே னிங்கே, யெற்றவரை யெறும்பேபோற் றிரிந்து நாளு மிளைத்தனை யருள்காணு தெந்தா யந்தோ,பெற்றவரைக் காணாத பிள்ளை போலப் பேதுறுகின் றேன்செய்யும் பிழையை நோக்கி, யிற் றவரைக் கேள்விடல்போல் விடுதி யேல்யா னென்செய்வே னெங் குறுவே னென்சொல் வேனே. (81)

அடிமைசெயப் புகுந்திடுமெம் போல்வார் குற்ற மாயிரமும் பொறுத்தருளு மரசே நாயேன், கொடுமைசெயு மனத்தாலே வருந்தி யந்தோ குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன், கடுமைசெயப் பிறந் திணிந்தா வடிமை தன்னைக் கண்டிருந்த லழகன்றே கருணைக் கேந்தாய், செடிமையுளப் பாதகனே னென்செய் வேனின் திருவு ளத்தை யறிந்திலேன் றிகைக்கின் றேனே. (82)

கூம்பாத மெய்ந்நெறியோ ருளத்தே யென்றுங் குறையாத வின் பளிக்குங் குருவே யாசைத், தாம்பாலே யாப்புண்டு வருந்தி நாயேன் றையலார் மையலெனுஞ் சலதி யாழ்ந்து, வோம்பாம லுவர்நீருண் டெய்கு கின்றே னுன்னடிய ரக்கரைமே லுவந்து நின்றே, தீம்பாலுஞ் சர்க்கரையுந் தேனு நெய்யுந் தேக்குகின்றா ரிதுதருமோ தேவ தேவே.

வெள்ளமணி சடைக்கனியே மூவராகி விரிந்தருளு மொரு தனியே விழல னேனைக், கள்ளமனக் குரங்காட்டு மாட்ட மெல்லாங் கண்டிருந்து மிரங்கிலையேற் கவலை யாலே, யுள்ளமெலிந் துழல்கின்ற சிறியேன் பின்ன ருய்யும்வகை யெவ்வகையீ தன்னுந் தோறும், பொள் ளெனமெய் வியர்க்கவுளம் பதைக்கச் சோபம் பொங்கிவழி கின்றது நான் பொறுக்கி லேனே. (84)

எனையறியாப் பருவத்தே யாண்டு கொண்ட வென்னரசே யென் குருவே யிறையே யின்று, மனையறியாப் பிழைகருது மகிழ்நன் போல மதியறியேன் செய்பிழையை மனத்துட் கொண்டே, நினையறியா முகத்தவர்போ லிருந்தா யெந்தாய் தடங்கருணைப் பெருங்கடற்குத் தகுமோ கண்டாய், யனையறியாச் சிறுகுழவி யாகி யிங்கே யடிநாயே னரற்றுகின்றே னந்தோ வந்தோ. (85)

தீவினைநல் வினையெனும்வன் கயிற்றா லிந்தச் சீவர்களை யாட்டு கின்ற தேவே நாயேன், வினைநேர் கண்மடவார் மையற்பேயா லிடருழந்துஞ் சலிப்பின்றி யென்னே பின்னு, நாவினையென் பால்வருந் திக் கரண்டு கின்ற நாய்க்குநகை தோன்ற நின்று நயக்கின் றேனே, னாவினைவிட் டெருதுகறந் திடுவான் செல்லு மறிவிலிக்கு மறிவிலியே னான வாறே. (86)

எம்பெருமா னின்விளையாட் டென்சொல் கேனோ னறியாச் சிறியே னெனைத்தா னிங்கே செம்புனலாற் குழைத்தபுலாற் சுவர்சூழ் பொத்தைச் சிறுவீட்டி லிருட்டறையிற் சிறைசெய்தந்தோ கம்பமுறப் பசித்தழலுங் கொளுந்த வந்தக் காணமுதற் பொறிபுலப் பேய் கவர்ந்து சூழ்ந்து வம்பியற்றக் காமாதி யரட்ட ரெல்லா மடி பிடித்து வருத்தவென்றோ வளர்த்தா யெந்தாய். (87)

அம்பரத்தே யானந்த வடிவா யென்று மாடுகின்ற மாமணியே யரசே நாயே, னிம்பரத்த மெனுமுலக நடையி லந்தோ விடருழந்தேன்

பன்னெறியி லென்னையிழுத்தே, பம்பரத்தி னாடியலைப் படுத்து மிந்தப் பாவிமன மெனக்குவயப் படுவ தில்லை, கொம்பரற்ற விளங்கொடி போற் றளர்ந்தே னென்னைக் குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்தி டாயோ. (88)

கண்ணுடைய நுதற்கரும்பே மன்றி லாடுங் காரணகா ரியங்கடந்த கடவுளேநின், றண்ணுடைய மலரடிக்கோர் சிறிது மன்பு சார்ந்தேனோ செம்மரம்போற் றணிந்த நெஞ்சேன், பெண்ணுடைய மயலாலே சுழல்கின் றேனென் பேதைமையை யென்புகல்வேன் பேயனேனைப், புண்ணுடைய புழுவிரும்பும் புள்ளென்கேனோ புலைவிழைந்து நிலைவெறுத்தேன் புலையனேனே. (89)

பொன்னுடையா ரிடம்புகவோ வவர்கட் கேற்கப் பொய்மொழிகள் புகன்றிடவோ பொறிபோ லிந்தக், கொன்னுடையா வுடல்பருக்கப் பசிக்குச் சோறு கொடுக்கவோ குளிர்க்காடை கொளவோ வஞ்ச, மின்னிடையார் முடைச்சிறுநீர்க் குழிக்கணந்தோ வீழ்ந்திடவோ தாழ்ந்திளைத்து விழிக்கவோதா, னென்னுடையா யென்னுடையா யென்னை யிங்கேயெடுத்துவளர்த் தனையறியே னென்சொல்வேனே. 90

வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ விந்த மலக்கூடென் றறிஞரெலாம் வருந்தக் கேட்டு, மருகணைத்துக் கொளப்பெண்பே யெங்கே மேட்டுக் கடைத்திடவெண் சோறெங்கே யாடை யெங்கே, யிருகணுக்கு வியப்பெங்கே வசதியான விடமெங்கே யென்றுதிரிந் திளைத்தே னல்லா, லொருகணத்து முனைநினைந்த துண்டோ வென்னையுடையானே யெவ்வகைநா னுய்யு மாறே. (91)

பொன்மலையோ சிறிதெனப்பே ராசை பொங்கிப் புவிநடையிற் பற்பலகாற் போந்து போந்து, தென்மலையோ திரிமலையோ வென்று தேடி நிலைகுலைந்த தன்றியுனை நினைந்து தேடி, மண்மலையோ மாம

ணியோ மருந்தோ வென்று வழுத்தியதே யில்லையிந்த வஞ்சநெஞ்சம்,
கன்மலையோ விரும்போசெம் மரமோ பாறைக் கருங்கல்லோ பராய்
முருட்டுக் கட்டை யேயோ (92)

தம்மைமறந் தருளமுத முண்டு தேக்குந் தகையுடையார் திருக்
கூட்டஞ் சார்ந்து நாயேன் வெம்மையெலாந் தவிர்ந்துமனங் குளிரக்
கேள்வி விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டி லென்றுஞ் செம்மையெ
லாந் தருமௌன வணைமேற் கொண்டு செறியிரவு பகலொன்றுந்
தெரியா வண்ண மிம்மையிலே யெம்மையினுங் காணச் சுத்த வின்ப
நிலையடைவேனோ வேழை யேனே. (93)

அடியனேன் பிழையனைத்தும் பொறுத்தாட் கொண்ட வருட்க
டலே மன்றோங்கு மாசே யிந்நாள், கொடியனேன் செய்பிழையைத்
திருவுள் ளத்தே கொள்ளுதியோ கொண்டிகலங் குறிப்ப துண்டோ,
நெடியனே முதற்கடவுட் சமூகத் தோர்தந் நெடும்பிழைக ளாயிரமும்
பொறுத்து மாயை, பொடியநேர் நின்றபெருங் கருணை வள்ள லென
மறைக ளோதுவதிங் குனைத்தா னன்றே. (94)

கண்மயக்கும் பேரிருட்டுக் கங்குற் போதிற் கருத்தறியாச் சிறு
வனையோர் கடுங்கா னத்தே, யுண்மயக்கங் கொளவிடுத்தே யொருவன்
பின்போ மொருதாய்போன் மாயையிரு ளோங்கும் போதின், மண்ம
யக்கம் பெறும்விடயக் காட்டி லந்தோ மதியிலேன் மாழாந்து மயங்க
நீதான், வண்மையுற்ற நியதியின்பி னென்னைவிட்டே மறைந்தனையே
பரமே நின்வண்மை யென்னே. (95)

கற்றாயும் பிழைகுறிக்கக் கண்டோ மிந்த நானிலத்தே மற்றவர்
யார் காடார் வீணே, பற்றாயு மவர்தமைநாம் பற்றோம் பற்றிற் பற்றாத
பற்றுடையார் பற்றி யுள்ளே, யுற்றாயுஞ் சிவபெருமான் கருணை
யொன்றே யுறுபிழைக ளைத்தனையும் பொறுப்ப தென்றன்,
பொற்றாளை விரும்பியது மன்று னாடும் பொரு[illegible]ன் பிழைய
னைத்தும் பொறுக்க வன்றே. (96)

எண்ணியநம் மெண்ணமெலா முடிப்பான் மன்று ளெம்பெருமா
னென்றுமகிழ்ந் திறுமாந் திங்கே, நண்ணியமற் றையர்தம்மை யுறாமை
பேசி நன்குமதி யாதிருந்த நாயினேனைத், தண்ணியநல் லருட்கடலே
மன்றி லின்பத் தாண்டவஞ்செய் கின்றபெருந் தகையே யெங்கள்,
புண்ணியனே பிழைகுறித்து விடுத்தி யாயிற் பொய்யனே னெங்குற்
றென் புரிவே னந்தோ. (97)

அன்பர்திரு வுளக்கோயி லாகக் கொண்டே யற்புதச்சிற் சபை
யோங்கு மரசே யிங்கு,வன்பரிடைச் சிறியேனை மயங்கவைத்து மறைந்
தனையே யானந்த வடிவோய் நின்னை, துன்பவடி வுடைப்பிறரிற் பிரி
த்து மேலோர் துரியவடி வினனென்று சொன்ன வெல்லா, மின்ப
வடி வடைந்தன்றே யெந்தா யந்தோ வென்னளவென் சொல்கேனிவ்
வேழை யேனே. (98)

புற்றோங்கு மரவமெல்லாம் பணியாக் கொண்டு பொன்மேனி
தனிலணிந்த பொருளே மாயை,யுற்றோங்கு வஞ்சமனக் கள்வனேனை
யுளங்கொண்டு பணிகொள்வ துனக்கே யொக்கு, மற்றோங்கு மவ
ரெல்லாம் பெருமை வேண்டும் வன்மனத்த ரெனைவேண்டார் வள்ள
லேகாண், கற்றோங்கு மறிவறியேன் பலவாச் சொல்லுங் கருத்தறியே
னெனக்கருளக் கருது வாயே. (99)

அருளுடைய பரம்பொருளே மன்றி லாடு மானந்தப் பெருவாழ்
வே யன்புளோர்தந், தெருளுடைய வுளமுழுதுங் கோயில் கொண்ட
சிவமேமெய் யறிவுருவாந் தெய்வமேயிம், மருளுடைய மனப்பேதை
நாயி னேன்செய் வன்பிழையைச் சிறிதேனு மதித்தி யாயி, லிருளு
டைய பவக்கடல்விட் டேறே னென்னை யேற்றுவதற் கெண்ணுக
வென் னின்பத் தேவே. (100)

சிவநேச வெண்பா.

பேரறிவாற் கண்டும் பெரியோ ரறியாரேல்
யாரறிவார் யானோ வறிகிற்பேன் — சீர்கொள்
வெளிவாய் வெளிக்குள் வெளியா யொளிக்கு
ளொளியாகி நின்ற வுனை. (101)

பூதமெங்கே மற்றைப் புலனெங்கே பல்லுயிரின்
பேதமெங்கே யண்டமெனும் பேரெங்கே — நாதமெங்கே
மண்வடிவ மெங்கே மறையெங்கே வான்பொருணீ
பொன்வடிவங் கொள்ளாத போது. (102)

உப்பிருந்த வோடோ வொதியோ வுலாப்பிணமோ
வெப்பிருந்த காடோ வினைச்சுமையோ — செப்பறியேன்
கண்ணப்ப ருக்குக் கனியனையாய் நிற்பணியா
துண்ணப் பருக்கு முடம்பு. (103)

சொல்லுகின்ற வுள்ளுயிரைச் சோர்வுற் றிடக்குளிர்ந்து
கொல்லுகின்ற நஞ்சிற் கொடிதன்றோ — வொல்லுமன்றத்
தெம்மானின் றாட்கமல மெண்ணாது பாழ்வயிற்றிற்
சும்மா வடைக்கின்ற சோறு. (104)

சோர்படைத்துச் சோறென்றாற் றொண்டைவிக்கிக் கொண்டோடி
மார்படைத்துச் சாவினு மாநன்றே — சீர்படைக்க
வெண்ணுவா ரெண்ணு நிறைவாகின் றானேத்தா
துண்ணுவா ருண்ணு மிடத்து. (105)

சேலேர்விழியருட்டேனேயடியருட்டித்திக்குஞ்செம்
பாலேமதுரச்செம்பாகேசொல்வேதப்பனுவன்முடி
மேலேவிளங்கும்விளக்கேயருளொற்றிவித்தகனார்
மாலேகொளுமெழின்மானேவடிவுடைமாணிக்கமே. (118)

கருவேதவாயவறவென்னெஞ்சகத்துநற்களிப்பொடொற்றிக்
குருவேயெனுநின்கணவனுநீயுங்குலவுமந்தத்
திருவேயருள்செந்திருவேயமுதற்பணிசெய்யத்தந்த
மருவேமருவுமலரேவடிவுடைமாணிக்கமே. (119)

எண்ணியவெண்ணங்களெல்லாம்பலிக்கவெனக்குனருள்
பண்ணியவுள்ளங்கொளுனுள்ளும்புறம்பும்பரிமளிக்கும்
புண்ணியமல்லிகைப்போதேயெழிலொற்றிப்புரனார்பான்
மண்ணியபச்சைமணியேவடிவுடைமாணிக்கமே. (120)

பத்தர்தம்முள்ளத்திருக்கோயின்மேவும்பரம்பரையே
சுத்தமெய்ஞ்ஞானவொளிப்பிழம்பேசிற்சுகானந்தமே
நித்தநின்சீர்சொலவெற்கருள்வாயொற்றிநின்மலருன்
மத்தர்தம்வாமமயிலேவடிவுடைமாணிக்கமே. (121)

புண்ணிய விளக்கம்.

உற்றவிடத்திலுந்தவமக்குடையோர்வைத்தவைப்பனைச்
சற்றமனத்திற்புகுங்கருணைக்கனியைவிடைமேற்காட்டுவிக்கு
மற்றமடைந்தநெஞ்சேசீயஞ்சேலென்மேலானைகண்டாய்
செற்றமகற்றித்திறலளிக்குஞ்சிவாயநமவென்றிடுநீறே. (122)

பாடற்கினியவாக்களிக்கும்பாலுஞ்சோறும்பரித்தளிக்குங்
கூடற்கினியவடியவர்தங்கூட்டமளிக்குங்குணமளிக்கு
மாடற்கினியநெஞ்சேசீயஞ்சேலென்மேலானைகண்டாய்
தேடற்கினியசீரளிக்குஞ்சிவாயநமவென்றிடுநீறே. (123)

அருணை விளக்கம்.

பொன்றும்வாழ்க்கையைநிலையெனநினைத்தேபுலையமங்கையர்புழுநெளியளற்றி, லென்றும்வீழ்ந்துழன்மடமையைவிடுத்தேயெழில்கொளொற்றியூர்க்கென்னுடன்போந்து, நன்றதீம்பலாச்சுளையினுமினிப்பாய்த்தொண்டர்தங்களுச்சுவைபெறவூறி, யொன்றுமோஞ்சிவசண்முகசிவவோமோஞ்சிவாய வென்றன்னுதிமனனே. (124)

வாதுசெய்ம்மடவார்தமைவிழைந்தாய்மறலிவந்தினைவாவெனவழைக்கி, லேதுசெய்வையோவேழைநீயந்தோவெழில்கொளொற்றியூர்க்கென்னுடன்போந்து, போதுவைகியநான்முகன்மகவான்புணரிவைகியபூமகள்கொழுந, ரோதுமோஞ்சிவசண்முகசிவவோமோஞ்சிவாய வென்றன்னுதிமனனே. (125)

அவலத் தழுங்கல்.

காயமென்பதாகாயமென்றறியேன்கலங்கினேனெருகளைகளுமில்லேன், சேயநன்னெறியணித்தெனக்காட்டுந்தெய்வநின்னருட்டிறஞ்சிறிதடையேன், றாயநின்னடியவருடன்கூடித்தொழும்புசெய்வதேசுகமெனத்துணியேன், றீயனேன்றனையாள்வதெவ்வாறோதிகழுமொற்றியூர்த்தியாகமாமணியே. (126)

காட்சிப் பெருமிதம்.

திரைபடாதசெழுங்கடலேசற்று
முறைபடாமலொளிசெய்பொன்னேபுகழ்
வரைபடாதவனர்வல்லிகேசநீ
தரைபடாக்கந்தைசாத்தியதென்கொலோ (127)

சிந்தைநின் றசிவாநந்தச்செல்வமே
யெந்தையேயெமையாட்கொண்டதெய்வமே
தந்தையேவலிதாயத்தலைவநீ
கந்தைசுற் றுங்கணக்கதுவென்கொலோ. (128)

வேலைகொண்டவிடமுண்டகண்டனே
மாலைகொண்டவளர்வல்லிகேசனே
பாலைகொண்டபராபரநீபழஞ்
சேலைகொண்டதிறமிதுவென்கொலோ. (129)

பண்ணுவார்க்கருளும்பரமேட்டியே
மன்னுமாமணியேவல்லிகேசனே
வுன்னைநீயிங்குடுத்தியகந்தையைத்
துன்னுவாரிலையோபரஞ்சோதியே. (130)

கடுத்ததும்பியகண்டவகண்டனே
மடுத்தநற்புகழ்வான்வல்லிகேசநீ
தொடுத்தகந்தையைநீக்கித்துணிந்தொன்றை
யுடுத்துவாரிலையோவிவ்வுலகிலே. (131)

ஆலடுத்தவரும்பொருளேதிரு
மாலடுத்துமகிழ்வல்லிகேசநீ
பாலுடுத்தபழங்கந்தையைவிடத்
தோலுடுப்பதுவேமிகத்தூய்மையே. (132)

துன்னுமாமருந்தேசுடரேயருண்
மன்னுமாணிக்கமேவல்லிகேசரே
தன்னுகந்தையைச்சுற்றிநிற்பீரெனி
லென்னநீரெமக்கீயும்பரிசதே. (132)

மாசில்சோதிமணிவிளக்கேமறை
வாசிமேவிவரும்வல்லிகேசரீ
தூசில்கந்தையைச்சுற்றியையோபர
தேசிபோலிருந்தீரென்கொல்செய்வனே. (133)

தேருநற்றவர்சிந்தையெனுந்தலஞ்
சாருநற்பொருளாம்வலிநாயகீர்
பாருமற்றிப்பழங்கந்தைசாத்தினீர்
யாருமற்றவரோசொலுமையரே. (134)

மெல்லிநாயவிரைமலர்ப்பாதனே
வல்லிநாயமருவியநாதனே
புல்லிநாயவிக்கந்தையைப்போர்த்திஞற்
கல்லிநாயநெஞ்சங்கரைகின்றதே (135)

அபராதவிண்ணப்பம்.

கட்டினேன்பாபக்கொடுஞ்சுமையெடுப்பேன்தடும்பிழைக்குநிடேட்டின்னே விட்டிலேனோயோகைவிடிற்சிவனேவேறுநான்யாதுசெய்வேனே சுட்டிலாப்பொருளேசுகப்பெருங்கடலேதூய்த்திருவொற்றியூர்த்துணையே தட்டிலாக்குணத்தோர்புகழ்செயுக்குகனேதந்தருடருந்தயாநிதியே. (136)

அறிவரும் பெருமை.

என்னைநின்னவருக்கொண்டுநின்கருணையென்னுநன்னீரினுலாட்டி,யன்னையப்பனுமாய்ப்பரிவுகொண்டாண்டவண்ணலேநண்ணரும்பொருளே, வுன்னருந்தெய்வநாயகமணியேயொற்றியூர்மேவுமென்னுறவே, நன்னர்செய்தின்றோயென்செய்வேனிந்நாய்க்கந்குலைகம்மாறு நாயேனே. (137)

எழுத்தறிபெருமான் மாலை.

சிந்தைமயங்கித்தியங்குகின்றநாயேனை
முந்தைவினைதொலைத்துன்மொய்கழற்காளாக்காதே
நிந்தையுறுநோயாளிசுழலவைத்தலைத்தியதோ
வெந்தையீதொற்றியெழுத்தறியும்பெருமானே. (138)

நன்னெறிசேரன்பர்தமைநாடிடவுநின்புகழின்
சென்னெறியைச்சேர்ந்திடவுஞ்செய்தாயுனக்குனக்கு
முன்னறியேன்பின்னறியேன்மூடனேன்கைம்மாறிங்
கென்னறிவேனையாவெழுத்தறியும்பெருமானே. (139)

பூமாந்தும்வண்டெனநின்பொன்னருளைப்புண்ணியர்க
டாமாந்திநின்னடிக்கீழ்ச்சார்ந்துநின்றாரையோநான்
காமாந்தகாரமெனுங்கள்ளுண்டுகண்மூடி
யேமாந்தேனொற்றியெழுத்தறியும்பெருமானே. (140

நீக்கமிலாமெய்யடியர்நேசமிலாப்பொய்யடியே
னூக்கமிலாநெஞ்சத்தினோட்டகலச்செய்வாயே
றாக்கமிலாவானந்தத்தூக்கமன்றிமற்றுமிங்கோ
ரேக்கமிலேனொற்றியெழுத்தறியும்பெருமானே. (141)

வெங்கொளித்தேன்போன்றவினையால்வெதும்பிமன
மங்கொளிக்காதுன்னையழைத்தழுதுவாடுகின்றே
னிங்கொளிக்காகஞ்சமுண்டவென்னருமையப்பாநீ
யெங்கொளித்தாயொற்றியெழுத்தறியும்பெருமானே. (142)

திருப்புகழ் விலாசம்.

மாறாயூத்தவென்னெஞ்சினைத்திருத்திமயக்கநீக்கிடவருதலென்
றோ,வேறாயூத்தவென்னுயிர்க்குயிரேயாயுமாகிநின்றிலங்கியபொருளே,
நீறாயூத்தொளிநிறைந்தவெண்ணெருப்பேநித்தியானந்தர்க்குற்றநல்லு
றவே, சேறாயூத்தசெந்தாமரைமுத்தந்திகழுமொற்றியூர்ச்சிவபெருமா
னே. (143)

திருச்சாதனத் தெய்வத்திறம்.

அன்புடனின்பம்புகழாப்பாவிநாவையறுத்துணியேனின்னழ
கை, யமர்ந்துகாணாத்தன்புறுகண்ணிரண்டினையுஞ்சூன்றேனின்னைத்
தொழாக்கையைவாளாநறுக்குண்டமாக்கேன்வன்பற,நின்றனைவணங்
காத்தலையையந்தோமடித்திலேனெறியேபோல்வளர்ந்தேனென்னை,
யின்பறவல்லெரியிடைவீழ்த்திடினுமன்றியென்செயினும்போதாதே
யெந்தாயெந்தாய். (144)

ஆடலமுதப்பத்து.

சிந்தைநொந்துநொந்தயர்கின்றேஞ்சிவனேசெய்வதோர்ந்திலேன்
நீக்குணமுடையேன், வந்துநின்னடிக்காட்செயவென்றால்வஞ்சநெஞ்
சமென்வசநின்றதிலையே, யெந்தைநின்னருளுண்டெனிலுய்வேனில்
லையென்னிலெனில்லையுய்ந்திடலே, யந்திவானிறத்தொற்றியூரசேயம்
பலத்தினின்றாடல்செய்யமுதே. (145)

ஒருகணப்பொழுதேனுநின்னடியையுள்கிடாதுளமோவென்றத
னூற், றிருகணப்பெறாநீசனேன்செய்யுந்திறமறிந்திலேன்செப்பலெ
ன்சிவனே, வருகணத்துடனிற்குமோவிழுமோமாயுமோவெனமயங்கு
வேன்றன்னை, யருகணைத்தருளொற்றியூரிறையேயம்பலத்தினின்றா
டல்செய்யமுதே. (146)

திருவடிச் சரண்புகல்.

ஓடலெங்கணு நமக்கென்ன குறைகா ணுற்றநற் றுணையொன் றுமி ல்லார்போல், வாடனெஞ்சமே வருந்தியென் னுடனே மகிழ்ந்துநாமிருவருஞ்சென் றுமகிழ்வாய், கூடனேர்திருவொற்றியூரகத்துக்கோயின்மேவிநங்குடிமுழுதாளத், தாடளந்தருநமதருட்செல்வத்தந்தையாரடிச்சரண் புகலாமே. (147)

உடுக்கவேண்டிமுன் னுடையிழந்தார்போ லுள்ளவாகுமென் றன்னிடாதென்ப, மடுக்கவேண்டிமுன் வாழ்விழந்தாயேவாழவேண்டிடில் வருந்தியென் னுடனே, யடுக்கவேண்டிநின் றழுதழுதேத்தியருந்தவத்தினரழிவுறாப்பதத்தைத், தடுக்கவேண்டுநல்லொற்றியூர்ச்செல்வத்தந்தையாரடிச்சரண் புகலாமே. (148)

சிவானந்தப் பத்து.

இச்சையுண்டெனக்குன் றிருமலர்த்தாளையெய்தும்வண்ணமிங் கென்செயவல்லேன், கொச்சைநெஞ்சமென் குறிப்பினில்லாது குறிப்பின்றன்மதிப்பினிவ்வுலகிற், பிச்சையுண்டெனிற் பிச்சரிற்சிரும்பெயருண்மனோநாயெனவுழைத்தேன், செச்சைமேனியெந்திருவொற்றியரசே தில்லையோங்கியசிவானந்தத்தேனே (149)

தவத்திறம் போற்றல்.

உள்ளும்புறமுநிறைந்தடியாருள்ளமதுரித்தூறநின்ற
தெள்ளமுதாஞ்சிவபெருமான்றியாகப்பெருமான்றிருமுகத்தைக்
கள்ளக்தவிர்க்குமொற்றியிற்போய்க்கண்டேன்பசிநோய்க்கண்டிலனே
வெள்ளலிகத்தேனம்மாநானென்னதவந்தான்செய்தேனோ (150)

துன்னுஞ்சோமசுந்தரனார் தூயமதுரைநகரளித்த
தென்னர்பெருமான்சிவபெருமான்றியாகப்பெருமான்றிருவழகைப்
பன்னுமொற்றிநகர்தன்னிற்பார்த்தேன்வினைபோம்வழிபார்த்த
வென்னைமறந்தேனம்மாநானென்னதவந்தான்செய்தேனோ. (151)

சிகாமணி மாலை.

அலையோய்கடலிற் சிவயோகமேவியவந்தணர்தந்
நிலையோர்சிறிதுமறியேனெனக்குன்னிமலவருண்
மலையோங்குவாழ்க்கையும்வாய்க்குங்கொலோபொன்மலையென்கின்ற
சிலையோய்வைத்தியநாதாவமரர்சிகாமணியே. (152)

எதிர்கோட் பத்து.

ஆனந்தக்கூத்தனையம்பலத்தானையற்புதத்தேனையெம்மாதிபிரானைத், தேனந்தக்கொன்றையஞ்செஞ்சடையானைச்செங்கண்விடையனை யெங்கண்மணியை, மோனந்தத்தார்பெறுந்தானந்தத்தானைமுத்தனைமுத்தியின்வித்தனைமுக்கைத், யீனந்தக்காதெனையென்றுகொண்டானையின்றையிரவிலெதிர்ந்துகொள்வேனே. (153)

அடுத்தவர்க்கெல்லாமருள்புரிவானையம்பலக்கூத்தனையெம்பெருமானைத், தடுத்தெனையாண்டுகொண்டன்பளித்தானைச்சங்கரன்றன்னையென்றந்தையைத்தாயைக், கடுத்ததும்புமணிகண்டத்திறைனைக்கண்ணுதலானையெங்கண்ணகலானை, யெடுத்தெனைத்துன்பம்விட்டேறவைத்தானையின்றையிரவிலெதிர்ந்துகொள்வேனே. (154)

வளங்கொளுந்தில்லைப்பொன்மன்றுடையானைவானவர்சென்னியின்மாணிக்கத்தன்னைக்களங்கமிலாதகருத்துடையானைக்கற்பனைமுற்றங்கடந்துநின்றானை, யுளங்கொளுமென்றனுயிர்த்துணையானையுண்மையையெல்லாமுடையனைத்தன்னை, யிளம்பிறைசூடியசெஞ்சடையானையின்றையிரவிலெதிர்ந்துகொள்வேனே. (155)

நெஞ்சோடு நேர்தல்.

அணிகொள்கோவணக்கந்தையேநமக்கிங்கடுத்தவாடையென்றறிமடநெஞ்சே, கணிகொண்மாமணிக்கலன்கணங்கடவுட்கண்ணுண்மாமணிக்கண்டிகைகண்டாய், பிணிகொள்வன்பவநீக்கும்வெண்ணீறேபெருமைச்சாந்தமாம்பிறங்கொளிமன்றிற், றிணிகொள்சங்கரசிவசிவவென்றுசென்றுவாழ்த்தலேசெய்தொழிலாமே. (156)

இன்னுமெங்ஙனமேதுகின்றனையோவேழைநெஞ்சமேயிங்குமக்குத்தான், முன்னைநாம்பிறந்துழன்றவத்தயரைமுன்னிலென்குலைமுறுக்குகின்றனகா,ணென்னைநீயெனக்குறுத்துணையன்றோவென்சொலேற்றிலையெழில்கொளும்பாதலின், மன்னுநம்முடைவள்ளலைநினைத்தான்மற்றுநாம்பிறவாவகைவருமே. (157)

பிறந்துமுன்னரிவ்வுலகினும்பெண்டிபிள்ளையாதியபெருந்தொடக்குழந்தே, பிறந்தவீழ்கதியிடைவிழுந்துழன்றேயிருந்தசேடத்தினித்தனையெல்லா, மறந்துவிட்டனைநெஞ்சமேநீதான்மதியிலாயதுமறந்திலெனெளியேன், றுறந்தநாம்பெருஞ்சுகத்தினையடையச்சொல்லும்வண்ணநீதொடங்கிடுநன்றே. (158)

நன்றுசெய்வதற்குடன்படுவாயெனல்லநெஞ்சமேவல்லவிவ்வண்ண,மின்றுசெய்திநீநாளையென்பாயேலின்றிருந்தவர்நாளைநின்றிலரே, யொன்றுகேண்மதிகண்முதன்முனிவோருக்கவர்க்கணைஞ்சிக்கெனத்துறந்தா,ரன்றுமுன்னரேகடந்தனரன்றியதற்குமுன்னரேயகன்றனரன்றே. (159)

தூயநெஞ்சமேசுகம்பெறவேண்டிற்சொல்லுவாம்துசொல்லனவன்றேற், காயமாயமாக்கான்செறிந்துலவுங்கள்வரைவரைக்கைவிடுத்ததன்மேற்,பாயவாணவப்பகைகெடமுருக்கிப்பகலிராவிலாப்பாக்கரினின்றே, யாயவாணந்தக்கூத்துடைப்பரமாகாயசோதிகண்டமருநணியே.

நெஞ்சறைகூவல்.

திருவினையகன்றலைச்சப்படைபெறவான்றிருக்கண்சாத்தியதிருமலர் பதத்தார், கருவினின்றமெய்ம்போல்பவர்தம்மைக்காத்தளிப்பதேதக்கதென னக்கொண்டார், குருவினின்றவாருவெனநின்றோரொற்றியூரிடையுற்றன ரவர்க்கு, மருவினின்றநண்மணங்கொளுமலர்ப்பூமாலைசூட்டிடுதம்வரு தியென்மனனே. (161)

குளங்கொள்கண்ணினர்தற்றமேமெய்சயினுங்கனமென்றேறயனைத் கொண்டருள்புரிவோர், குளங்கொளன்பர்தமுள்ளகத்திருப்போரொற் றியூரிடம்பற்றியபுனிதர், களங்கொள்கண்டரெண்டோளர்கண்களர் கல்லைவில்லெனக்கண்டவரவர்தம், வளங்கொள்கோயிற்குத்திருமெழு க்கிடுவோம்வாழ்கநீயுடன்வருதியென்மனனே. (162)

நெஞ்சைத் தேற்றல்.

சென்றுவஞ்சர்தம்புறங்கடைநின்றுதிசைக்கவென்னுமென்றிற னிலாநெஞ்சே, யொன்றுமஞ்சலையென்னுடன்கூடியொற்றியூர்க்கின் றுவருதியேலங்கு,மன்றண்மேவியவள்ளலார்மகிழ்ந்துவாழ்கின்றாரவர் மலரடிவணங்கி, நன்றுவேண்டியயாவையும்வாங்கிநல்குவேனெனைநம் புதிமிகவே. (163)

மறப்பிலாச்சிவயோகம்வேண்டினும்வழுத்தரும்பெருவாழ்வுவே ண்டினு, மிறப்பிலாநின்னுயிருக்கவேண்டினுமியாதுவேண்டினு மீகுவனுனக்கே, பிறப்பிலானெங்கள்பரசிவபெருமான்பித்தனென்று நீபெயர்ந்திடனெஞ்சே, வரப்பிலானருட்கடலமைணமர்ந்துவாழுமொற்றி யின்வருதியென்னுடனே. (164)

சென்றநீபுகும்வழியெலாமுன்னைத்தேடவென்வசமல்லவென் னெஞ்சே, யின்றரைக்கணமெங்குநேர்ந்தோடாதியல்கொளொற்றியூர்

தூக்கமுற்றினுஞ்சோம்புடைமனனேசொல்வதென்னையோர்சுக
மிதுவென்றே யாக்கமுற்றநான்வாழநீநரகிலாழநேர்ந்திடுமென்றுகண்
டறிகா ணீக்கமுற்றிடாநின்மலனமர்ந்துநிகழுமொற்றியூர்நியமத்திற்
சென்றே யேக்கமற்றிடச்செல்கின்றேனுனக்குமியம்பினேன்பழியில்
லையென்மீதே. (175)

நாளவத்தலைசல்.

கருங்கணஞ்சூழக்கசியுமிவ்வுடலங்கருதுமிக்கணமிருந்ததுதான்
வருங்கணமேதாய்முடியுமோவையோவஞ்சனேனென்செயவல்லேன்
பெருங்கணஞ்சூழ்வடவனத்தாடும்பித்தனேயுத்தமதவத்தோர்
மருங்கணவுறநின்றரகரவெனுஞ்சொல்வான்புகுமொற்றியூர்வாழ்வே.

மடிக்குறுநீர்மேலெழுத்தினுக்கிடவேமைவடித்தெடுக்குநர்போல
நொடிக்குளேமறையுமுடம்பினைவளர்க்கநொந்தனனொந்ததுமல்லாற்
படிக்குளேமனத்தாற்பரிவுறுகின்றேன்பாவியேன்றனக்கருள்புரியாய்
வடிக்குறுந்தமிழ்கொண்டன்பருக்கருளும்வள்ளலேயொற்றியூர்வாழ்
[வே (177)

கணத்தினிலுலகமழிதரக்கண்டுங்கண்ணிலார்போற்கிடந்துழைக்குங்
குணத்தினிற்கொடியேன்றனக்குநின்னருடான்கூடுவதெவ்வணமறி
[யேன்
பணத்திற்பொலியும்பாம்பணையார்த்தபரமனேபிரமன்மாலறியா
வணத்தினின்றமாணிக்கச்சுடரேவள்ளலேயொற்றியூர்வாழ்வே. 178

அருட்டிறத்தலைசல்.

பொன்னாசையோடும்புலைச்சியர்தம்பேராசை
மண்ணாசைமன்னுகின்றமண்ணாசைப்பற்றறுத்தே
யுன்னாசைகொண்டேயென்னொற்றியப்பாகாண்மகிழ்ந்தென்
மின்னாரும்பொன்மேனிவெண்ணீற்றழகைப்பாரேனோ. (179)

கள்ளுண்டநாய்போற்கடுங்காமவெள்ளமுண்டு
துள்ளுண்டநெஞ்சத்துடுக்கடக்கியன்பர்கட
முள்ளுண்டதெள்ளமுதேயொற்றியப்பாவுன்றனைநான்
வெள்ளுண்டநந்திவிடையீதிற்காணேனே. (180)

புண்ணியமோர்போதும்புரிந்தறியாப்பொய்யவனே
னெண்ணியதோரெண்ணமிடரின்றிமுற்றிட
வுண்ணிலவுநல்லொளியேயொற்றியப்பாவுன்னுடைய
தண்ணிலவுதாமரைப்பொற்றாண்முடியிற்கொள்வேனே. (181)

வெண்ணிலா.

தன்னையறிந்தின்பமுறவெண்ணிலாவே - ஒரு
தந்திரநீசொல்லவேண்டும்வெண்ணிலாவே. (182)

நாதமுடிமேலிருந்தவெண்ணிலாவே - அங்கே
நானும்வரவேண்டுகின்றேன்வெண்ணிலாவே. (183)

சச்சிதாநந்தக்கடலில்வெண்ணிலாவே - நானுந்
தாழ்ந்துவிழவேண்டுகின்றேன்வெண்ணிலாவே. (184)

இராப்பகலில்லாவிடத்தேவெண்ணிலாவே - நானும்
இருக்கவெண்ணிவாடுகின்றேன்வெண்ணிலாவே. (185)

தேசுநிறமாய்நிறைந்தவெண்ணிலாவே - நானுஞ்
சிவமயமதாய்விழைந்தேன்வெண்ணிலாவே. (186)

போதநடுவூடிருந்தவெண்ணிலாவே - மலப்
போதமறவேண்டுகின்றேன்வெண்ணிலாவே. (187)

ஆருமறியாமலிங்கேவெண்ணிலாவே - அரு
ளாளர்வருவாரோசொல்லாய்வெண்ணிலாவே. (188)

அந்தரங்கசேவைசெய்யவெண்ணிலாவே - யெங்க
ளையர்வருவாரோசொல்லாய்வெண்ணிலாவே. (189)

வேதமுடிமேலிருந்தவெண்ணிலாவே - மல
வேதையுளவேதுசொல்லாய்வெண்ணிலாவே. (190)

குண்டலிப்பால்நின்றிலங்கும்வெண்ணிலாவே - அந்த
குண்டலிப்பால்வேண்டுகின்றேன்வெண்ணிலாவே. (191)

ஆதியந்தமென்றுரைத்தார்வெண்ணிலாவே - அந்த
ஆதியந்தமாவதென்னவெண்ணிலாவே. (192)

வித்திலாமலேவிளைந்தவெண்ணிலாவே - நீதான்
விளைந்தவண்ணமேதுசொல்லாய்வெண்ணிலாவே (193)

முப்பொருளுமொன்றதென்பார்வெண்ணிலாவே - அந்த
மூன்றுமொன்றாய்முடிந்ததென்னவெண்ணிலாவே. (194)

நானதுவாய்நிற்கும்வண்ணம்வெண்ணிலாவே - ஒரு
ஞானநெறிசொல்லுகண்டாய்வெண்ணிலாவே. (195)

ஞானமயமாய்விளங்கும்வெண்ணிலாவே - என்னை
நானறியச்சொல்லுகண்டாய்வெண்ணிலாவே. (196)

வாசிவாசியென்றுரைத்தார்வெண்ணிலாவே - அந்த
வாசியென்னப்பேசுகண்டாய்வெண்ணிலாவே. (197)

ஐந்தலைப்பாம்பாட்டுகின்றார்வெண்ணிலாவே - அவர்
அம்பலத்தினின்றதென்னவெண்ணிலாவே. (198)

ஓரெழுத்திலைந்துண்டென்பார்வெண்ணிலாவே - அது
ஊமையெழுத்தாவதென்னவெண்ணிலாவே. (199)

அம்பலத்திலாடுகின்றார்வெண்ணிலாவே - அவர்
ஆடுகின்றவண்ணமென்னவெண்ணிலாவே. (200)

அந்தரத்திலாடுமென்றோர்வெண்ணிலாவே - அவர்
ஆடும்வகையெப்படியோவெண்ணிலாவே. (201)

வேட்கை நொந்து - தலைமகள் பாங்கியோடு கூறல்.

என்னுயிரிற்கலந்துகலந்தினிக்கின்றபெருமானென்னிறைவன் பொதுவினிடமியற்றுநடராஜன், றன்னையறியாப்பருவத்தென்னை மணம்புரிந்தான்றனையறிந்தபருவத்தேயெனையறியவிரும்பான், பின்னையன்றிமுன்னுமொருபிழைபுரிந்தேனில்லை பெண்பரிதாபங்காணல் பெருந்தகைக்குமழகோ, கன்னவென்றற்கைக்கின்றகணக்குமுண்டோவவன்றன்கணக்கறிந்தும்விடுவேனோகண்டாயென்றோழி. 202

சின்மயமாம்பொதுவினிலேதன்மயமாய்நின்றுதிருநடஞ்செய்பெருங்கருணைச்செல்வநடராஜ, னென்மயநானறியாதவிளம்பருவந்தனிலேயென்னைமணம்புரிந்ததனையெல்லாருமறிவா, ரின்மயமல்லாதவர்போலின்றுமணந்தருளானிறையளவும்பிழை புரிந்தேனில்லையவனிதயங், கன்மயமோவன்றுசுவைக்கனிமயமேயென்னுங்கணக்கறிந்தும்விடுவேனோகண்டாயென்றோழி. (203)

எண்குணத்தானெல்லார்க்குமிறைவனெல்லாம்வல்லானென்னகத்தும்புறத்துமுளானின்பநடராஜன், பெண்குணத்தையறியாதவிளம்பருவந்தனிலேபிச்சேற்றிமணம்புரிந்தான்பெரிதுகளித்திருந்தேன், வண்குணத்தாலநுபவநானறியநின்றபொழுதில்வந்தறியானின்பமொன்றுந்தந்தறியானவனும், வெண்குணத்தானல்லனிங்கல்லனெனப்பலகால்விழித்தறிந்தும்விடுவேனோவிளம்பாயென்றோழி. (204)

ஊன்மறந்தவுயிரகத்தேயொளிநிறைந்தவொருவனுலகமெலாமுடையவனென்னுடையநடராஜன், பான்மறந்தசிறியவிளம்பருவமதி

ன்மாலைப்பரிந்தணிந்தான்றெரித்ததனிப்பருவமிதிற்பரியான், றான்ம
றந்தானெனினுமிங்குநான்மறக்கமாட்டேன்றவத்தேறியவத்திழியச்ச
ம்மதமும்வருமோ, கோண்மறந்தகுடியேபோன்மிடியேனானவன்றன்
குணமறிந்தும்விடுவேனோகூறாயென்றோழி. (205)

முன்னமுடிபு.

வெறுத்துரைத்தேன்பிழைகளெலாம்பொறுத்தருளல்வேண்டும் விளங்கறிவுக்கறிவாகிமெய்ப்பொதுவினடிப்போய், கறுத்துரைத்தார்தமக்குமருள்கனிந்துரைக்கும்பெரியகருணைநெடுங்கடலேமுக்கண்ணோங்குகரும்பே, மறுத்துரைப்பதெவனருணீவழங்குகினுமன்றிமறுத்திடினுமுன்னையலான்மற்றொருசார்பறியேன் செறுத்துரைத்தவுரைகளெலாந்திருவருளேயென்றுசிந்திப்பதல்லாமற்செய்வகையொன்றிலனே.

அன்பு மாலை.

எதுமறியாதிருளிலிருந்தசிறியேனையெடுத்து விடுத்தறிவுசிறிதே தெய்த்திடவும்புரிந்து, வோதுமறைமுதற்கலைகளோதாமலுணரவுணர்விலிருந்துணர்த்தியருளுண்மைநிலைகாட்டித், தீதுசெறிசமயநெறிசெல்லுதலைத்தவிர்த்துத்திருவருண்மெய்ப்பொது நெறியிற்செலுத்தியநான்மருளும், போதுமயங்கேன்மகனேயென்றமயக்கெல்லாம்போக்கியெனக்குள்ளிருந்தபுனிதபரம்பொருளே. (207)

அருட்பிரகாச மாலை.

தற்போதந்தோன்றாததலந்தனிலேதோன்றுந்தாண்மலர்கள்வருந்திடத்தனித்துநடந்தருளி, யெற்போதங்ககன்றிரவில்யானிருக்குமிடம்போந்தெழிற்கதவந்திறப்பித்திவ்வெளியேனையழைத்துப், பொற்போதவண்ணமென்றென்கைதனிலேயளித்துப்புலையொழிக்கநிலைத

ளிலேபொருந்துகவென் றுரைத்தாய், சிற்போதமயமானதிருமணிமன்
றிடத்தேசிவமயமாமநுபோகத்திருநடஞ்செய்யரசே. (208)

சகலமொடுகேவலமுந்தாக்காதவிடத்தேதற்பரமாய் விளங்குகின்ற
சாண்மலர்கள்வருந்த, பகலொழியகடுவிரவிலடைந்தருளியடியேன்பரியு
மிடந்தடைந்துமணிக்கதவுதிறப்பித்துப், புகலுறுகவருகவெனவழைத்
தெனதுகரத்தேபொருந்தவொன்றுகொடுத்தனை நின்பொன்னருளை
ன்னென்பே, னுகலொழியப்பெருந்தவர்களுற்றுமகிழ்ந்தேத்தவுயர்
பொதுவிலின்படமுடையபரம்பொருளே. (209)

ஆளுடையபிள்ளையாரருண்மாலை.

உயிரநுபவமுற்றிடிலதனிடத்தேயோங்கருளநுபவமுறுமச்
செயிரிலனல்லநுபவத்திலேசுத்தசிவவநுபவமுறுமென்றாய்
பயிலுமூவாண்டிற்சிவைதருஞானப்பான்மகிழ்ந்துண்டுமெய்ந்நெறியா
பயிர்தழைந்துறவைத்தருளியஞானபந்தனென்றோங்குசற்குருவே. [ம்

தத்துவநிலைகடனித்தனியேறித்தனிப்பராதமாந்தலத்தே
யொத்ததன்மயமாநின்னைநீயின்றியுற்றிடலுயிரநுபவமென்
றித்தரணிவெளியினென்னையென்னிடத்தேயிருந்துவாறளித்தனைய
[ன்றோ
சித்தநற்காழிஞானசம்பந்தச்செல்வமேயெனதுசற்குருவே. (211)

தனிப்பராதவெளியின்மேனினதுதன்மயந்தன்மயமாக்கிப்
பனிப்பிலாதென்றுமுள்ளதாய்விளங்கிப்பரம்பரத்துட்புறமாகி
யினிப்புறவொன்றுமியம்புறாவியல்பாயிருந்தேயருளநுபவமென்
றெனக்கருள்புரிந்தாய்ஞானசம்பந்தனென்னுமென்சற்குருமணியே.

உள்ளதாய்விளங்குமொருபெருவெளிமேலுள்ளதாய்முற்றுமுள்ளது
[வாய்
நன்னதாயெனதாய்நானதாய்த்தனதாய்நவிற்றருந்நானதாயின்ன

வின்னொணுவப்பாலப்படிக்கப்பால்வெறுவெளிசிவவநுபவமென்
றுள்ளுறவளித்தஞானசம்பந்தவுத்தமசுத்தசற்குருவே. (213)

தெய்வமணிமாலை.

நிலையுறநிராசையாமுயர்குலப்பெண்டிரொடுநிகழ்சாந்தமாம்புதல்
வனும், நெறிபெறுமுதாரகுணமென்னுநற்பொருளுமருணீக்குமறிவா
ந்துணைவனும், மலைவறுநிராங்காரநண்பனுஞ்சுத்தமுறுமனமென்னுந
ல்லேவலும், வருசகலகேவலமிலாதவிடமும்பெற்றுவாழ்கின்றவாழ்வ
ருளுவாய், அலையிலாச்சிவஞானவாரியேயானந்தவமுதமேகுமுதமலர்
வா,யணிகொள்பொற்கொடிபசுங்கொடியிருபுறம்படர்ந்தழகுபெறவரு
பொன்மலையே, தலைவர்புகழ்சென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்தல
மோங்குகந்தவேளே, தண்முகத்துய்யமணியுண்முகச்சைவமணிசண்
முகத்தெய்வமணியே. (214)

ஒருமையுடனினதுதிருமலரடிநினைக்கின்றவுத்தமர்தமுறவுவேண்
டும், உள்ளொன்றுவைத்துப்புறம்பொன்றுபேசுவாருறவுகலவாமை
வேண்டும், பெருமைபெறுநினதுபுகழ்பேசவேண்டும்பொய்மைபேசா
திருக்கவேண்டும், பெருநெறிபிடித்தொழுகவேண்டுமதமானபேய்பிடி
யாதிருக்கவேண்டும், மருவுபெண்ணாசையைமறக்கவேவேண்டுமுனைம
றவாதிருக்கவேண்டும், மதிவேண்டுநின்கருணைநிதிவேண்டுநோயற்ற
வாழ்வினான்வாழவேண்டும், தருமமிகுசென்னையிற்கந்தகோட்டத்து
ள்வளர்தலமோங்குகந்தவேளே, தண்முகத்துய்யமணியுண்முகச்சை
வமணிசண்முகத்தெய்வமணியே. (215)

நாம்பிரமநமையன்றியாம்பிரமம்வேறில்லைநன்மைதீமைகளுமில்
லை நவில்கின்றவாகியாத்தமிரண்டினுமொன்றநடுநின்றதென்றுவீ
ணொடு, போம்பிரமநிதிகேட்போர்பிரமையாகவேபோதிப்பர்சாதிப்பர்
நாம், புன்மைநெறிகைவிடார்தம்பிரமம்வினையொன்றுபோக்கிடிற்

போகவிடுவார், சாம்பிரமமாமிவர்கடாம்பிரமமெனுமறிவுதாம்புபாம்பெ னுமறிவுகாண், சத்துவவகண்டபரிபூரணாகாரவுபசாந்தசிவசிற்பிரமமே, தாம்பிரிவில் சென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்தலமோங்குகந்தவேளே, தண்முகத்துய்யமணியுண்முகச்சைவமணிசண்முகத்தெய்வமணியே. (216)

எந்தைநினைவாழ்த்தாதபேயர்வாய்கூழுக்குமேக்கற்றிருக்கும்வெறுவாய், எங்கள்பெருமானுனைவணங்காதமூடர்தலையிகழ்விறகெடுக்குந்தலை, கந்தநின்மேனிகாணாதகயவர்கண்கலநீர்சொரிந்தவழுகண், கடவுணின்புகழ்தனைக்கேளாதவீணர்செவிகைத்திழவுகேட்குஞ்செவி, பந்தமறநினையெணாப்பாவிகடநெஞ்சம்பகீரெனாமேங்குநெஞ்சம், பரம நின்றிருமுன்னர்குவியாதவஞ்சர்கைபலியேற்கநீள்கொடுங்கை, சந்தமிகுசென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்தலமோங்குகந்தவேளே, தண்முகத்துய்யமணியுண்முகச்சைவமணிசண்முகத்தெய்வமணியே.

ஐயநின்சீர்பேசுசெல்வர்வாய்நல்லமுதள்ளமுதுண்டுவேந்ததிருவாய், அப்பநின்றிருவடிவணங்கினோர்தலைமுடியணிந்தோங்கிவாழுந்தலை, மெய்யநின்றிருமேனிகண்டபுண்ணியர்கண்கண்மிக்கவொளிமேவுகண்கள், வேலநின்புகழ்கேட்டவித்தகர்திருச்செவிவிழாச்சுபங்கேட்குஞ்செவி, துய்யநின்பதமெண்ணுமேலோர்கணெஞ்சமெய்ச்சுகரூபமானநெஞ்சம், தோன்றநின்றிருமுன்குவித்தபெரியோர்கைகள்சுவர்ணமிடுகின்றகைகள், சையமுயர்சென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்தலமோங்குகந்தவேளே, தண்முகத்துய்யமணியுண்முகச்சைவமணிசண்முகதெய்வமணியே. (218)

கான்கொண்டவிரதநின்னடியலாற்பிறர்தம்மைநாடாமையாகுமிந்த, நல்விரதமாங்கனியையின்மையெனுமொருதுட்டநாய்வந்துகவ்வியந்தோ, தான்கொண்டுபோவதினியென்செய்வேனென்செய்வேன்றனாசாமையென்னுமொருகை, தடிகொண்டடிக்கவோவலியிலேன்சிறிய

னென்றன்முகம்பார்த்தருளுவாய், வான்கொண்டதெள்ளமுதவாரியே யிருகருணைமழையேமழைக்கொண்டலே, வள்ளலேயென்னிருகண் மணியேயெனின்பமேமயிலேறுமாணிக்கமே, தான்கொண்டசென் னையிற்கந்தகோட்டத்துள்வளர்தலமோங்குகந்தவேளே, தண்முகத்து ய்யமணியுண்முகச்சைவமணிசண்முகத்தெய்வமணியே. (219)

பிரிவாற்றாமை.

தந்தையுந்தாயுங்குருவும்யான்போற்றுஞ்சாமியும்பூமியும்பொருளுஞ்
சொந்தமால்வாழ்வுநேயமுந்துணையுஞ்சுற்றமுமுற்றுநீயென்றே
சிந்தையுற்றிங்கேயிருக்கின்றேனிதுநின்றிருவுளந்தெரிந்ததேதெய்வந்தா
நிந்தைசெய்புலனில்லாவுளங்கலங்கனீதியோநின்னருட்கழகோ. [ய்.

என்னுளவரைமேலருளொளியோங்கிற்றிருளிரவொழிந்ததுமுழுதும்
மன்னுறுமித்யமலர்மலர்ந்ததுநன்மங்கலமுழங்குகின்றனசீர்ப்
பொன்னியல்விளக்கம்பொலிந்ததுசித்திப்பூவையர்புணர்ந்திடப்போந்
[தார்.
சொன்னநற்றருணமருட்பெருஞ்சோதிதலங்கவந்தருளுகவிரைந்தே.

சிற்சபைவிளக்கம்.

காணவாதவினையான்மிகமயங்கிக்கலங்கினேனொருகணைகளுமறி யேன், மரணநீக்கிடவந்துநிற்கின்றேன்வள்வேயுன்றன்மனக்குறிப் பறியேன், இரணனென்றெனையெண்ணிடேல்பிறிதோரிச்சையொ ன்றிலேனெந்தைநின்னுபய, சரணமீந்தருள்வாய்வடலரசேசத்தியச்ச பைத்தனிப்பெரும்பதியே. (222)

திருவடிமுறையீடு.

களித்தெனையுடம்பிற்புகுந்தனையெனதுகருத்திலேயமர்ந்தனைக
னிந்தே, தெளித்தவென்னறிவில்விளங்கினையுயிரிற்சிறப்பினுற்கலந்த
னையுள்ளந், தளிர்த்திடச்சாகாவரங்கொடுத்தென்றுந்தடைபடாச்சித்தி
களெல்லாம், அளித்தனையெனக்கேநின்பெருங்கருணையடியன்மேல்
வைத்தவாறென்னே. (223)

அநுபவானந்தத்தநுபவவிடையீடு.

திருத்தகுபொன்னம்பலத்தேதிருநடஞ்செய்தருளுந்திருவடிக
ளடிச்சிறியேன்சென்னிமிசைவருமோ, உருத்தகுநானிலத்திடைநீண்
மலத்தடைபோய்ஞானவுருப்படிவமடைவேனோவொன்றிரண்டென்
னுத, பொருத்துமுறுசுத்தசிவானந்தவெள்ளந்ததும்பிப்பொங்கியகம்பு
றங்காணுதெங்குநிறைந்திடுமோ, அருத்தகுமவ்வெள்ளத்தேநான்மூழ்கி
நான்போயதுவாகப்பெறுவேனோவறிந்திலேன்மேல்விளைவே. (224)

கரணமெலாங்கரைந்துதனிக்கரைகாண்பதுளதோகரைகண்டுபொ
ழுதெனையுங்கண்டுதெளிவேனோ, ஆரணமெலாங்கடந்ததிருவருள்வெ
ளிநேர்படுமோவவ்வெளிக்குளானந்தவநுபவந்தானுறுமோ, மரணமெ
லாந்தவிர்ந்து சிவமயமாகிநிறைதல் வாய்த்திடுமோமூலமலவாதனையும்
போமோ, சரணமெலாந்தரமன்றிற்றிருநடஞ்செய்பெருமான்றனது
திருவுளமெதுவோசற்றுமறிந்திலனே. (225)

களக்கமறப்பொதுநடநான்கண்டுகொண்டதருணங்கடைச்சிறி
யேனுளம்பூத்துக்காய்த்ததொருகாய்தான், விளக்கமுறப்பழுத்திடுமோ
வெம்பியுதிர்ந்திடுமோ வெம்பாதுபழுக்கினுமென்கரத்திலகப்படுமோ,
கொளக்கருதுமலமாயைக் குரங்குகவர்ந்திடுமோ குரங்குகவராதெனது
குறிப்பிலகப்படினுந், துளக்கமறவுண்ணுவனோதொண்டைவிக்கிக்
கொளுமோசோதிதிருவுளமெதுவோவேதுமறிந்திலனே. (226)

தாய்கொண்டதிருப்பொதுவிலெங்கள்குருநாதன்சந்நிதிபோய்வா விடுத்ததனிக்காணப்பூவை, காய்கொண்டுவெந்திடுமோபழங்கொண்டுவருமோகனிந்தபழங்கொண்டுவருங்காலதனைமதமாம், பேய்கொண்டுபோய்விடுமோபிலத்திடைவீழ்ந்திடுமோபின்படுமோமுன்படுமோபிணங்கியொளித்திடுமோ, வாய்கொண்டுவென்றிடுமோதோற்றிடுமோவென்னைமறந்திடுமோதிருவுளத்தின்வண்ணமறிந்திலனே. (227)

திருவருட்புகழ்ச்சி.

வேதநெறியாகமத்தின்னெறிபவுராணங்கள்விளம்புநெறியிதிகாசம் விதித்தநெறிமுழுதும், ஓதுகின்றதருதனைத்துமுளவனைத்துங்காட்டியுள்ளதனையுள்ளபடியுணரவுணர்த்தினையே, ஏதமறவுணர்ந்தனன்வீண்போதுகழிப்பதற்கோரெள்ளளவுமெண்ணமிலேனென்றெடுநீபுணர்ந்தே, நீதமுறவேயனைத்தும்வல்லசித்தாடல்புரிவாய்சித்தசிகாமணியேயென்றிருநடநாயகனே (228)

பிள்ளைப்பெருவிண்ணப்பம்.

மலத்திலேகிடந்தேன்றனையெடுத்தருளிமன்னியவடிவளித்தறிஞர்குலத்திலேபயிலுந்தரமுமிங்கெனக்குக்கொடுத்தனைவிளங்குசற்குருவே, பலத்திலேசிற்றம்பலத்திலேபொன்னம்பலத்திலேயன்பர்தம்மதிவாக்கு, சலத்திலேயோங்குந்தலைவனேயெனதுதந்தையேகேட்கவென்மொழியே. (229)

ஓர்ந்தவுள்ளத்தேநிறைந்தெள்ளிர்கின்றவொருவனேயுலகியலதிலே
மாந்தர்களிறப்பைக்குறித்திடும்பறையின்வல்லொலிகேட்டபோதெல்
காந்தியென்னுள்ளங்கலங்கியகலக்கங்கடவுணீயேயறிந்திடுவா [லாம்
யேந்துமிவ்வுலகிலிறப்பெனிலெந்தாயென்னுளநடுங்குவதியல்பே.

நடுநிலையில்லாக்கூட்டத்தைக்கருணைநண்ணிடார்தமையரைகளுங்
கெடுநிலைநினைக்குஞ்சிற்றதிகாரக்கேடரைப்பொய்யவாற்றினைத்தாய்

படிநிலையவரைப்பார்த்தபோதெல்லாம்பயந்தனன் சுத்தசன்மார்க்கம்
விடுநிலையுலகநடையெலாங்கண்டேவெருவினேன்வெருவினேனெந்
[தாய். (231)

தன்னிகரறியாத்தலைவனேதாயேதந்தையேதாங்குநற்றுணையே, யென்னிருகண்ணேயென்னுயிர்க்குயிரே யென்னுடையெய்ப்பினில் வைப்பே, யுன்னுதற்கினியவொருவனேயெனைநானுன்னையேநினைத் திருக்கின்றேன், மன்னுமென்னுள்ளமெலிவுநானிருக்கும்வண்ணமுந் திருவுளமறியும். (232)

வேண்டுகோள்.

அம்மாநான்வேண்டுதல்கேட்டருள்புரிதல்வேண்டுமோணவமாதி யமுழுதுமறுத்துநிற்றல்வேண்டு, மிம்மாலைத்தத்துவங்களெல்லாமெ ன்வசத்தேயியங்கியொருதீமையுமில்லாதிருத்தல்வேண்டு, மெம்மானெ ன்வேண்டுதல்வேண்டாமையறல்வேண்டுமேமசிவபோகமநுபோகமு றல்வேண்டுந், தம்மானத்திருவடியிலெந்தாயுநானுஞ்சார்ந்துகலந்தோங் குகின்றதன்மையும்வேண்டுவனே. (233)

ஆன்மதரிசனம்.

நினைத்தபோதெல்லாநின்னையேநினைத்தேனினைப்பறநின்றபோ தெல்லா, மெனைத்தனியாக்கிநின்கணேநின்றேனென்செயலென்ன வோர்செயலுந், தினைத்தனையெனினும்புரிந்திலேனெல்லாஞ்சிவன் செயலாமெனப்புரிந்தே, னனைத்துமென்னரசேநீயறிந்ததுவேயடிக் கடியுரைப்பதென்னினக்கே. (234)

சாதியுமதமுஞ்சமயமுந்தவிர்த்தேன்சாத்திரக்குப்பையுந்தணந்தேன்
நீதியுநிலையுஞ்சத்தியப்பொருணித்தியவாழ்க்கையுஞ்சுகமு
மாதியுநடுவுமந்தமுமெல்லாமருட்பெருஞ்சோதியென்றறிந்தே
னோதியவனைத்துநீயறிந்ததுநானுரைப்பதென்னடிக்கடியுனக்கே. 235

சிவதரிசனம்.

பாவிமனக்குரங்காட்டம்பார்க்கமுடியாதேபதிவெறுத்தேனிதி
வெறுத்தேன்பற்றனைத்துந்தவிர்த்தே, ஆவியுடல்பொருளையுன்பா
ற்கொடுத்தேனுன்னருட்பேராசைமயமாகியுனையடுத்துமுயல்கின்றே
ன், கூவியெனையாட்கொளநீநினையாயோநினதுகுறிப்பறியேன்பற்
பலகால்கூவியிளைக்கின்றேன், தேவிசிவகாமவல்லிமகிழ்மணவாளா
தெருணிறைவானமுதளிக்குந்தருணமிதுதானே. (236)

வாதனைக்கழிவு.

தெரிந்தபெரியர்க்கருள்புரிதல்சிறப்பென்றுரைத்ததெய்வமறை
திரிந்தசிறியர்க்கருள்புரிதல்சிறப்பிற்சிறப்பென்றுரைத்தனவே
புரிந்தம்மறையைப்புகன்றவனுநீயேயென்றாற்புண்ணியனே
விரிந்தமனத்துச்சிறியேனுக்கிரங்கியருளல்வேண்டாவோ. (237)

சிவானந்தத் தழுந்தல்.

இருட்சாதித்தத்துவச்சாத்திரக்குப்பையிருவாய்ப்புப்புன்செயிலெ
ருவாக்கிப்போட்டு, மருட்சாதிசமயங்கண்மதங்களாச்சிரமவழக்கெலாங்
குழிக்கொட்டிமண்மூடிப்போட்டுத், தெருட்சாருஞ்சுத்தசன்மார்க்க
நன்னீதிசிறந்துவிளங்கவோர்சிற்சபைகாட்டும், அருட்சோதிவீதியிலா
டச்செய்தீரேயருட்பெருஞ்சோதியென்னாண்டவர்நீரே. (238)

திருவடிப்புகழ்ச்சி.

அளவைகளனைத்துங்கடந்துநின்றோங்குமருட்பெருஞ்சோதியை
யுலகக், களவைவிட்டவர்தங்கருத்தனேவிளங்குங்காட்சியைக்கருணை
யங்கடலை, யுளவையென்றெனக்கேயுரைத்தெலாம்வல்லவொளியையு

முதலியவெளியைக், குணவயினிறைந்தகுருசிவபதியைக்கோயிலிற்க ண்டுகொண்டேனே. (239)

குருதரிசனம்.

இளைத்தவிடத்திலுதவியன்பரிடத்தேயிருந்தவேமவைப்பை
வளைத்தமதின்மூன்றெரித்தருளைவளர்த்தகருணைவாரிதியைத்
திளைத்தயோகருளத்தோங்கித்திகழுந்துரியாதீதமட்டுங்
கிளைத்தமலையைப்பழமலையிற்கிளர்த்துவயங்கக்கண்டேனே. (240)

திருநடப்புகழ்ச்சி.

படிப்படக்கிக்கேள்வியெலாம்பற்றறவிட்டடக்கிப்பார்த்திடலுமடக்கியுறும்பரிசமெலாமடக்கித், நடிப்புறுமூண்சுவையடக்கிக்கந்தமெலாமடக்கிச்சாதிமதஞ்சமயமெனுஞ்சழக்கையும்விட்டடக்கி, மடிப்படக்கிநின்றாலுங்கில்லேனுனேவே வணக்குரங்கும்வியப்பவென்றன்மனக்குரங்குகுதிக்க, குடிப்படக்கியாட்கொண்டதுரையேயென்னுளத்தேசுத்தநடம்புரிகின்றசித்தசிகாமணியே. (241)

பற்றுவகை.

ஆங்காரந்தவிர்த்தவருள்ளோங்காநின்றவனேயம்மேயென்னப்பாவென்னையாவென்னரசே, யோங்காரசிலைநாட்டியதன்மேலுற்றொளிருமொருநிலையுங்காட்டியப்பாலுயர்ந்ததனிநிலையிற், பாங்காகவேத்தியெந்தப்பதத்தலைவராலும்படைக்கவொண்ணாச்சித்தியைநான்படைக்கவைத்தபதியே, தூங்காதபெருஞ்சுகமேசுத்திடவில்வுலகைச்சுத்தசன்மார்க்கந்தனிலேவைத்தருள்கவிரைந்தே. (242)

திருவருட்புகழ்ச்சி.

மேல்வெளிகாட்டிவெளியிலேவிளைந்தவிளைவெலாங்காட்டிமெய்வேத, நூல்வழிகாட்டியென்னுளேவிளங்கும்நோக்கமேயாக்கமுந்திறனும், நால்வகைப்பயனுமளித்தெனைவளர்க்குநாயகக்கருணைநற்றாயே, போனுயிர்க்குயிராய்ப்பொருந்தியமருந்தேபொது நடம்புரிகின்றபொருளே. (243)

வெற்புறுமுடியிற்றம்பமேலேற்றிமெய்ந்நிலையமர்வித்தவியப்பே
கற்புறுகருத்திலினிக்கின்றகரும்பேகருணைவானமுதத்தெண்கடலே
யற்புறுமறிவிலருளொளியாகியானந்தமாமனுபவமே
பொற்புறுபதியேயற்புதநிதியேபொதுநடம்புரிகின்றபொருளே.

திருவருட்பெருமை.

பெருகுமாகருணைப்பெருங்கடலின்பப்பெருக்கமேயென்பெரும்பேறே, யுருகுமோருள்ளத்துவட்டுறாவினிக்குமுண்மைவானமுதமேயென்பாற், கருகுநெஞ்சதனைத்தளிர்த்திடப்புரிந்தகருணையங்கடவுளேவிரிந்து, வருகவென்றுரைத்தேன்வந்தருட்சோதிவழங்கினைவாழ்கநின்மாண்பே. (245)

விண்ணார்செஞ்சுடரேசுடர்மேவியவுள்ளொளியே
தண்ணார்வெண்மதியேயதிற்றங்கியதெண்ணமுதே
கண்ணார்மெய்க்கனலேசிவகாமப்பெண்காதலனே
யண்ணாதந்தனையேயருளாரமுதந்தனையே. (246)

பொறிவேறின்றிநினைகிதம்போற்றும்புனிதருளே
குறிவேறின்றிநின்றபெருஞ்சோதிக்கொழுஞ்சுடரே
செறிவேதங்களெலாமுறைசெய்யநிறைந்திடுபே
ரறிவேதந்தனையேயருளாரமுதந்தனையே. (247)

தேனாய்த்தீம்பழமாய்ச்சுவைசேர்கரும்பாயமுதந்
தானாயன்பருளேயினிக்கின்றதனிப்பொருளே
வானாய்க்காலனலாய்ப்புனலாயதில்வாழ்புவியா
யானாய்தந்தனையேயருளாரமுதந்தனையே. (248)

அருட்பங்கூறல்.

கருணைததும்பிப் பொதுநோக்குங் கண்ணிற்கிடைத்த கண்ணே யோர்கனியிற்கனிந்தன்புருவானகருத்திற்கிடைத்தகருத்தேமெய்,யருணிலையினதுவதுவாயறிவிற்கிடைத்தவறிவே யென்னகத்தும்புறத்துமொளிநிறைவித்தமர்ந்தகுருவேயைம்பூத, வருணமுதலாயவைகடந்தவரைப்பாய்விளங்குமணிமன்றில்வயங்குசுடரேயெல்லாஞ்செய்வல்லகுருவேயென்னுளத்தே, கருணைநடஞ்செய்யரசேயென்றாயேயென்னைத்தந்தாயேதனித்ததலைமைப்பதியேயித்தருணம்வாய்த்ததருணமதே.

கலைசார்முடிபுகடந்துணர்வுகடந்தநிறைவாய்க்கரிசிலதாய்க் கருணைமயமாய்விளங்குசிதாகாயநடுவிலியற்கையுண்மைத், தலைசார்வடிவின்பநடம்புரியும்பெருமைத்தனிமுதலேசாகாக்கல்விபயிற்றியென்னுட்சார்ந்துவிளங்குஞ்சற்குருவே, புலைசார்மனத்துச்சிறியேன்றன்குற்றமனைத்தும்பொறுத்தருளிப்பொன்றாவடிவுகொடுத்தெல்லாம்புரியவல்லபந்தந்தருட்சோதி,நிலைசார்நிறைமையளித்தனைநான்பொதுவில்ஞானநீதியெனுநிருத்தம்புரிகின்றேன் புரிதனீயோநானோநிகழ்த்தாயே.

திருவுந்தியார்.

இரவுவிடிந்ததிணையடிவாய்த்தன
பரவிமகிழ்ந்தேனென்றுந்தீபற
பாலமுதுண்டேனென்றுந்தீபற. (251)

சிவபுண்ணியப்பேறு.

வேதமேவிளக்கமெய்ம்மையேவயக்கவெம்மையேசேர்ந்திடவிமல
வாதமேவழங்கவானமேமுழக்கவையமேயுய்யவோர்பரம
நாதமேதொனிக்கஞானமேவடிவாய்நன்மணிமன்றிலேநடிக்கும்
பாதமேபிடித்தேனெனக்கிதுபோதும்பண்ணியதவம்பலித்ததுவே.

கட்டமுங்கழன்றேன்கவலைவிட்டொழிந்தேன்கலக்கமுந்தீர்ந்த
னன்பிறவிச், சட்டமுங்கிழித்தேன்றூக்கமுந்துறந்தேன்சாவையுநோ
வையுந்தவிர்ந்தேன் சிட்டமுமடைந்தேன்சிற்சபையுடையான்செல்வ
மெய்ப்பிள்ளையென்றொருபேர்ப், பட்டமுந்தரித்தேனெனக்கினிப்போ
தும்பண்ணியதவம்பலித்ததுவே. (266)

சமரச நிலை.

ஒன்றே சிவமென் றுணர்ந்திவ் வுலகமெலாம்
நன்றே வொருமையுற்று நண்ணியே - மன்றே
நடம்புரியும் பாத நளினமலர்க் குள்ளம்
இடம்புரிக வாழ்க விசைந்து. (267)

தலைவி பாங்கிக் குரைத்தல்.

வேதாந்தநிலையொடுசித்தாந்தநிலையுமேவும்பொதுநடநான்காணல்
வேண்டும், நாதாந்தத்திருவீதிநடப்பாயோதோழிநடவாயேலென்மொழி
கடப்பாயோதோழி. (268)

தொம்பதவுருவொடுதற்பதவெளியிற்றோன்றசிபதநடநான்காண
ல்வேண்டும், எம்பதமாயிசைவாயோதோழியிசையாமல்வீணிலே
யசைவாயோதோழி. (269)

தாய் கூறல்.

பொன்செய்ந்ன்வடிவைப்புணர்ந்திடவினைத்தேய்பொங்கியதாசைமேலென்று, னென்செய்வேனெனையும்விழுங்கியதையோவென்னவன்றுகாணெனென்றான், கொன்செயுமலகரென்னையுமுனதுகுறிப்பையுங்குறித்திலாரென்றான், வன்செயுமவர்வாயோய்கதென்றென்றுன்வரத்தினல்கான்பெற்றமகனே. (270)

ஆடியபாதத்தழகனென்றெனைத்தானன்பினற்கூடினனென்றான்
கோடிமாதவங்கள்புரியினும்பிறர்க்குக்கூடுதல்கூடுமோவென்றான்
பாடியபடியென்கருத்தெலாநிரப்பிப்பரிசெலாம்புரிந்தனனென்றான்
வாடியவுளமும்தளிர்த்தனனென்றான்வரத்தினல்கான்பெற்றமகனே.

பாங்கிதலைவிபெற்றி யுரைத்தல்.

அம்மதவேள்கணையொன்றேவைங்கணையும்விடுத்தானருளடையுமாசையினலாருயிர்தான்பொறுத்தாள், இம்மதமோசிறிதுமிலாள்கலவியிலேயெழுந்தவேகசிவபோகவெள்ளத்திரண்டுபடாளெனினும், எம்மதமோவெங்குலமோவென்றுநினைப்புணரேதலிவன்மதமுமிவள்குலமுமெல்லாமுஞ்சிவமே, சம்மதமோதேவர்திருவாய்மலரவேண்டுஞ்சபையில்நடம்புரிகின்றதனிப்பெரியதுரையே. (272)

தத்துவருந்தத்துவஞ்செய்தலைவர்களும்பிறருந்தனித்தனியேயவளிந்துவந்துதன்னெதிர்நிற்கின்ற, ரெத்துணையுமற்றவரையேறெடுத்துப்பாராளிருவிழிகணீர்சொரிவாளென்னுயிர்நாயகனே, யொத்துயிரிற்கலந்துகொண்டவுடையாயென்றுமையேயோதுகின்றாளிவளளவிலுத்தமசேயுமது, சித்தமெதுதேவர்திருவாய்மலரவேண்டுஞ்சிற்சபையிற்பொற்சபையிற்றிகழ்பெரியதுரையே. (273)

கரவறியாவம்பலத்தென் கணவரைக்கண்டல துகண்டுயிலேனுண்டிகொளேன்களித்தமரேனென்பா, ளிரவறியாள்பகலறியாளெதிர்வருகின்றவரையின்னவரென்றறியாளிங்கின்னலுழக்கின்றாள், வரவெதிர்பார்த்துழல்கின்றாளிவளளவிலுமதுமனக்கருத்தின்வண்ணமெதுவாய்மலரவேண்டும், மிரவுமொருகணமும்மினித்தாழ்க்கிலுயிர்தரியாண்மெய்ப்பொதுவில்நடம்புரியுமிகப்பெரியதுரையே. (274)

ஊராசையுடலாசையுயிர்பொருளினாசையுற்றவர்பெற்றவராசையொன்றுமிலாளுமது,பேராசைப்பேய்பிடித்தாள்கள்ளுண்டபிசற்றும் பிச்சியெனப்பிதற்றுகின்றாள்பிறர்பெயர்கேட்டிடிலோ,நாராசஞ்செவிபுகுந்தாலென்னநலிகின்றாள்நாடறிந்ததிதுவெல்லாம்நங்கையிவளளவில், நீராசைப்பட்டதுண்டேல்வாய்மலரவேண்டும்நித்தியமாமணிமன்றில்நிகழ்பெரியதுரையே. (275)

என்னுயிரிற்கலந்துகொண்டாரவரிலிங்கவர்தாமிருக்கவிடம்புனைகவென்றாளிச்சைமயமாகித்,தன்னுயிர்தன்னுடல்மறந்தாளிருந்தறியாள்படுத்துக்தரித்தறியாளெழுந்தெழுந்துதனித்தொருசார்திரிவாள், அன்னமுணவழைத்தாலுங் கேட்பதிலாளுலகிலணங்கனையாரதிசயிக்குங்குணங்கள்பலபெற்றாள், மின்னிவளைவிழைவதுண்டேல்வாய்மலரவேண்டும்மெய்ப்பொதுவில்நடம்புரியுமிகப்பெரியதுரையே. 276

தலைவி தலைவன்செயலைத் தாய்க்குரைத்தல்.

அதுபாவகமுகத்தானந்தநாட்டிலம்பலஞ்செய்துநின்றவழகர், விதுபாவகமுகத்தோழியுநானும் மெய்ப்பாவனைசெய்யும்வேளையில்வந்து, பொதுபாவனைசெய்யப்போகாதேபெண்ணேபொய்ப்பாவனைசெய்துகைப்பானேனையோ, இதுபாவமென்கின்றாரென்னடியம்மாவென்கைபிடிக்கின்றாரென்னடியம்மா. (277)

வெம்மதநெஞ்சிடைமேவுறவன்னார்வெம்பலமாற்றுபொன்னம்பலவாணர், சம்மதமாமடவார்களுநானுக்கத்துவம்பேசிக்கொண்டொத்துறும்போதில், இம்மதம்பேசியிறங்காதேபெண்ணேயேகசிவோகத்தையெய்தினைநீதான், எம்மதமென்கின்றாரென்னடியம்மாவென்னைபிடிக்கின்றாரென்னடியம்மா. (278)

மறப்பற்றநெஞ்சிடைவாழ்கின்றவள்ளல்மலப்பற்றறுத்தவர்வாழ்த்துமணாளர், சிறப்புற்றமங்கையர்தம்மொகோன்றான்சிற்றம்பலம்பாடிச்செல்கின்றபோது, புறப்பற்றகற்றத்தொடங்காதபெண்ணேபுலையகப்பற்றையறுத்தாய்நினக்கே, இறப்பற்றதென்கின்றாரென்னடியம்மாவென்னைபிடிக்கின்றாரென்னடியம்மா. (279)

தலைவி வருந்தல்.

கண்ணுறங்கேனுறங்கினுமென்கணவரொடுகலக்குங்கனவன்றியிலையென்றேனதனாலோவன்றி,யெண்ணுறங்காங்லவிலவரிருக்குமிடம்புகுவேனென்றுரைத்தேனிதனாலோவெதனாலோவறியேன், பெண்ணடங்காளெனத்தோழிபேசிமுகங்கடுத்தாள்பெருந்தயவால்வளர்த்தவளும்வருந்தயலாளானார், மண்ணடங்காப்பழிகூறிமற்றவர்களிருந்தார்வள்ளல்கடராயர்திருவுள்ளமறிந்திலனே. (280)

கண்கலந்தகணவரென்னைக்கைகலந்ததருணங்காணமறிந்திலனென்றேனதனாலோவன்றி, எண்கலந்தபோகமெலாஞ்சிவபோகந்தனிலேயிருக்கதென்றேனிதனாலோவெதனாலோவறியேன், விண்கலந்தமதிமுகர்தான்வேறுபட்டாள்பாங்கிவியந்தெடுத்துவளர்த்தவளும்வேறுசிலபுகன்றாள், பண்கலந்தமொழிமடவார்பழிகூறலானார்பத்தர்புகழ்கடராயர்சித்தமறிந்திலனே. (281)

தனித்தலைவர்வருகின்றதருணமிதுமடவீர்தனிக்கவெனைவிடுமி னென்றேனதனாலோவன்றி, இனித்தசுவையெல்லாமென்கணவரடிச் சுவையேயென்றுரைத்தேனிதனாலோவெதனாலோவறியேன், பனித் ததுளிர்காலத்தேசனித்தசலம்போன்றாள்பாங்கியெனைவளர்த்தவளுந் தூங்குமுகங்கொண்டாள், கனித்தபழம்விடுத்துமின்னார்காய்தின்னுகி ன்றார்கருத்தர்கடராயர்கிருக்கருத்தையறிந்திலனே. (282)

நற்றாய் செவிலிக்குக் கூறல்.

உணர்ந்தவர்தமக்குமுணர்வரியானென்னுள்ளகத்தமர்ந்தனனெ ன்றாள், அணிந்தனனெனக்கேயருண்மணமாலையதிசயமதிசயமென் றாள், துணிந்துநான்றனித்தபோதுவந்தென்கைதொட்டனன்பிடித்த னனென்றாள், புணர்ந்தனன்கலந்தானென்றாளேகளித்துப்பொங்கி னாள்நான்பெற்றபொன்னே. (283)

திருமணிப்பொதுவிலொருபெரும்பதியென்சிந்தையிற்கலந்தன னென்றாள்,பெருமையிற்சிறந்தேனென்பெருந்தவத்தைப்பேசுதலரித ரிதென்றாள், இருமையுமென்போலொருமையிற்பெற்றார்யாண்டுளார் யாண்டுளாரென்றாள், மருடலர்முகத்தேயிளநகைதுளும்பவயங்கினாள் நான்பெற்றமகளே. (284)

ஏலுநன்மணிமாமன்றருட்சோதியென்னுளத்தமர்ந்தனனென்றாள்
பாலுமின்சுவையும்போன்றெனதாவிபற்றினன்கலந்தனனென்றாள்
சாலுமெவ்வுலகுந்தழைக்கவென்றனக்கேசத்தியையளித்தனனென்றா
[ள்
மேலுமெக்காலுமழிவிலேனென்றாள்மிகுகளிப்புற்றனன்வியந்தே.

அனுபவமாலை.

கண்ணுறங்கேனுறங்கினுமென் கணவரொடுகலக்குங்கனவேகண்டுளமகிழ்வேன் கனவொன்றேநனவின், எண்ணடங்காப்பெருஞ்சோதியென்னிறைவரெனையேயிணைந்திரவுபகல்காணுகின் புறச்செய்கின்றார், மண்ணுறங்குமலையுறங்குமலைகடலுமுறங்குமற்றுளவெல்லாமுறங்கும்யானிலத்தேநமது, பெண்ணுறங்காளெனத்தாயர்பேசிமகிழ்கின்றார்பெண்களெலாங்கூசுகின்றார்பெருந்தவஞ்செய்கிலரே. (286)

அன்னமுணவுழுக்கின்றாய்தோழியிங்கேநான்றானம்பலத்தேபாடுகின்றவண்ணலடிமலர்த்தேன், உன்னைநினைத்துண்டேனென்றுள்ளகத்தேவாழுமொருதலைமைப்பெருந்தலைவருடையவருட்புகழா, யின்னமுதிலென்னுடையன்பென்னுநறுங்கனியினிரதமுமென்றனிக்கணவருருக்காட்சியெனுமோர், நன்னலுமேதனித்தெடுத்தேம்பாகுநகலந்தேகளித்துண்டேன்பசிசிறிதுங்கண்டிலனுள்ளகத்தே. (287)

கண்கலந்தகணவரெனைக்கைகலந்ததருணங்கண்டறியேனென்னையுமென்கரணங்கடமையு, மெண்கலந்தபோகமெலாஞ்சிவபோகந்தனிலோரிறையுளவென்றுரைக்கின்றமறையளவின்றறிந்தேன், விண்கலந்ததிருவாளருயிர்கலந்ததருணம்விளைத்துணர்தீர்ந்தடைந்தசுகநினைத்திடுந்தோறெல்லாம், உண்கலந்தவானந்தப்பெரும்போகமப்போதுற்றதெனவெனைவிழுங்கக்கற்றதுகாண்டோழி. (288)

கற்பூரமணக்கின்றதென்னுடம்புமுழுதுங்கணவர்திருமேனியிலேகலந்தமணமதுதான், இற்பூதமணம்போலமறைவதன்றுகண்டாயியற்கைமணந்துரியநிறைபிறைவடிவத்துளதே, பொற்பூவுநறுமணமுங்கண்டறியாருலகர்புண்ணியனார்திருவடியினண்ணியவாறதுவே, நற்பூவியணிந்ததிருவடிவுமுற்றுந்தோழி நான்கண்டேனுன்புணர்ந்தேனனுதவானேனே, (289)

கள்ளுண்டாளெனப்புகன்றார் [illegible]படுவேகண்டதுண்டுசிற்சபையிலுண்டதுமுண்டடிநான், எள்ளுண்டபலவிடயத்திறக்குங்கள்ளன்றேயென்றமிறவாநிலையிலிருத்துங்கள்ளுலகர்,உள்ளுண்டபோது மயக்குற்றிடுங்கள்ளலவேயுள்ளமயக்கனைத்தினையுமொழிந்திடுங்கள்மடவா,யள்ளுண்டபிறகுமெனையடுத்தடுத்துக்கண்டாலறிவுதருமவர்க்குமிங்கேயானுண்டகள்ளே. (290)

மனையணைந்துமலரணைமேலெனையணைந்தபோதுமணவாளர்வடிவென்றுமெனதுவடிவென்றுந், தனைநினைந்துபிரித்தறிந்ததில்லையடியெனைத்தான்சற்றுமறியேனெனில்யான்மற்றறிவதென்னே, தினையளவாயினும்விகற்பவுணர்ச்சியென்பதிலையே திருவாளர்கலந்தபடிசெப்புவதெப்படியோ, உனையணைந்தாலிவ்வாறுநான்கேட்பேனப்போதுன்னறிவுமென்னறிவுமோரறிவாங்காணே. (291)

மணவாளர்வருகின்றதருணமிதுமடவாய்மாளிகையின்வாயிலெலாம்வளம்பெறநீபுனைக, குணவாளரணையுமலரணையகத்தைநானேகுலவுமணிவிளக்கத்தாலலங்கரிக்கப்புகுவேன், தணவாதசுகந்தருமென்றணிக்கணவர்வரிலோசற்றுமயல்வாதனைகளுற்றிடுதலாகா, அணவாதமறத்தவரைப்புறப்பணிக்கேவிடுகவன்புடையார்களுக்கிங்ககப்பணிசெய்திடதே. (292)

என்னிருகண்மணியனையாரென்னுயிர்நாயகனாரென்னுயிருக்கமுதானாரெல்லாஞ்செய்வல்லார், பொன்னணிபொற்சபையாளர்சிற்சபையாரென்னைப்புறம்புணர்ந்தாரகம்புணர்ந்தார்புறத்தகத்தும் புணர்ந்தார், அன்னியரல்லடியவரேயெனதுகுலதெய்வமருந்தவத்தாற்கிடைத்ததிருவாகுமதுமட்டோ, மன்னுறுமென்றனித்தாயுந்தந்தையுமங்கவரேமக்கள்பொருள்மிக்கதிருவொக்கலுமங்கவரே. (293)

திருச்சிற்றம்பலத்தின்பத்திருவுருக்கொண்டின்பத்திருநடஞ்செய்தருள்கின்றதிருவடிக்கேதொழும்பாய், அருச்சிக்கும்பேரன்பரறிவி

ன்கண்ணறிவாயவ்வறி[illegible]வாகந்தவமுதாகிப், பரிச்சிக்குமவ்வறிவினிறைந்தசுவை[illegible]ருசிப்பயத்தினனுபவமாகிநிறைந்தே, உருச்சிக்குமெனமறைகளாகமங்களெல்லாமோதுகின்ற வெளிவலவர்த்ம்மொளியுரைப்பதெவரே. (294)

ஈற்றறியேனிருந்திருந்திங்கதிசயிப்பதென்னீயென்கின்றாய்நீயெனைவிட்டேகுதொறுநான்றான், மாற்றறியாத்தீபம்போலிருந்திடுமெத்தருணங்கண்டபரிசென் புகல்வேனண்டபகிரண்டம், தோற்றறியாப்பெருஞ்சோதிமலைபரநாதத்தே தோன்றியதாங்கதனடுவே தோன்றியதொன்றதுதான், மாற்றறியாப்பொன்னொளியோவவ்வெளிக்குள்ளாடும்வள்ளலருளொளியோவீததிசயிக்கும்வகையே. (295)

தமையறியாரெல்லாரும்புறத்திருக்கநான்போய்ச்சபைநடங்கண்டுளங்களிந்தந்தருணத்தேதலைவர், இமையறியாவிழியுடையாரெல்லாருங்காணவிளநகைமங்கலமுகத்தேதகத்தவென்றொளிர, எமையறிந்தாயென்றெனதுகைப்பிடித்தார்நானுமென்னைமறந்தென்னிறைவர்கால்பிடித்துக்கொண்டேன், சுமையறியாப்பேரறிவேவடிவாகியழியாச்சுகம்பெற்றுவாழ்கவென்றார்கண்டாயென்றோழி. (296)

தூங்குகநீயென்கின்றாய் தூங்குவனோவெனது துரைவருமோர்தருணமிதிற்றூக்கமுந்தான் வருமோ, ஈங்கிதுநான் றனித்திருக்கவேண்டுவதாதலினாலென்னுடைய தூக்கமெலாநின்னுடையதாக்கி, எங்கலதப்புறத்தேபோய்த் தூங்குகநீதோழியென்னிருகண்மணியனையாரனையணைந்தவுடனே, ஓங்குறவேநானவரைக்கலந்தவரும்நானுமொன்றானபின்னருனையெழுப்புகின்றேனுவந்தே. (297)

ஐயமுறேல்காலையில்யாம்வருகின்றோமிதுநம்மாணையென்றாதவரனையருளாணைகண்டாய், வெய்யருளத்தேபுகுதப்போனதிருவிரவுவிடிந்ததுநற்சுடருதயமேவுகின்றதருணம், தையலினிநான்றனிக்கவேண்டுவதாதலினால்சற்றேயப்புறத்திருநீதலைவர்வந்தவுடனே, உய்யவிங்

கோனவரைக்கலந்தவருநானுமொன்றானபின்னருளையழைக்கின்றேனுவந்தே. (298)

வைகறையிதருளுதயந்தோன்றுகின்றதெனதுவள்ளல்வருதருணமினிவார்த்தையொன்றானாலும், சைகரையேயலிங்கனநான்றனித்திருத்தல்வேண்டுந்தாழ்குழல்நீயங்கேபோய்த்தத்துவப்பெண்குழுவில், பொய்கரையாதுள்ளபடிபுகழ்பேசியிருநீபுத்தமுதமளித்தவருட்சித்தர்வந்தவுடனே, உய்கரைவாய்நானவரைக்கலந்தவருநானுமொன்றானபின்னருளையழைக்கின்றேனுவந்தே. (299)

காலையிலேவருகுவரென்கணவரென்றேநினக்குக்கழறினனென்னலதுகாதிலுற்றதிலையோ, வேலையிலாதவள்போலேவம்பளக்கின்றாய்நீவிடிந்ததுநான்றனித்திருக்கவேண்டுவதாதலினால், சோலையிலேமலர்கொய்துதொடுத்துவந்தேபுறத்திற்சூழ்ந்திருப்பாய்தோழியென்றன்றுணைவர்வந்தவுடனே, ஒலையுறாதியானவரைக்கலந்தவருநானுமொன்றானபின்னருளையழைக்கின்றேனுவந்தே. (300)

விடிந்ததுபோராணவமாங்காரிருணீங்கியதுவெய்யவினைத்திரளெல்லாம்வெந்ததுகாண்மாயை, ஒடிந்ததுமாமாயையொழிந்தது திரைதீர்ந்ததுபேரொளியுதயஞ்செய்ததினித்தலைவர்வருதருணம், திடம்பெறநான்றனித்திருக்கவேண்டுவதாதலினால்தேமொழிநீபுறத்திருமாதேவர்வந்தவுடனே, உடம்புறவேநானவரைக்கலந்தவருநானுமொன்றானபின்னருளையழைக்கின்றேனுவந்தே. (301)

மாலையிலேயுலகியலார்மகிழ்நரொடுகலத்தல்வழக்கமதுகண்டனநீமணவாளருடனே, காலையிலேகலப்பதற்கிங்கெனைப்புறம்போவென்றாய்கண்டிலநீதநிசயமென்றுரையேலென்றோழி, ஓலையிலேபொறித்ததைநீயுன்னுளத்தேகருதியுழல்கின்றாயாதலிலிவ்வுளவறியாய்தருமச், சாலையிலேசமரசசன்மார்க்கசங்கந்தனிலேசற்றிருந்தாயெனிலிதனையுற்றுணர்வாய்காணே. (302)

என்னுடைய தனித்தோழியிது கேள் நீ மயங்கேலெல்லாஞ்செய்வல்லவரென்னின்னுயிர் நாயகனார், தன்னுடைய திருத்தோளை நான்றழுவுந் தருணந்தனித்த சிவசாக்கிரமென்றினித்தனிலைகண்டாய், பன்னுமித்த நிலைபரசாக்கிரமாகவுணரேல் பகர்பரசாக்கிரமடங்கும்பதியாகும் புணர்ந்து, மன்னுநிலை மற்றிரண்டுங்கடந்த துரியமாநிலையென்றுணர்க வொளிர்மேனிலையிலிருந்தே. (303)

நான்புகலு மொழியிதுகேளென்னுடைய தோழி நாயகனார் தனியுருவ நான்றழுவுந் தருணம், வான்புகழுஞ் சுத்தசிவசாக்கிரமென்றுணர்ந்தோர் வழுத்து நிலையாகுமுருச்சுவைகலந்தே பதுவாம், தேன்கலந்த சுவையொடு நன்மணிகலந்த வொளியாய்த் திரிபின்றியியற்கையின் பச்சிவங்கலந்த நிலையே, தான்புகல் மற்றையமூன்றுங்கடந்தப்பாலிருந்த சாக்கிராதீதமெனத் தனித்துணர்ந்து கொள்ளே. (304)

பொன்பறியாப் புகல்வார்போன் மறைப்பதென்ன மடவாய் பூவையர்காலையிற் புணரநாணுவர் காணென்றாய், அன்பறியாப் பெண்களுக்கேதின்னுரைசம்மதமாமாசைவெட்கமறியா தென்றறிந்திலையோ தோழி, இன்பறியாயா தலினாலிக்கணீயிசைத்தாயிறைவர் திருவடிவது கண்டிட்ட தருணந்தான், துன்பறியாக் காலையென்றுமாலையென்று மொன்றுந்தோன்றாது சுகமொன்றே தோன்றுவதென்றறியே. (305)

அருளுடையா ரெனையுடையா ரம்பலத்தே நடிக்குமழகரெல்லாம் வல்லவர் நாமணைந்தருளுங் காலமிருளுடைய விரவகத்தேயெய்தாதுகண்டாயெதனாலென்றெண்ணுதியேலியம்புவன் கேள் மடவாய், பொருளுடையென் றனித்தலைவர் திருமேனிச் சோதி செப்புறுபார் முதல் நாதபரியந்தங் கடந்தே, அருளுறுமோர் பரநாதவெளிகடந்தப்பாலு மப்பாலும் விளக்குமடியகம்புறத்து நிறைந்தே. (306)

உரியபெருந்தனித்தலைவரோங்கு சபாந்தத்தினுட்புறத்துமப்புறத்துமொரு செங்கோல்செலுத்தும், துரியர் துரியங்கடந்த சுகசொருபர்

பொதுவிற்சுத்தநடம்புரிகின்றசித்தரடிக்கழலே, பெரியபதத்தலைவரெ
லாம் நிற்குநிலையிதுவோர்பெண்ணுரையென்றெள்ளுதியோகொள்ளு
தியோதோழி, அரியபெரும்பொருண்மறைகளாகமங்களுரைக்குமா
ணையுமிக்கீதிதற்சோரையமிலையறியே. (307)

எல்வுலகிலெவ்வெவர்க்குமரும்பெருஞ்சோதியரேயிறைவரென்ப
தறியாதேயிம்மதவாதிகடாங், கவ்வைபெறுகுருடர்கரிகண்டகதைபோ
லேகதிர்க்கின்றார்சாகாதகல்விநிலையறியார், நவ்விவிழியாயிவரோசிலபு
கன்றாரென்றாய்ஞானநடங்கண்டேன் மெய்த்தேனமுதமுண்டேன்,
செவ்வைபெறு சமரசசன்மார்க்கசங்கந்தனிலேசேர்ந்தேனந்தீமொழியு
ந்தேமொழியாயினவே. (308)

எப்பொருட்குமெவ்வுயிர்க்குமுள்ளகத்தும்புறத்துமியலுண்மைய
றிவின்பவடிவாகிநடிக்கும்,மெய்ப்பொருளாஞ்சிவமொன்றேயென்றறி
ந்தேனுணக்கும்விளம்புகின்றேன் மடவாய்நீகிளத்துநின்றாய்மீட்டும்,
இப்பொருளப்பொருளென்றேயிசைப்பதென்னோபொதுவிலிறைவர்
செயுதிரதிசயவின்பாட்டினைநீ, பப்பறவேகாணுதியேலத்தருணத்தெ
ல்லாம்பட்டநடுப்பகல்போலவெட்டவெளியாமே, (309)

சரியைநிலைநான்குமொருகிரியைநிலைநான்குந்தனியோகநிலைநான்
குந்தனித்தனிகண்டறிந்தேன், உரியசிவஞானநிலைநான்குமருளொளி
யாலொன்றொன்றாவறிந்தேன்மேலுண்மைநிலைபெற்றேன், அரியசிவ
சித்தாந்தவேதாந்தமுதலாமாறந்த நிலையறிந்தேனப்பால்நின்றோங்கும்,
பெரியசிவவனுபவத்தாற் சமரசசன்மார்க்கம்பெற்றேனிங்கிறவாமையு
ற்றேன்காண்டோழி. (310)

உருவுபரசாக்கிரத்தைக்கண்டுகொண்டேன்பரமசொப்பனங்கண்
டேன்பரமசுழுத்தியுங்கண்டுணர்ந்தேன், குருபிரமசாக்கிரத்தைக்கண்
டேன்பின்பிரமங் குலவியசொப்பனங்கண்டேன் சிவசுழுத்திகண்டே

ன், குருதுரியக்காண்கின்றேன் சமரசசன்மார்க்கங்கூடினேன்பொது
விலருட்கூத்தாடுங்கணவர், மருவிடப்பெற்றவர்வடிவானேன்களி
த்துவாழ்கின்றேனெதிரற்றவாழ்க்கையிலென்றோழி. (311)

தனிப்படுமோர்சுத்தசிவசாக்கிரந்தன்னிலையிற்றனித்திருந்தேன்சுத்
தசிவசொப்பனத்தேசார்ந்தேன், தனிப்படுமெய்ச்சுத்தசிவசுழுத்தியிலே
களித்தேன்கலந்துகொண்டேன்சுத்தசிவதுரியநிலையதுவாய்ச், செனி
ப்பிலதாயெல்லாமாயல்லதுவாஞ்சுத்த சிவதுரியாதீதத்தே சிவமயமாய்
நிறைந்தேன், யினிப்புறசிற்சபையிறைவையைப்பெற்றபரிசதனாலித்தனை
யும்பெற்றிங்கேயிருக்கின்றேன்றோழி. (312)

அருட்சோதித்தலைவரெனக்கன்புடையகணவரழகியபொன்மே
னியைநான்றழுவினின்றதருணம், இருட்சாதித்தத்துவங்களெல்லா
ம்போயினவாலெங்கணும்பேரொளிமயமாயிருந்தனவாங்கவர்தாம், மரு
ட்சாதிநீக்கியெனைப்புணர்ந்தவொருதருணம்மன்னுசிவாநந்தமயமாகிநி
றைவுற்றேன், றெருட்சார்பிலிருந்தோங்குசமரசசன்மார்க்கத்திருச்ச
பைகண்ணுற்றேனென்றிருக்கணவருடனே. (313)

புறப்புணர்ச்சியென்கணவர்புரிந்ததருணந்தான்புத்தமுதநானுண்
டுபூரித்ததருணம், சிறப்புணர்ச்சிமயமாகியகப்புணர்ச்சியவர்தாஞ்செய்
ததருணச்சுகத்தைச்செப்புவதெப்படியோ, பிறப்புணர்ச்சிவிடயமிலே
சுத்தசிவாநந்தப்பெரும்போகப்பெருஞ்சுகந்தான்பெருகியெங்குநிறைந்
தே, மறப்புணர்ச்சியில்லாதேநானதுவாயதுவென்மயமாய்ச்சின்மயமா
ய்த்தன்மயமானநிலையே. (314)

வரம்பி லின்பம்.

சுத்தமுற்றவைம்பூதவெளிகரணவெளிமேற்றுலங்குவெளிதுரிய
வெளிகைவெளியேமுதலாம், இத்தகையவெளிகளுள்ளேயெவ்வெளி

யோநடனமியற்றுவெளியென்கின்றாரென்றாலவ்வெளியில், நித்தபரி
பூரணமாயானந்தமயமாய்நிருத்தமிடுமெம்பெருமானிபுணநடராயன்,
சித்துருவாந்திருவடியினுண்மைவண்ணமறிந்துசெப்புவதாரென்வச
மோசெப்பாயென்றோழி. (315)

காற்றுருவோகனலுருவோகடவுளுருவென்பார்காற்றுருவுங்கன
லுருவுங்கண்டுரைப்பீரென்றால், வேற்றுருவேபுகல்வரதைவேறென்
றால்மறுத்தால்விழித்துவிழித்தெம்போல்வார்மிகவுமருள்கின்றார்,தோ
ற்றுமந்தத் தத்துவமுந்தோற்றாத் தத்துவமுந் துரிசாகவவைகடந்தசுக
சொருபமாகி, மாற்றமனவுணர்வுசெல்லாத்தலத்தாடும்பெருமான்வடி
வுரைக்கவல்லவரார்வழுத்தாயென்றோழி. (316)

அடிமைப்பேறு.

தானேயருளானான்றானேபொருளானான்
தானேயெல்லாம்வல்லதானானான் -றானேதான்
நானானென்னுடையநாயகனானான்ஞான
வானானம்பலத்தெம்மான். (317)

சிதம்பரமான்மியம்.

உலகமெலாந்தொழுவுற்றதெனத்தண்மையொண்மைதந்தே
யிலகவெலாம்படைத்தாருயிர்காத்தருளென்றதென்றும்
கலகமிலாச்சுத்தசன்மார்க்கசங்கங்கலந்ததுபார்த்
திலகமெனநின்றதுத்தரஞானசிதம்பரமே. (318)

குருநெறிக்கேயெனைக்கூட்டிக்கொடுத்ததுகூறரிதாம்
பெருநெறிக்கேசென்றபேர்க்குக்கிடைப்பதுபேயுலக
கருநெறிக்கேற்றவர்காணற்கரியதுகாட்டுகின்ற
திருநெறிக்கேற்கின்றதுத்தரஞானசிதம்பரமே. (319)

கொல்லாநெறியதுகோடாநிலையதுகோபமிலார்
சொல்லாலுவந்ததுசுத்தசன்மார்க்கந்துணிக்கதுல
செல்லாமணிப்பதிறந்தாரெழுப்புவதேதமொன்றுஞ்
சொல்லாவளத்தினதுத்தஞானசிதம்பரமே. (320)

காணுதகாட்சிகள்காட்டுவிக்கின்றதுகாலமெல்லாம்
வீணாள்கழிப்பவர்க்கெய்தரிதானதுவெஞ்சினத்தார்
கோணுதநெஞ்சிற்குலாவிநிற்கின்றதுகூடிநின்று
சேணுடர்வாழ்த்துவதுத்தஞானசிதம்பரமே. (321)

சொல்வந்தவேதமுடிமுடிமீதிற்றலங்குவது
கல்வந்தநெஞ்சினர்காணற்கரியதுகாமமிலார்
நல்வந்தனைசெய்யநண்ணியபேறதுநன்றெனக்கே
செல்வந்தந்தாட்கொண்டதுத்தஞானசிதம்பரமே. (322)

ஏகாந்தமாகிவெளியாயிருந்ததிங்கென்னைமுன்னை
மோகாந்தகாரத்தின்மீட்டதென்னெஞ்சமுயங்கிரும்பின்
மாகாந்தமானதுவல்வினைதீர்த்தெனைவாழ்வித்தென்றன்
தேகாந்தநீக்கியதுத்தஞானசிதம்பரமே. (323)

கைம்மாறின்மை.

கடுத்தமனத்தையடக்கியொருகணமுமிருக்கமாட்டாதே
படுத்தசிறியேன்குற்றமெலாம்பொறுத்தென்னறிவைப்பலகாலுந்
தடுத்ததடையைத்தவிர்த்தென்றஞ்சாகாநலஞ்செய்தனியமுதங்
கொடுத்தகுருவேநின்றனக்குக்கைம்மாறேதுகொடுப்பேனே. (324)

சேட்டித்துலகச்சிறுநடையிற்பல்காற்புகுந்துதிரிந்துமயல்
நீட்டித்தலைந்தமனத்தையொருங்கியிடத்தடக்கிச்சன்மார்க்க

கோட்டிக்கியன் றருணங்களெலாங்கூடப்புரிந்துமெய்ந்நிலையைக்
காட்டிக்கொடுத்தாய்நின் றனக்குக்கைம்மாறேதுகொடுப்பேனே. 325

தோலைக்கருதித்தினந்தோறுஞ்சுழன் றுசுழன் றுமயங்குமந்த
வேலைக்கிசைந்தமனத்தைமுற்றுமடக்கிஞானமெய்ந்நெறியிற்
கோலைத்தொலைத்துக்கண்விளக்கங்கொடுத்துமேலும்வேகாத
காலைக்கொடுத்தாய்நின் றனக்குக்கைம்மாறேதுகொடுப்பேனே. (326)

அருணுடறியாமனக்குரங்கையடக்கத்தெரியாததனொடுசேர்ந்
திருணுடனைத்துஞ்சுழன் றுசுழன் றிளைத்துக்களைத்தேனெனக்கந்தோ
தெருணுடலகில்மரணமுறாத்திறந்தந்தழியாத்திருவளித்த
கருணைநிதியேநின் றனக்குக்கைம்மாறேதுகொடுப்பேனே. (327)

மாட்சியளிக்குஞ்சன்மார்க்கமரபில்மனத்தைச்செலுத்துதற்கோர்
சூட்சியறியாதுழன் றேனைச்சூழ்ச்சியறிவித்தருளரசி
ஞாட்சியடைவித்தருட்சோதியமுதமளித்தேயானந்தக்
காட்சிகொடுத்தாய்நின் றனக்குக்கைம்மாறேதுகொடுப்பேனே. (328)

போதலொழியாமனக்குரங்கின்போக்கையடக்கத்தெரியாது
நோதல்புரிந்தசிறியேனுக்கிரங்கிக்கருணைநோக்களித்துச்
சாதலெனுமோர்சங்கடத்தைத்தவிர்த்தென் னுயிரிற்றான்கலந்த
காதலரசேநின் றனக்குக்கைம்மாறேதுகொடுப்பேனே. (329)

திருவருட்பேறு.

விளங்குகின் றசிற்றம்பலத்தருணடம்விளைக்கின் றபெருவாழ்வே
களங்கமில்லதோருளநடுவிளங்கியகருத்தனேயடியேனை
விளம்பிகின் றதோர்விண்ணப்பந்திருச்செவிவியந்தருள்புரிந்தாயே
யுளங்கொளிவ்வடிவிம்மையேமந்திரவொளிவடிவாமாறே. (330)

சிறந்தபேரொளித்திருச்சிற்றம்பலத்திலேதிகழ்கின்றபெருவாழ்வே
துறந்தபேருளத்தருட்பெருஞ்சோதியேசுகப்பெருநிலையேநான்
மறந்திடாதுசெய்விண்ணப்பந்திருச்செவிமடுத்தருள்புரிந்தாயே
பிறந்தவிவ்வுடலென்றுமிங்கழிவுறாப்பெருமைபெற்றிடுமாறே. (331)

வயங்குகின்றசிற்றம்பலந்தன்னிலேவளர்கின்றபெருவாழ்வே
மயங்குறாதமெய்யறிவிலேவிளங்கியமாமணிவிளக்கேயிங்
கியங்குசிற்றடியேன்மொழிவிண்ணப்பமேற்றருள்புரிந்தாயே
நயங்கொளிவ்வுடலெற்றையுமழிவுறாத்தனிவடிவாமாறே. (332)

கையினெல்லிபோல்விளங்குசிற்றம்பலங்கலந்தருள்பெருவாழ்வே
மெய்யிலேவிளைந்தோங்கியபோகமேமெய்ப்பெரும்பொருளேநா
னையமற்றுரைத்திட்டவிண்ணப்பமேற்றளித்தனையிஞ்ஞான்றே
செய்யுமிவ்வுடலென்றுமிங்கழிவுறாச்சிவவடிவாமாறே. (333)

சற்குரு மணிமாலை

உருவமுமருவமுமுபயமுமுளதாயுளதிலதாயொளிரொருதனிமுதலே, கருவினிலெனக்கருள்கனிந்தளித்தவனேகண்ணுடையாய்பெருங்கடவுளர்பதியே, திருநிலைபெறவெனைவளர்க்கின்றபரமேசிவகுருதுரியத்திற்றெளியநுபவமே, தருவளர்பொழில்வடற்சபைநிறையொளியே தனிநடராஜவென்சற்குருமணியே. (334)

தத்துவமெசிந்நிலையிதுவிதுதானேசத்தியங்காணெனத்தனித்துரைத்தெனக்கே, யெத்துவந்தனைகளுநீக்கிமெய்ந்நிலைக்கேயேற்றிநானிறவாதவியலளித்தருளாற், சித்துவந்துலகங்களெவற்றினுமாடச்செய்வித்தபேரருட்சிவபரஞ்சுடரே, சத்துவநெறிதருவடலருட்கடலேதனிநடராஜவென்சற்குருமணியே. (335)

வேதத்தின்முடிமிசைவிளங்குமோர்விளக்கேமெய்ப்பொருளாகம
மியன்முடிச்சுடரே, நாதத்தின்முடிநடுநடமிடுமொளியேநவையறுமு
ளத்திடைநண்ணியநலமே,யேதத்தினின்றெனையெடுத்தருணிலைக்கே
யேற்றியகருணையென்னின்னுயிர்த்துணையே, தாதுற்றவுடம்பழியா
வகைபுரிந்தாய்தனிநடராஜவென்சற்குருமணியே. (336)

தான்பெற்ற பேறு.

மனமெனுமோர்பேய்க்குரங்குமடப்பயலேநீதான் மற்றவர்போ
லெனைநினைத்துமருட்டாதேகண்டாய், இனமுறவென்சொல்வழியே
யிருத்தியெனிற்சுகமாயிருந்திடுநீயென்சொல்வழியேற்றிலையானாலோ,
தினையளவுன்னதிகாரஞ்செல்லவொட்டேனுலகஞ்சிரிக்கவுனையடக்கி
டுவேன்றிருவருளாற்கணத்தே, நனவிலெனையறியாயோயாரெனவெண்
ணிருந்தாய்ஞானசபைத்தலைவனுக்குநல்லபிள்ளைநானே. (337)

பன்முகஞ்சேர்மனமெனுமோர்பரியாசப்பயலேபதையாதேசிதை
யாதேபார்த்திடமெல்லாம், கொன்முகங்கொண்டடிக்கடிபோய்க்கு
தியாதேயெனதுகுறிப்பின்வழிநின்றிடுநின்குதிப்புநடவாது, என்மு
னமோர்புன்முனைமேலிருந்தபனித்துளிநீயிம்மெனுமுன்னடக்கிடுவே
னென்னையறியாயோ, பின்முனெனநினையேல்காண்சிற்சபையினடிக்
கும்பெரியதனித்தலைவனுக்குப்பெரியபிள்ளைநானே. (338)

விரிந்தமனமெனுஞ்சிறியவிளையாட்டுப்பயலேவிரிந்துவிரிந்தலை
யாதேமெலியாதேவிடயம், புரிந்தநெறிபுரிந்தவமேபோகாதேபொறி
வாய்ப்புரையாதேவிரையாதேபுகுந்துமயங்காதே,தெரிந்துதெளிந்தொ
ருநிலையிற்சித்திரம்போலிருநீசிறிதசைந்தாலக்கணமேசிதைத்திடுவே
ன்கண்டாய், பரிந்தெனைநீயாரென்றுபார்த்தாய்சிற்சபைவாழ்பதிதனக்
கேயருட்பட்டம்பலித்தபிள்ளைநானே. (339)

அகங்காரமெனும்பொல்லா அடவாதிப்பயலேயுனக்கிக்காயெனக்கி
ன்றாயடுத்துமுடுக்கின்றாய்,செகங்காணத்தலைகாலுந்தெரியாமலலைந்து
திரிகின்றாய்நின்செபந்தான்சிறிதுநடவாது, இகங்காணவடங்குகநீயட
ங்காயேற்கணத்தே யிருந்தவிடந்தெரியாதே யெரிந்திடச்செய்திடுவே
ன், சுகங்காணவென்றனைநீயறியாயோநான்றான்சுத்தசிவசன்மார்க்கம்
பெற்றபிள்ளைகாணே. (340)

மாயனெனுமோர்சகச்சாலச்சிறுக்கியிதுகேளுன்வஞ்சகக்கூத்தெல்
லாமோர்மூட்டையெனக்கட்டி, ஈனமுறநின்றலைமேலேற்றெடுத்துக்
கொண்டுன்னேவல்புரிபெண்களொடேயிவ்விடம்விட்டேகிக், கான
டைந்துகருத்தடங்கிப் பிழைத்திடுநீயிலையேல் கணத்திலுனைமாய்ப்பே
னுன்கணத்திலொடுக்கண்டாய், ஏனெனைநீயறியாயோசிற்சபையினட
ஞ்செயிறைவனருட்பெருஞ்சோதிக்கினியபிள்ளைநானே. (341)

மாமாயையெனும்பெரியவஞ்சகிநீயிதுகேள்வரைந்தவுன்றன்பரி
சனப்பெண்வகைதொகைகளுடனே, போமாறுன்செயலனைத்தும்பூர
ணமாக்கொண்டுபோனவழிதெரியாதேபோய்ப்பிழைநீயிலையேல், சா
மாறுன்றனையின்றேசாய்த்திடுவேனிதுதான்சத்தியமென்றெண்ணுதி
யென்றன்னையறியாயோ, ஆமாறுசிற்சபையிலருணடம்புரிவாரருள
முதுண்டருணிலைமேலமர்ந்தபிள்ளைநானே. (342)

கன்மமெனும்பெருஞ்சிலுதக்கடுங்கலகப்பயலேகங்குகரைகாணா
தகடல்போலேவினைகள், நன்மையொடுதீமையெனப்பலவிதப்பங்காட்
டிநடத்தினைநின்னடத்தையெல்லாஞ்சிறிதுநடவாது, என்முனிருந்த
னையெனினீயுழிந்திடுவாயசனிக்கணத்தே நின்னினத்தோடேகுகநீ
யிலையேல், இன்மையுறமாய்த்திடுவேனென்னையறியாயோவெல்லாஞ்
செய்வல்லவனுக்கினியபிள்ளைநானே. (343)

எத்துணையுங்காட்டாதவாணவமென்றிடுமோரிருட்டறைக்கோரதி
காரக்குருட்டுப்பயலே, இத்தனைநாட்பிடித்ததுனைக்கண்டேதுரத்தி

டவேயின்னுமரைக்கணந்தரியேனிக்கணத்தேகினது, பொத்தியசற்
றத்துடனேபோய்விடுதியிலையேல்பூரணமெய்யருளொளியாற்பொன்
றுவிப்பேனினையே, சத்தியஞ்சொன்னேனெனைநீயறியாயோஞான
சபைத்தலைவன்றருதலைமைத்தனிப்பிள்ளைநானே. (344)

பேசுதிரோதாயியெனும்பெண்மடவாயிதுகேள்பின்முனறியா
தெனைநீயென்முன்மறைக்காதே, வேசறமாமலவிரவுமுழுதும்விடிந்த
துகாண்வீசுமருட்பெருஞ்சோதிவிளங்குகின்றதறிநீ, ஏசறுநின்செய
லினைத்துமென்னளவினடவாதிதையறிந்து விரைந்தெனைவிட்டேகுக
விக்கணத்தே, மாசறுமென்சரிதமொன்றுந்தெரிந்திலையோவெல்லாம்
வல்லவொருசித்தருக்கேநல்லபிள்ளைநானே. (345)

தூக்கமெனுங்கடைப்பயலேசோம்பேறியிதுகேள்துணிந்தனது
சுற்றமொடுசொல்லுமரைக்கணத்தே, தூக்குபெருங்காட்டகத்தேயே
குகநீயிருந்தாலப்பாதுன்றலைபோகுஞ்சத்தியமீதறிவாய், ஏக்கமெலாந்
தவிர்த்துவிட்டேனூக்கமெலாம்பெற்றேனின்பமுறுகின்றேனீயென்
னையடையாதே, போக்கில்விரைந்தோடுகநீபொற்சபைசிற்சபைவாழ்
பூரணர்க்கிங்கன்பானபொருளெனவறிந்தே. (346)

பயமெனுமோர்கொடும்பாவிப்பயலேநீயிதுகேள்பற்றறவென்ற
னைவிடுத்துப்பணிக்கடல்வீழ்ந்தொளிப்பாய், நயவினுரைத்தேனின்னு
மிருத்தியெனிலுன்றன்றலைதனக்குத்தீம்புவருந்தலைமட்டோநினது,
செயலுறுமுன்னுடம்பழியுஞ்சுற்றமெலாமிறக்குந்தீர்ந்ததினியில்லையெ
ன்றேதிருவார்த்தைபிறக்கும், அயலிடைசேர்ந்தோடுகநீயென்னையறி
யாயோவம்பலத்தென்னப்பனருணம்புபிள்ளைநானே. (347)

சோபமெனும்புலைப்பயலேகாமவலைப்பயலேகொடுமோகக்கடை
ப்பயலேதுரும்புமதப்பயலே, தாபவுலோபப்பயலேமாற்சரியப்பயலே
நயவுடனிங்கிசைக்கின்றேன்றாழ்ந்திருக்காதீர்காண், நீபமெலாங்கடந்
திருள்சேர்நிலஞ்சாரப்போவீர்சிறிதுபொழுதிருந்தாலுந்திண்ணமிங்கே

யழிவீர், சாபமுறுமுன்னமறிந்தோடுமினேனென்னைத்தானறியீர்தனி
த்தலைவன்றலைப்பிள்ளைநானே. (348)

பசியெனுமோர்பெரும்பாவிப்பயலேதுன்பெனுமோர்படுபாவிப்ப
யலேயாபத்தெனும்பொய்ப்பயலே, வசியவத்தைக்கடைப்பயலேதடை
ப்பயலேவிடராம்வன்பயலேநீவிரெலாமென்புடைநில்லாதீர், நசியவும
க்குளமுளதோவிக்கணத்தேநீவிர்கடந்துவிரைந்தோடுமினோடறியா
வணத்தே, கசியுமனத்தெனையறியீர்சிற்சபையில்விளங்குங்கடவுள்மகி
ழ்ந்தளித்ததனிக்கதிர்ப்பிள்ளைநானே. (349)

மரணமெனும்பெருந்திருட்டுமாபாவிப்பயலேவையகமும்வானக
முமற்றகமுங்கடந்தே, பரணமுறுபேரிருட்டுப்பெருநிலமுந்தாண்டிப்
பசையறநீயொழிந்திடுகவிங்கிருந்தாயெனிலோ, இரணமுறவுனைமுழு
துமடித்திடுவேனிதுநா னென்னுடையா னருளாணையென்குருமேலா
ணை, அரனறிமென்றனைவிடுத்தேயோடுகநீநான்றானருட்பெருஞ்சோ
திப்பதியையடைந்தபிள்ளைகாணே. (350)

உய்வகை கூறல்.

ஆதியந்தமுமில்லதோரம்பலத்தாடும்
சோதிதன்னையேநினைமின்கள்சுகம்பெறவிழைவீர்
நீதிகொண்டுரைத்தேனிதுநீவிர்மேலேயும்
வீதிமற்றுறையவீதிகள்கீழ்ச்செலும்வீதி. (351)

துரியமேற்பரவெளியிலேசகநடம்புரியும்
பெரியதோரருட்சோதியைப்பெறுதலேயெவைக்கும்
அரியபேறுமற்றவையெலாமெளியவேயறிமின்
உரியவிம்மொழிமறைமொழிசத்தியமுலகீர். (352)

ஆகமாந்தமும்வேதத்தினந்தமுமறையும்
பாகமாம்பரவெளிநடம்பரவுவீருலகீர்
மோகமாந்தருக்குரைத்திலேவிதுசுகமுன்னும்
யோகமாந்தர்க்குக்காலமுண்டாகவேயுரைத்தேன். (353)

உறுதி கூறல்.

வட்டிமேல்வட்டிகொள்மார்க்கத்திலின்றீர்வட்டியைவளர்க்கின்ற மார்க்கத்தையறியீர், பெட்டிமேல்பெட்டிவைத்தாள்கின்றீர்வயிற்றுப் பெட்டியைநிரப்பிக்கொண்டொட்டியுள்ளிருந்தீர், பட்டினிகிடப்பாரைப்பார்க்கவுநேரீர்பழங்கஞ்சியாயினும்வழங்கவுநினையீர், எட்டிபோல் வாழ்கின்றீர்கொட்டிபோற்கிளைத்தீ ரெத்துணைகொள்கின்றீர்பித்துலகீரே. (354)

சாதியிலேமதங்களிலேசமயநெறிகளிலேசாத்திரச்சந்தடிகளிலே கோத்திரச்சண்டையிலே, ஆதியிலேயபிமானித்தலைகின்றவுலகீரலைந் தலைந்துவீணேநீரழிதலழகலவே, நீதியிலேசன்மார்க்கநிலைதனிலேநா ணிருத்தவிடுந்தனித்தலைவரொருத்தரவர்தாமே, வீதியிலேயருட்சோதிவிளையாடல்புரியமேவுகின்றதருணமிதுகூவுகின்றேனுமையே.

வையகத்தீர்வானகத்தீர்மற்றகத்தீர்நுமதுவாழ்க்கையெலாம்வாழ்க்கையெனமதித்துமயங்காதீர், மையகத்தேயுறுமரணவாதனையைத் தவிர்த்தவாழ்க்கையதேவாழ்க்கையெனமதித்ததனைப்பெறவே, மெய்யகத்தேவிரும்பியிங்கேவந்திடுமினெனதுமெய்ப்பொருளாந்தனித்தந்தையைத்தருணந்தனிலே, செய்யகத்தேவளர்ஞானசித்திபுரந்தனிலேசித்தாடல்புரிகின்றார்திண்ணமிதுதானே. (356)

சுத்தசிவநிலை.

சத்தியஞ்செய்கின்றேன்சகத்தீரறிமின்கள்
சித்தியெலாம்வல்லசிவமொன்றே-நித்தியமென்
றெண்ணுமெண்ணத்தாலேநம்மெண்ணமெலாங்கைகூடும்
நண்ணுமின்பத்தேனென்றுநான். (357)

சாத்திரங்களெல்லாந்தடுமாற்றஞ்சொல்வதன்றி
நேத்திரங்கள்போற்காட்டாவே-நேத்திரங்கள்
சிற்றம்பலவன்றிருவருட்சீர்வண்ணமென்றே
உற்றிங்கறிந்தேனுவந்து. (358)

வேதாகமங்களென்றுவீண்வாதமாடுகின்றீர்
வேதாகமத்தின்விளைவறியீர்-சூதாகச்
சொன்னவலாலுண்மைவெளிதோன்றவுரைத்தவிலை
என்னபயனோவிவை. (359)

மார்க்கமெலாமொன்றாகுமாநிலத்தீர்வாய்மையிது
தூக்கமெலாநீக்கித்துணிந்துளத்தே-யேக்கம்விட்டுச்
சன்மார்க்கசங்கத்தைச்சார்ந்திடுமின்சத்தியநீர்
நன்மார்க்கஞ்சேர்வீரிந்நாள். (360)

ஏமாந்திருக்குமெமரங்காளிவ்வுலகில்
சாமாந்தராகாத்தரம்பெறவே-காமாந்த
காரத்தைவிட்டுக்கருதுமினோவிச்சருணம்
நேரத்தைச்சேர்வீர்நிசம். (361)

ஞானசரியை.

தீமையெலாநன்மையென்றேதிருவுளங்கொண்டருளிச்சிறியே
கருளமுதத்தெளிவளித்ததிறத்தை, ஆமயந்தீர்த்தியற்கையின்ப

வனுபவமேமயமாயம்பலத்தேவிளங்குகின்றவருட்பெருஞ்சோதியை யோர், ஓமயவான்வடிவுடையாருள்ளகத்தேநிறைந்தவொருபொருளை ப்பெருங்கருணையுடையபெரும்பதியை, நாமருவியிறவாதநலம்பெறலா முலகீர்நல்லவொருதருணமிதுவல்லைவம்மினீரே. (362)

நிந்தையிலார்நெஞ்சகத்தேநிறைந்தபெருந்தகையைநிலையனைத்து ங்காட்டியருணிலையளித்தகுருவை, எந்தையையென்றனித்தாயையெ ன்னிருகண்மணியையென்னுயிரையென்னுணர்வையென்னறிவுள்ள றிவைச், சிந்தையிலேதனித்தினிக்குந்தெள்ளமுதையனைத்துஞ்செய்ய வல்லதனித்தலைமைச்சிவபதியையுலகீர், முந்தைமலவிருட்டொழியமு ன்னுமினோகாரணமுடுக்கொழித்துக்கடைமரணநடுக்கொழித்துமுயன் றே. (363)

சாருலகவாதனையைத்தவிர்த்தவருள்ளகத்தேசத்தியமாயமர்ந்தரு ளுமுத்தமசற்குருவை, நேருறவேயெவராலுங்கண்டுகொளற்கரிதாம் நித்தியவான்பொருளையெலாநிலைகளுந்தானாகி, வருறவேவிளங்குகின் றவியற்கையுண்மைதன்னையெல்லாஞ்செய்வல்லபத்தையெனக்களித் தபதியை, ஒருறவென்றடைந்துலகீர்போற்றிமகிழ்ந்திடுமினுள்ளமெ லாங்கனிந்துருகியுள்ளபடிநினைந்தே. (364)

பதிநிச்சயம்.

கிழக்குவெளுத்ததுகருணையருட்சோதியுதயங்கிடைத்ததெனது ளக்கமலங்கிளர்ந்ததெனதகத்தே, சழக்குவெளுத்ததுசாதியாசிரமாசா ரஞ்சமயமதாசாரமெனச்சண்டையிட்டகலக, வழக்குவெளுத்ததுபல வாம்பொய்ந்நூல்கற்றவர்தம்மனம்வெளுத்துவாய்வெளுத்துவாயுறவா யித்த, முழக்குவெளுத்ததுசிவமேபொருளெனுஞ்சன்மார்க்கமுழுநெ றிவிற்பரநாதமுரசுமுழங்கியதே. (365)

உழக்கறியீரனப்பதற்கோருளவறியீருலகேரறியீர்போறியீருண்மையொன் றுமறியீர், மிழக்கறியீர்மேற்கறியீரம்பலத்தேமாயைக்கேதமறநடிக்கின்றபாதமறிவீரோ, வழக்கறிவீர்சண்டையிட்டேவம்பளக்கவறிவீர்வடிக்குமுன்னேசோறெடுத்துவயிற்றடைக்கவறிவீர், குழைக்கறியேபிழக்கறியேகூட்டுவர்க்கக்கறியேகுழம்பேசாறேயெனவுங்கூறவறிவீரே. (366)

இணைக்கறியீரிதமறியீரிருந்நிலையறியீரிடமறியீர்தடமறியீரிவ்வுடம்பையெடுத்த, கணக்கறியீர்வழக்கறியீரம்பலத்தேமாயைக்கலக்கமறநடிக்கின்றநிலக்கமறிவீரோ, பிணக்கறிவீர்பிரட்டறிவீர்பிழைசெயவேயறிவீர்பேருணவைப்பெருவயிற்றுப்புலத்திலிடவறிவீர்,மணக்கறியேபிணக்கறியேவறுப்பேயோர்பொரிப்பேவடைக்குழம்பேசாறேயென்றடைக்கவறிவீரே. (367)

கடுகோட்டுக்கறிக்கிடுகேதாளிக்கவெனக்கழறிக்களிக்கின்ற
சுடுகோட்டுப்பிணங்காள்சுகமனைத்துங்கணச்சுகமேசொல்லக்கேண்மி
முடுகோட்டுக்கூற்றுவருஞ்சாவீராற்சாவதற்குமுன்னேநீவிர் [ன்
இடுகோட்டுப்பிணங்கண்டாலேத்துமினேன்னவைமயுமிவ்வாறிடுகவெ
[ரே (368)

வாதுபேசியமனிதர்காளொருவார்த்தைகேண்மின்கள்வந்துநம்
போதுபோவதன்முன்னரேயருட்பொதுவிலேநடம்போற்றுவீர்
தீதுபேசினிசென்றிடாதமைத்திருவுளங்கொளுங்காண்மினேன்
சூதுபேசிலனன்மைசொல்கின்றேன்சற்றுமென்பதுபற்றியே. (369)

ஞானசம்பந்தர் ஸ்தோத்திரம்.

ஓங்காரவணைமீதுகாளிருந்ததருணமுவுஞ்சேனதுமணவாளர்சிவந்தவடிவகன்றே, ஈங்காரப்பளிக்குவடிவெடுத்தெதிரேகின்றுரிருந்தருள்

கவெனவெழுந்தேனெழுந்திருப்பதென்னீ, ஆங்காரமொழியென்று
றொழிந்திருந்தேனப்போதவர்நானேனானவரோவறிந்திலன்முன்குறிப்
பை, ஓங்காரவிரண்டுருவுமொன்றானோமாங்கேவுறைந்தவநுபவந்தோ
ழிநிறைந்தபெருவெளியே. (370)

திருவண்ணப்பதிகம்.

எழுவகைப்பிறவிகளுளெப்பிறவியெய்தினுமெய்துகபிறப்பி
லினிநா னெய்தாமையெய்தினுமெய்திடுகவிருமையினுமின்பமெய்
தினுமெய்துக, வழுவகைத்துன்பமேவந்திடினும்வருகமிகுவாழ்வுவந்தி
டினும்வருக, வறுமைவருகினும்வருகமதிவரினும்வருகவவமதிவரினு
ம்வருகவுயர்வோ, டிழிவகைத்துலகின்மற்றெதுவரினும்வருகவலதெ
துபோகினும்போகநின், னிணையடிகண்மறவாதமனமொன்றுமாத்திர
மெனக்கடைதல்வேண்டுமரசே, கழிவகைப்பவரோகநீக்குநல்லருளெ
னுங்கதிமருந்துதவுநிதியே, கனகவம்பலநாதகருணையங்கணபோதகம
லகுஞ்சிதபாதனே (371)

சந்ததமெனக்குமகிழ்தந்தைநீயுண்டுநின் றன்னிடத்தேமவல்லித்,
தாயுண்டுநின்னடியரென்னுந்தமருண்டுசாந்தமெனுநேயருண்டு, புந்
திகொணிராசையாமனைவியுண்டறிவெனும்புதல்வனுண்டிரவுபகலும்,
போனவிடமுண் டருட்பொருளுமுண் டானந்த போகபோக்கியமுண்
டு, வந்தனைசெய்நீறெனுங்கவசமுண் டக்கமாமணியுமுண் டஞ்செழுத்
தா, மந்திரப்படையுண்டுசிவகதியெனும்பெரியவாழ்வுண்டுதாழ்வுமுண்
டோ, கந்தமிகுகொன்றையொடுகங்கைவளர்செஞ்சடைக்கடவுளேகரு
ணைமலையே, கனகவம்பலநாதகருணையங்கணபோதகமலகுஞ்சிதபாத
னே. (372)

ஆளுடையவடிகளருண்மாலை.

வான்கலந்தமாணிக்கவாசகநின் வாசகத்தை
நான்கலந்துபாடுங்கானற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்துபால்கலந்துசெழுங்கனித்தீஞ்சுவைகலந்தென்
னூன்கலந்துவுயிர்கலந்துவுவட்டாமலினிப்பதுவே. (373)

பெண்சுமந்தபாகப்பெருமானொருமாமே
லெண்சுமந்தசேவகன்போலெய்தியதும்வைகைநதி
மண்சுமந்துநின்றதுமோர்மாறன்பிரம்படியாற்
புண்சுமந்துகொண்டதுநின்பொருட்டன்றோபுண்ணியனே. (374)

மெய்யருள்வியப்பு.

இராகம்-அடாணா, ரூபகதாளம்

பல்லவி

எனக்குமுனக்குமிசைந்தபொருத்தமென்னபொருத்தமோ
இந்தப்பொருத்தமுலகில்பிறருக்கெய்தும்பொருத்தமோ.

சரணங்கள்

உன்பேரருளைநினைக்குந்தோறுமுடம்புபொடிக்குதே
உண்டபசிதீர்ந்தாற்போற்காதல்மிகவுஞ்சடிக்குதே
அன்பேயமையுமென்றபெரியர்வார்த்தைபோயிற்றே
யன்பேரணுவுமில்லாவெனக்கிங்கருளவாயிற்றே. (எனக்கு)

நினைக்கநினைக்கத்தித்திப்பெனதுநினைவிற்கொடுக்குதே
நின்பாலன்றிப்பிறர்பாற்செல்லநெஞ்சநடுக்குதே
எனைத்துன்பொழித்தாட்கொண்டநின்னையன்னையென்பனோ
வெந்தாயன்பிலேனின்னடிக்குமுன்னையென்பனோ. (எனக்கு)

நெடுமாண்முயன் றங்காண்டற்கரியநிலையைக்காட்டியே
நிறைந்தென்னகத்தும்புறத்துஞ்சூழ்ந்தாயொளியைநாட்டியே
நடுநாடியநின்னருளுக்கென்மேலென்னநாட்டமோ
நாய்க்குத்தவிசிட்டனைநின்றனக்கிங்கிதுவோராட்டமோ. (என)

பூதவெளியினடமும்பகுதிவெளியினுட்டமும்
போகவெளியிற்கூத்தும்யோகவெளியுளாட்டமும்
நாதவெளியிற்குனிப்பும்பரமநாதநடமுமே
நன்றுகாட்டிக்கொடுத்தயென்றுநலியாத்திடமுமே. (எனக்கு)

எட்டுமிரண்டுமிதுவென்றெனக்குச்சுட்டிக்காட்டியே
யெட்டாநிலையிலிருக்கப்புரிந்தாயிட்டுக்கூட்டியே
துட்டவினையைத்தீர்த்துஞானச்சுடருள்ளேற்றியே
தூண்டாதென்றும்விளங்கவைத்தாயுண்மைசாற்றியே. (என)

எண்ணுந்தோறுமெண்ணுந்தோறுமென்னுளினிக்குதே
யிறைவநின்னைப்பாடநாவிலமுதஞ்சனிக்குதே
கண்ணுங்கருத்துநின்பாலன்றிப்பிறர்பாற்செல்லுமோ
கண்டேனுன்னையினிமேலென்னைமாயைவெல்லுமோ. (என)

விந்துநாதவெளியுங்கடந்துமேலுநீளுதே
மேலைவெளியுங்கடந்துன்னடியாராணையாளுதே
அந்தோவுனதுபெருமையீதுமறிவாரில்லையே
யறிந்தாருலகிலின்பவடிவமாவரொல்லையே. (எனக்கு)

சாதல்பிறத்தலென்னுமவத்தைதவிர்த்துக்காலையே
தனித்துன்னருளினமுதம்புகட்டிக்கொடுத்தாய்மேலையே
ஓதவுணர்தலுவத்தலெனக்குநின்பொற்பாதமே
யுலகவிடயக்காட்டிற்செல்லாதெனதுபோதமே. (எனக்கு)

தாங்கல்விடுதலிரண்டுமெனக்குச்சமமதாயிற்றே
சகத்தில்வழங்குமாயைவழக்குத்தவிர்த்துபோயிற்றே

யெக்கல்சலித்தலிரண்டுமின்றியிளைப்புநீக்கினே
    னெந்தாய்கருணையமுதுண்டின்பப்பொருப்பிலோங்கினேன். ()
உறவுபகையென்றிரண்டுமெனக்கிங்கொன்றதாயிற்றே
    யொன்றென்றிரண்டென்றனறம்பேதமோடிப்போயிற்றே
மறைவுநிலையென்றென்னைஉலித்தவலிப்புநீக்கினேன்
    மன்றிற்பரமானந்தநடங்கண்டின்பமோங்கினேன். (எனக்கு)

௰௫௯௧.

இராகம் - காம்போதி, அடதாளம்.

பல்லவி.

வாரீர்சிதம்பரவல்லிசிவகாம
    வல்லிமணாளரேவாரீர்
    மணிமன்றவாணரேவாரீர். (வாரீர்)

சரணங்கள்.

ஆகமவேதமனேகமுகங்கொண்
    டருச்சிக்கும்பாதரேவாரீர்
    ஆருயிர்நாதரேவாரீர். (வாரீர்)
உள்ளக்கருத்தைநான் வள்ளற்குரைப்பதென்
    னுள்ளத்திருந்தீரேவாரீர்
    விள்ளற்கரியீரேவாரீர். (வாரீர்)
உன்னுதோறுன்னுதோருள்ளேயினிக்கின்ற
    உத்தமரேயிங்குவாரீர்
    உற்றதுணையானீர்வாரீர். (வாரீர்)
மைமையெழுத்தினுள்ளமைமையெழுத்துண்டென்
    றோமையறிவித்தீர்வாரீர்
    சேமஞ்செறிவித்தீர்வாரீர். (வாரீர்)

எட்டுமிரண்டுமென்றிட்டுவழங்குத
லெட்டும்படிசெய்தீர்வாரீர்
எட்டுருவாயினீர்வாரீர். (வாரீர்)

எண்ணமெல்லாமுமதெண்ணமல்லால்வேறோ
ரெண்ணமெனக்கில்லைவாரீர்
வண்ணமளிக்கின்றீர்வாரீர். (வாரீர்)

ஏகாந்தநன்னிலையோகாந்தத்துள்ளதென்
றேகாந்தஞ்சொல்லினீர்வாரீர்
தேகாந்தமல்லீரேவாரீர். (வாரீர்)

ஏகாதகல்விதான்சாகாதகல்வியென்
றேகாதலாற்சொன்னீர்வாரீர்
வேகாதகாலினீர்வாரீர். (வாரீர்)

ஏசாததந்திரம்பேசாதமந்திர
மீசானமேலென்றீர்வாரீர்
ஆசாதியில்லீரேவாரீர். (வாரீர்)

ஐந்துமலங்களும்வெந்துவிழவெழுத்
தைந்துஞ்செய்யுமென்றீர்வாரீர்
இந்துசிகாமணிவாரீர். (வாரீர்)

ஒத்தவிடத்தனில்நித்திரைசெய்யென்றி
ரொத்தவிடங்காட்டவாரீர்
சித்தசிகாமணிவாரீர். (வாரீர்)

ஓங்காரநாடகம்பாங்காகச்செய்கின்ற
வோங்காரநாடரேவாரீர்
ஆங்காரநீக்கினீர்வாரீர். (வாரீர்)

ஓராதலினைப்பாரதிருநினைக்
கோராவகையென்றீர்வாரீர்
பேராநிலைதந்தீர்வாரீர். (வாரீர்)

ஓமென்பதற்குமுன்னுமென்றுரைத்துடன்
ஊமென்றுகாட்டினீர்வாரீர்
நாமென்றுகாட்டினீர்வாரீர். (வாரீர்)

கீர்த்தனைகள்.

இராகம். கல்யாணி - அடதாளம்.

பல்லவி.

இதுநல்லதருணம் — அருள்செய்ய
இதுநல்லதருணம்.

அநுபல்லவி.

பொதுநல்லநடம்வல்லபுண்ணியரேகேளும்
பொய்யேதுஞ்சொல்கிலேன்மெய்யேபுகல்கின்றேன். (இது)

சரணங்கள்.

மதித்சமயமதவழக்கெல்லா மாய்ந்தது
வருணாச்சிரமமெனுமயக்கமுஞ் சாய்ந்தது
கொதித்தலோகாசாரக்கொதிப்பெல்லா மொ[illegible]
கொலையுங்களவுமற்றைப்புலை மழிந்தது. (இது)

குறித்தவேதாகம[illegible] மடங்கிற்று
கொதி[illegible]முருட்டுக்குரங்கு முடங்கிற்று
வெறித்தவெவ்வினைகளும்வெந்து குலைந்தது
விந்தைசெய்கொடுமாயைச்சந்தையுங் கலைந்தது. (இது)

தோப்புங்காமமுங்குடிகெட்டுப் போயிற்று
கொடியவோரங்காரம்பொடிப்பொடி யாயிற்று

தாபமுஞ்சோபமுந்தான்றனே செற்றது
தத்துவமெல்லாமென்றன்வச நிற்றது. (இது)
கரையாவெனதுமனக்கல்லுங் கரைந்தது
கலந்துகொளற்கென்கருத்தும் விரைந்தது
புரையாநிலையிலென்புத்தியுந் தங்கிற்று
பொய்படாக்காதல்ததும்பிமேற் பொங்கிற்று
இதுநல்லதருணம் - அருள்செய்ய
இதுநல்லதருணம்.

பிரபஞ்ச வெற்றி.

அருட்சோதியானேனென்றறையப்பா முரசு
அருளாட்சிபெற்றேனென்றறையப்பா முரசு
மருட்சார்புதீர்ந்தேனென்றறையப்பா முரசு
மரணந்தவிர்ந்தேனென்றறையப்பா முரசு.

மங்களம்.

புங்கவர் புகழுமாதங் கமுகத்திக
ழெங்கள் கணேசாந் துங்கற்கு - மங்களம்.
போதந்திகழ்பர நாதத்தொளிநின்ற
கீதாஞ்சண்முக நாதற்கு - மங்களம்.
பூசைசெய்வாருள மாசைசெய்வார்தில்லை
யீசரெமது நடராஜற்கு - மங்களம்.
புண்ணியராகிய கெண்ணியராய்த்தவம்
பண்ணியபத்தர்க்கு முத்தர்க்கு - மங்களம்.

திருச்சிற்றம்பலம்.

பிரதிசயாகத்தத் திரட்டு முற்றுப்பெற்றது.

சிவமயம்.

திருப்போரூர்ச் சந்நிதிமுறை

குறுங்கழி நெடில் விருத்தம்.

அருட்கட றதும்பிக் கவுட்செவிச் சார லருவிபாய்ந் தெழுதரு மசலம், விருப்புற மருப்பிற் கடகமொன் றெடுத்து வீறுகிம் புரியெனத் தரித்தோய், சுருப்பினந் தொடருங் கதுப்பினார் மயக்கிற் றுவளாத் தெனையினி யளிப்பாய், பொருப்பணை புயத்தோய் மயிற்பரி யுகைத்தோய் போரிவா ழாறுமா முகனே. (1)

அறிவுதன் னிலைவிற் கலந்துறு போதிலரும்பர முயிர்சகமுனவாம்
பிறிவிலவ் வறிவங் கிலைவிலை யகன்றாற் பேதாபே தங்களொன் றின்றி
நெறியுறத் தானே தன்னிடத் திருக்குநிச்சயமென் றெனக்கிசைத்தான்
பொறிமறு மார்பண் மருகவேளெனையாள் போரிவா ழாறுமா முகனே. 2

கிளைவறி வெனவிவ் விரண்டினை விரித்துங் கைத்தா றுஞ்சருதியீண் டிவற்றி, னினைவிரண் டாகும் பரனினை வெனவு மிலவுறு முயிர்நினை வெனவும், புனைபரந் நினைவு சகமுயிர் நினைவுபுரிந் தனைதப்பிடிக்குமென் றிசைத்தான், புனையரும் பாரஞ்சொரிந் தருகெய்தற் போரிவா ழாறுமா முகனே.

பரனது முகத்திற் குலகுபொய்ப் பீலன் படித்துணர்க்கி றுக்கமெய்ம்மை
திரமுறு சாட்சி தானெனச் சீவன் றெரிக்கிடிற் பரன்மன மேவத்தாம்
விரவியசகமப் போதுபொய் யாயிவிளங்குறு மெனுந் றனைத்திசைத்தான்
புரமெரி செய்தோன் றுவந்துபெற் றெடுத்த போரிவா ழாறுமா முகனே. 4

அறிவினை நோக்கி லுயிர்வயமா தமசமனஞ்சகத்தை யுயிர்தான்
பிறிபடநோக்கின் மனத்தினின் வயமாம் பிறப்புமீ தின்வயப்படாது
நெறியுறு மறிவின் வெகப்பா லிக்கினினைப் பருங்கதியுமீ தென்றான்
பொறிமயிலே றுஞ்சேவக வெனையாள் போரிவா ழாறுமா முகனே. (5)

வதொருங் கினைவிக் கெழுமதுமனம் மீதெனவருமி தன் மூலம்
தீதுறு மூலவகங்கார மீதியாமென் றெழுஞ் செப்புமிங் கிவைக்கு
மூதிருளவித்தை மூலமீ தகன்றன் மெய்யறிவெனவெனக் கிசைத்தா
போர்தகமார்க்கும்புகன் றமெய்க்குரவன் போரிவா ழாறுமா முகனே. [ன்

சச்சிதானந்தமெனும்பெயர்மூன்றிற்றழுவுமாவரணமூன்றிவைநா
நிச்சயவறிவாற்சமாதிஞானத்தாணிகழ்வுறுசகசஞானத்தா [தாஎ
லச்சமின்றகலுமிவற்றினையறியென்றருட்கடனிறைத்தெனையளித்
பொய்ச்சழக்ககன்றமனத்தினார்நினைக்கும்போரிவாழாறுமாமுகனே.

சுருதியின்றுணிவானினைவுகொண்டுலகந்துச்சமென்றுணர்தனி
ச்சயமாங், கருதுறுநினைவையடக்கியிவ்வுலகங்காணலென்றுணர்ந்திட
ல்சமாதி, யிருவகையாய்முன்னுரைத்தவையின்றியிலங்கறிவுருவமாயி
ருத்தல், பொருவறுசகசஞானமென்றிசைத்தான்போரிவாழாறுமா
முகனே. (8)

நிச்சயஞானஞ்சமாதிஞானங்கணிராசையார்மனத்தினிற்கலங்கா
தெச்சமென்றிருக்குமாசையார்மனத்திலிரண்டுஞானங்களுங்கலங்கு
நச்சுதல்வெருவியின்றியசகசஞானிகணசையுளர்போலப்
பொய்ச்சகத்துறினுங்கலங்குறாரென்றான்போரிவாழாறுமாமுகனே.

சித்தொருநான்கிற்பிரமக்கூடத்தன்செப்புமாயாரகிதங்கண்
மத்தமிலீசனுயிர்கடாமாயாசகிதங்கள்வழுத்துமிவ்வீசன்
சத்தெனுந்தன்னைமறப்பிலாமையினுற்றதகதிதேடிலன்சீவன்
பொய்த்தலில்வீடுதேடுமென்றிசைத்தான்போரிவாழாறுமாமுகனே.

ஒருநாமமியாதெனத்தசுத்தமுயர்ந்தாளசுத்தவாதனைக
ளாதியவிரோதமனுக்கிரகித்தாலாங்கைவாக்கியக்கவாதனைக [ன்
ளேதமில்காட்சிகாண்பவனென்றவிவற்றுளோர்வகுப்பினுன்மனத்தி
போதமினினைவைப்பகுத்தடக்கென்றான்போரிவாழாறுமாமுகனே.

கயிலைவாழரசுதந்தகற்பகக்கனவரசுரைகொடிக்கணிதா
வியல்புறுகற்புக்கன்னிமாரிருவரிருமருங்குறைவடமேரு
வயிலுடன்மயிலுங்கோழியுமாங்மழநூடன்படைத்தமெய்க்கடவுள்
புயலினஞ்சுரந்துபொழிதருசீதிப்போரிவாழாறுமாமுகனே. (12)

தடவரைப்பிறந்தநதியராச்சென்றுதண்கடற்படமுடிமீது
சுடர்விரியுதயகதிர்மணிவிளக்குஞ்சுந்தரப்போரிவேலிறையே
மடமையின்றடியேனுனதருளமிர்தவாரியின்மூழ்கிடநினையாய்
சூடமுனிசிவந்தசடைமுடியிவர்ந்தகுரவணிசரணவாரிசனே. (13)

முற்றுப்பெற்றது.